த. கோவேந்தன்



# வருங்கால மானிட சமுதாயம்

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# வருங்கால மானிட சமுதாயம்

த. கோவேந்தன்


விக்னேஷ் வெளியீடு

(இரண்டாவது மாடி),
19, நியூ காலனி, ஜோசியர் தெரு,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

## நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| பெயர் | : | வருங்கால மானிட சமுதாயம் |
| ஆசிரியர் | : | த. கோவேந்தன் |
| உரிமை | : | ஆசிரியர்க்கு |
| மொழி | : | தமிழ் |
| நூல் வகை | : | சமுதாய கட்டுரை |
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| பதிப்பாண்டு | : | 2003 |
| தாள் | : | 14–2 கி.கி. வெள்ளைத்தாள் |
| நூலின் அளவு | : | டெம்மி (14 x 21.5 செ.மீ) |
| எழுத்து | : | 12 புள்ளி |
| பக்கம் | : | 104 |
| வெளியீடு | : | **விக்னேஷ் வெளியீடு**<br>(இரண்டாவது மாடி),<br>9, நியூ காலனி, சோசியர் தெரு,<br>நுங்கம்பாக்கம், சென்னை – 34. |
| அச்சகம் | : | ஜம்மு ஆப்செட்<br>சென்னை – 5. |

**விலை : ரூபா. 40.00**

# வருங்காலம்

இலக்கணத்திலும் வரலாற்றிலும் வேண்டுமானால் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்று பகுத்துப் பார்க்கலாம். ஆனால் வாழ்க்கையில் நிகழ்காலம் மட்டுமே உள்ளது. ஒவ்வொரு கணமும் நாழிகையும் பொழுதும் நாளும் நிகழ்காலத்தை நிறுத்துவதாகும். எனவே கடந்த காலம் என்கிறோம். நாளை என்பது நம் கையில் இல்லை எனவே எதிர் காலம் என்கிறோம்.

காலம் ஒரு பேராறு. அது ஓடிக் கொண்டே இருக்கிறது. வாழ்வும் அப்படியே. சிறு புல் முதல் மூதாலம்வரை, சின்னஞ்சிறு புழு முதல் பென்னம் பெரிய யானை வரை ஒவ்வொன்றுக்கும் முக்காலமும் உண்டு. ஆனால் அவை எவையும் காலத்தை அறியா - இயற்கையின் அறுபருவத் திருக்கூத்தினை எவ்விதத் தூண்டுதலுமின்றி ஆடிப்பாடி கழிக்கின்றன.

மனிதன் மட்டுமே மனத்தால் முக்காலமும் உணர்கிறான். அதில் எதிர்காலம் எப்படி அமைய வேண்டும் என்று அவன் பட்டறிவும் படிப்பறிவும் உணர்த்துகின்றன. அறிவியல் அவனின் முன்னேற்றத்தின் படிக்கல்லாக உதவுகிறது. எனவே எதிர்காலக் கனவுகள் குவிகின்றன. அவற்றை செயற்படுத்தி 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற மெய்ம்மைக்கு பயணம் செய்கிறான். அதன் விளைவே இந்நூல். மக்கள் பயன் கொள்க.

அன்பன்

**த. கோவேந்தன்**

# நிகழ்காலம்

**ம**னித வளர்ச்சி பற்றியும் மானிட எதிர்காலம் பற்றியும் மனிதன் சிந்திக்கிறான். காரணம் சிந்திக்கத் தெரிவதால்.

உலக முழுதும் சிந்தனையாளர்கள் எண்ணங்களின் வெளிப்பாடே. நாகரிக வளர்ச்சியாகவும் பண்பாட்டின் வெளிப்பாடகவும் முகிழ்வதே இவ் உலகம். சாக்ரடிசு முதல் - சாத்தரே வரை - வள்ளுவர் முதல் வள்ளலார் வரை - மானுடத்தை உயர்த்தி தம்மையே தியாகம் செய்துள்ளனர்.

ஏர் பிடிக்கும் பாட்டாளி முதல் எழுதுகோல் பிடிக்கும் கருத்தாளர்கள் பலர் எதிர்காலம் - எதிர்காலம் தம் எண்ணங்களைத் தந்துள்ளனர். அவ்வகையில் இந்நூலும் ஒன்று. தமிழர்க்கும் இந்தியர்க்கும் இந்நூல் ஓர் உந்தாற்றலாகும். மக்கள் எதிர்காலத்தைக் காண்க. கொண்டிருக.

அன்பன்

**எல். ஆர். வேலாயுதம்**

# வருங்கால மானிட சமுதாயம்

## எதிர்காலம் எத்தகையதாக இருக்கும்?

### நிகழ்காலமும் எதிர்காலமும்

**மா**ந்தர்கள் சிந்திக்கப் பிறந்தவர்கள்; அவர்களால் சிந்திக்காமல் இருக்க முடியாது. அவர்கள் எப்போதும் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கின்றனர். சிலர் எதிர்காலம் நிகழ்காலத்தைக் காட்டிலும் நன்றாக இருக்கும் என்று நம்புகின்றனர் வேறு சிலரோ நிகழ் காலத்தை மட்டுமே விரும்புகின்றனர். ஏனேனில் அவர்களுக்கு எதிர்காலத்தில் எந்த நன்மையும் இருக்கப் போவதில்லை. மக்கள் எதிர்காலத்தைக் கூர்ந்து நோக்குகின்றனர். சிலர் நம்பிக்கையோடும் சிலர் நிராசையோடும் நோக்கு கின்றனர். இருப்பினும் எதிர்காலத்தை எவரும் புறக்கணித்து விட முடியாது. எனெனில் எதிர்காலம் என்பது நாளை நிலவ இருக்கும் நிகழ் காலத்தின், இன்றைய நிகழ்காலத்தின் இடத்தில் இடம் பெறப்போகும் காலத்தின் பகுதியாகும்.

எதிர்காலம் ஒவ்வொருவரோடும் தனிப்பட்ட முறையிலும் ஒட்டு மொத்தமாகவும் தொடர்பு கொண்டதாகும் எதிர்காலம் என்று பார்க்கும்போது எல்லாமே ஒரே மாதிரியான அக்கறையைத் தோற்றுவிப்பதில்லை என்பது உண்மை. கலைகள்.

மின்விசைத் தொழில்துறை ஆகியவற்றின் எதிர்காலம் மாந்த குலத்துக்கு இன்றியமையாது என்பதில் ஐயமில்லை; எனினும் இது எல்லா மக்களையும் சஞ்சலத்துக்கு உள்ளாக்கக் கூடிய ஒன்றறை. ஆனால் உலகப் போர் வந்து விடுமோ என்ற சிக்கல் மாந்த குலத்தின் உயிர் வாழ்க்கையையே அச்சுறுத்தும் பெரும்பாடாகும். இது இன்று வாழ்ந்து வரும் ஒவ்வொருவருக்கும் வாழ்வியல் சிக்கலாகும் - வாழ்வா, வீழ்வா என சிக்கலாகும். இதே போல், கோடானுகோடி மக்களின் வருங் காலமும் வண்ண இன குடியேற்ற ஆதிக்க ஒடுக்குமுறைக்கு எதிராக நடக்கும் போராட்டத்தின் விளைவைப் பொறுத்ததாகும். உற்பத்திச் சாதனங்களின் தனியார் உடைமை நீடித்திருப்பதோ, பலருக்குத் தமது வேலைகளை இழக்கச் செய்யும் எங்கும் பரந்த இடர்பாடாய் பசிக்கும் வறுமைக்கும் பலியாக்கும் அச்சுறுத்தலாக அமைந்திருக்கிறது.

மாந்தகுலத்தின் வருங்காலம் பற்றி வண்ணிக்கும் போது, பல சிந்தனையாளாளர்கள் செழித்தோங்கும் அறிவியல், தொழில் நுட்பம். நிலத்திற்பாற்பட்ட நாகரிகங்களோடும் தாராளமான தொடர்புகள் முதலிய சித்திரங்களைத் தீட்டிக் கற்பனையை உலுக்கி விடுகின்றனர்.

ஆனால் வேறுவிதமான வருங்காலத் குறிகாரர்களும் பலர் உள்ளனர். அவர்களது கற்பனையிலே அறிவியலின் பெருவளர்ச்சி கரிந்து சாம்பலான உலகையும், காட்டாண்டித்தனமான மாந்தத் தன்மையற்ற மக்களையும், அழிந்து பட்ட நாகரிகத்தையும்தான் தோற்றுவிக்கிறது.

மாந்த குலததின் வருங்கால சமுதாயத்தின் மீது தான், சமுதாய வாழ்க்கை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள முறையின் மீதுதான் இன்றைய அறிவியல், தொழில் நுட்பப்

புரட்சியின் திசை வழியும் விளைவும் சார்ந்திருக்கின்றன. இது மாந்த குலத்தின் மலர்ச்சிக்கு வழி வகுக்குமா அல்லது அதன் வீழ்ச்சிக்கு வழி கோலுமா?

**மாந்த குலத்தின் சமுதாய எதிர்காலப் பிரச்சினைகள்**

ஒவ்வொருவரின் வாழ்விலும் - அவர் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் - எதிர்கால சிக்கல்கள் புகுந்து விடுகின்றன.

எதிர்காலம் எத்தகையாக இருக்கும்?

19-ம் நூற்றாண்டில் சூல்ஸ் வெர்னி எண்ணிறந்த அறிவியல், தொழில் நுட்பக் கருத்துகளை வெளியிட்டார்; அவை வெற்றி பெறப் போவதையும் கூட முன்னோட்டமாகத் தெரிவித்தார். இந்தக் கருத்துகள் நடைமுறை பட்டறிவாகி வருதை நமது 20-ம் நூற்றாண்டு கண்டு வருகிறது.

சூல்ஸ் வெர்னியால் தமது காலத்துக்கு ஐம்பதாண்டுகட்கும் அப்பால் முன்னோக்கிக் காண முடிந்தது; ஏனெனில் அவர் தமது வருங்காலப் பலன்களை அக்காலத்தில் புதியனவாக விருந்த அறிவியல் தொழில் நுட்பப் போக்குகளின் அடிப்படையில் வகுத்துக் கூறினார். இன்றைய சாத்தியப் பாடுகளின் மூலம் நடைமுறை இயல்பை உருவாக்குவதிலேயே எதிர் காலம் எப்போதும் அடங்கியுள்ளது.

எனவே இன்று எராளமான மக்களின் மனத்தை ஆட்கொண்டிருக்கும் மாந்த குலத்தின் வருங்காலச் சமுதாயம் தொடர்புடைய சிக்கல்களுக்குரிய அறிவியல் முறையான சான்று நிறைந்த விடையைக் கண்டறிவதும் ஆகுவதே யாகும். இதற்கு மனித குல வரலாற்றைக் கற்க வேண்டும்; சிறைவாழ்வும்; தூக்குத் தண்டனை, வறட்சி, போர் முதலிய கொடுமைகளாலும் கூடத் தடுத்து நிறுத்த

முடியாது போன அதன் வெற்றியை, கடந்த 110 ஆண்டுக்காலச் சமுதாய வாழ்க்கையின் நிகழ்ச்சிகளை ஆராய வேண்டும்; உண்மை நோக்கில் எடை போட வேண்டும்.

நமது காலம் சிக்கலும் முரண்பாடுகளும் மிக்க நிகழ்ச்சிப் போக்குகளின் காலமாகும்.

கொந்தளித்துப் பொங்கும் ஓர் அறிவியல் தொழில் நுட்பப் புரட்சி உருவாகி வருகிறது; அணு ஆற்றல் நிலையங்கள், முற்றிலும் தானியங்கியான ஆலைகள் தொழிற்சாலைகள், வேதியல் சேர்க்கைப் பொருள்கள், வண்ணத் தொலைக்காட்சி, மிகு விரைவு கொண்ட வானூர்திகள், மிகவும் பெரும்சிக்கலான கணிதப் புதிர்களைக் கூட வினாடியில் தீர்த்து விடை பகரக் கூடிய கணினி எந்திரங்கள் - ஆகிய இவையெல்லாம் வாழ்வின் ஒரு பகுதியாகவே ஆகிவிட்டன; இதனால் தொழில் நுட்ப அருஞ்செயல்களைக் கண்டு இப்போது மக்கள் வியப்பதே இல்லை. இன்றே இந்த நூற்றாண்டுத் தொடக்கத்தில் ஒரு காணி நிலத்தில் எவ்வளவு விளைச்சல் கண்டதோ அதைக் காட்டிலும் பத்து மடங்கு அதிகமான விளைச்சலை அதே நிலம் காண்கிறது. இக் காலத்துத் தானியங்கி எந்திரங்கள் நூற்றுக்கு மேற்பட்ட பேர்களின் வேலையைச் செய்ய முடியும்; அதன் மூலம் அவை உழைப்பைச் எளிதாக்கவும், அதனை மகிழ்ச்சியளிப்பதாக்கவும் முடியும். நிலவினை ஏற்கெனவே எட்டிப் பிடித்து விட்ட படவி வெளிச் செலவுகள் புதிய உலகங்களையும் அவற்றின் புதிர்களையும் கண்டறிவதில் மாந்தனுக்குள்ள திறமையைக் குறித்த ஐயப்பாடுகளை யெல்லாம் தூளாக்குகின்றன.

இத்தகைய முன்னேற்றம் இருக்கும்போதே உலகில் வறுமை நிலவுகிறது; நடைப்பிணங்களாக அந்தோ

குழந்தைகளும் உள்ளனர்; மக்கள் தமது அன்றாட உணவைப் பெற முதுகொடியப் பாடுபடுகின்றனர்; இத்தகையோர் கோடிக் கணக்கில் பல்வேறு நாடுகளில் உள்ளனர். இன்றும்கூட மரக் கலப்பையையும் மண்வெட்டியுமே உழுபவனின் முதல் கருவிகளாக இருந்துவரும் இடங்களும் உலகில் உள்ளன. இதற்கிடையில் சில மேலை நாடுகளில் தானியங்கி எந்திரங்கள் மக்களின் வேலைகளை அடக்கடி தட்டிப் பறிக்கின்றன; வேலையற்றோரின் படையில் சேரும் வற்புறுத்தலுக்கு அவர்களை ஆளாக்குகின்றன. இளைஞர்களோ தமது படிப்பை முடித்ததும் உழைப்பின் இன்ப துன்பங்களை உணர்ந்து பார்க்கும் வாய்ப்பின்றியே அந்தப் "படை"யில் சேர்கின்றனர். நூறு ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைப் போலவே இன்றும் தாய்மார்கள் தமது குழந்தைகளுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய, பசியும் வறுமையும அற்ற ஒரு காலம் வரும் என்று கனவு காணத்தான் முடிகிறது.

நிலப் பரப்பிலிருந்து நாடுகளை முற்றிலும் தூர்த்துத் துடைத்துவிடக் கூடிய போர்க் கருவிகள் மலிந்ததோர் காலத்தில் மாந்த குலம் வாழ்ந்து வருகிறது. எந்தக் கணத்திலும் குண்டுகளை எறிவதற்கும் ஏவுகணைகளை விடுப்பதற்கும் அணித்தாகவுள்ள குண்டு வீச்சு வானூர்திகளும் நீர்முழ்கிக் கப்பல்களும் உலகில் உள்ளன; இவற்றின் அஞ்சிடத்தக்க உள்ளாற்றல்களில் கடுகளவுதான் 1945ஆம் ஆண்டில் இரோசிமாவிலும் நாகசாகியிலும் புலப்படுத்தப்பட்டது.

ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் இலத்தீன் அமெரிக்காவிலும் இரத்த ஆறுகள் ஓடுகின்றன. செனிவா ஒப்பந்தங்களை மிதித்துத் தள்ளிவிட்டு, தன்னிச்சை அரசுகளுக்கிடையே நிலவும் உறவுகளுக்கான அடிப்படை முறைகளையும் புறக்கணித்துவிட்டு, தென்

கிழக்காசியாவில் போர் அறிக்கை செய்யாத கொடிய போரினை அமெரிக்கா நடத்தி வருகிறது. தென் வியத்நாமில் அது நஞ்சினைப் பயன்படுத்தும் அளவுக்குச் செல்கிறது; வட வியத்நாமிலோ அமைதியான நகரங்களையும் சிற்றூர்களையும் விலங்காண்டித் தனமாகக் குண்டு வீசி அழிக்கிறது கோடானு கோடி மக்கள் நட்பமைதி என்றால் என்ன என்பதையே மறந்து போயிருக்கின்றனர்.

போர்களைக் கட்டவிழ்த்து விடுவதன் மூலமும், ஏனைய மக்களின் உள்நாட்டு நடவடிக்கைகளில் தலையிடுவதன் மூலமும், வல்லாதிக்கவாதிகள் வரலாற்றின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்த முனைகின்றனர். ஆனால் முன்னேற்றமோ பின்வாங்க முடியாதது. உலகில் அரும்பெரும் சமுதாய மாறுதல்கள் நிகழ்ந்து வருகின்றன. வல்லாதிக்க, குடியேற்ற அமைப்பு தனது இறுதி நிலையை எட்டிக் கொண்டிருக்கிறது. ஆப்பிரிக்கா முதலிய கண்டங்களின் நானில் வரை படத்தைப் பார்த்தால், இப்போது பிரிட்டன், இசுபெயின், போர்த்துகல் முதலியவற்றின் மரபு வழியான வண்ணங்கள் சிறு சிறு திட்டுகளாகத்தான் தென்படுகின்றன. 1919இல் குடியேற்ற அரைக்குடியேற்ற நாடுகள் நிலப்பரப்பில் முக்கால் பகுதியில் இருந்தன; இப்போதோ அவை பதினோறில் ஒரு பங்குக்கு மேல் இல்லை.

உலகின் அரசியல் வரை படத்தில் மேன்மேலும் புதிய வண்ணங்கள் - உரிமை வண்ணங்கள் தோன்றிய வண்ணம் உள்ளன.

எனினும் அடிமைத்தனம் இல்லாததோர் உலகை எட்டிப்பிடிக்க இன்னும் நெடுந்தூரம் சென்றாக வேண்டும். இன்றும்கூட, குடியேற்ற நாடுகளிலுள்ள சுமார் 5 கோடி மக்களுக்கு அடிப்படைவாழ்வுரிமைகள்

கூட மறுக்கப்பட்டுள்ளன. தன்னாட்டு மக்கட் தொகையினரான ஆப்பிரிக்கர்களின் விடயத்தில் தென் ஆப்பிரிக்க ஆட்சியாளர்கள் இன்னும் தமது நிறவெறிக் கொள்கையைத்தான் தொடர்ந்து கடைப் பிடிக்கின்றனர்; அதனைத் தீவிரப்படுத்தவும் செய்கின்றனர். தென் ரொடீசியாவில் சிறுபன்மையோரான வெள்ளை இனத்தவரின் மேலாதிக்கத்தைப் பாதுகாப்பதற்காக நிறவெறியர்கள் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளனர். இதற்கிடையில், கலகத்தை மிகவும் எளிதாக அடக்கி யிருக்கக்கூடிய பிரிட்டனோ, ஆப்பிரிக்க மக்களின் விருப்பத்தைப் புறக்கணிக்கிறது; தகுந்த நடவடிக்கைகளை எடுக்க மறுக்கிறது. இன்னும் சில ஆப்பிரிக்க நாடுகளிலோ அடிமை வணிகம் கூட முழுமையாக ஒழிக்கப்படவில்லை. அமெரிக்காவிலோ சுமார் 2 கோடி முன்னாள் அடிமைகள் வெள்ளையர்களோடு சமன்மையும் உண்மையான கட்டற்ற விடுதலை பெறுவதற்காக இன்னும் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

வல்லாதிக்கம் பின்வாங்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளான இடங்களிலோ, அது பற்பல வகையான புதிய குடியேற்ற ஆதிக்க வடிவங்களைப் பயன் படுத்திப் பொருளாதார மேலாதிக்கத்தை நிலை நிறுத்த முயல்கின்றது.

வல்லாதிக்கத்தின் இடங்கள் இன்னும் வலுவாகவே உள்ளன. எனினும் வல்லாதிக்கத்துக்கு அருகிலேயே ஒரு புதிய உலகம், சமன்மை உலகம் உதயமாகியுள்ளது; இன்றைய வளர்ச்சியில் அவ்வுலகம் ஒரு தீர்மான ஆற்றலாக மாறியுள்ளது.

மனிதகுலத்தின் சுமார் மூன்றிலொரு பகுதியினரைக் கொண்ட பதினான்கு நாடுகள் சமன்மையைக் கட்டியமைத்துவிட்டன; அல்லது கட்டியமைத்து வருகின்றன. பெரும்பாலான சமன்மை நாடுகள் பொருளியல்த் துறையில் வளர்ச்சி குன்றிய நாடுகளாக

முன்னாளில் இருந்தவையாயினும் அவற்றின் இன்றைய விரைவான முன்னேற்றமானது, ஆக்கத்தின் அறிவிலும் சரி, வாழ்க்கை நிலையிலும் சரி, மிகவும் முன்னேற்றம் எய்திய முதலாளித்துவ நாடுகளையும் கூட அவை விஞ்சி மிஞ்சி முன்னேறி விடக் கூடிய காலம் தூரத்தில் இல்லை என்று சொல்லக் கூடிய வகையில் விளங்குகின்றது.

பொருளியல் வளர்ச்சியில் உயர்ந்த விரைவு முக்காட்டை நிலைநாட்டுவதன் மூலமும், தேய வருமானத்தை மக்களுக்காகப் பயன்படுத்துவதன் மூலமும்,வாழ்க்கை நிலையில் படிப்படியான உயர்வு ஏற்படுவதையும் சலக உழைக்கும் மக்களின் பொருளாயத ஆன்மீகத் தேவைகளைப் முழுமையாக நிறைவு செய்வதையும் சமன்மையம் உறுதி செய்கிறது.

நிலையான முதலாளியம் பற்றிய தனியரசாட்சிக் கட்டுக்கதை காலத்தின், கண்கண்ட நடைமுறையின் ஆய்வில் நிலைத்திருக்க முடியாது. சமன்மை உலகம் தோன்றி வலிமை பெற்ற பிறகும், வல்லாதிக்க நாடுகள் முற்றுகை, தலையீடு, போர்கள் என்ற முட்டுக் கட்டைகள் மூலம் காட்டிய பலத்த எதிர்ப்புகளுக்கு இடையிலும், சமன்மை உலகம் வெற்றியுடன் வளர்ந்து வருகின்ற பிறகும் கூட நிலையான முதலாளியம் பற்றி எப்படிப் பேச முடியும்?

பல இளம் தேசிய அரசுகள் முதலாளிய வளர்ச்சிப் பாதையைக் கைவிட்டு வருவதும், அவற்றில் சில (கூட்டரபுக் குடியரசு, மாலி, பர்மா மற்றும் பிற நாடுகள்) சமன்மைப் பாதையை உணர்வுடன் தேர்ந்தெடுத் திருப்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

முதலாளிய நாடுகளிலும் கூட, வலிமை வாய்ந்த கம்யூனிச இயக்கம் நாளுக்குநாள் வலுப் பெற்று வருகிறது. இன்று உலகில் 89 பொதுவுடைமைக் கட்சிகள் உள்ளன; அவற்றில் சுமார் 5 கோடி உறுப்பினர்கள் உள்ளனர்.

ஸ்பெயின் போர்த்துகல், கிரீஸ், செருமன் தொகுதி, வெனிசூலா, பெரு, தென் ஆப்பிரிக்கக் குடியரசு, மற்றும் சில நாடுகளில் பொதுவுடைமைக் கட்சிகள் தடை செய்யப்பட்டுள்ளன. பொதுவுடைமைகள் வேலையிலிருந்து நீக்கப்படுகின்றனர்; சிறைக்குள் தள்ளப்படுகின்றனர்; சித்திரவதைக்கும் இறப்பு தண்டனைக்கும் இரையாக்கப் படுகின்றனர். இந்தோனேசியாவில் பொதுவுடைமை எதிர்ப்பு வெறியாட்டம் தாண்டவமாடியுள்ளது. அங்கு பொதுவுடைமைக் கட்சி தடை செய்யப்பட்டுள்ளது; பிற்போக்காளர்கள் பல்லாயிரக் கணக்கான பொதுவுடைமையாளர்களை ஆய்வு இன்றியே மார்கவேட்டையாடி விலங்காண்டித் தனமாகக் கொன்று தள்ளியுள்ளனர். சரி. அதனால் என்ன? சார் ஆட்சி உருசியாவிலும் கூடத்தான் பொதுவுடைமைகளுக் கெதிராக அடக்குமுறை பிரயோகிக்கப்பட்டது. அவர்களும் சிறையில் தள்ளப்பட்டனர், நாடு கடத்தப்பட்டனர்; கொடுமைப் படுத்தப்பட்டனர். 1917-ஆம் ஆண்டு வரையிலும் தீவிரக் கட்சி தலை மறைவாகத்தான் பணியாற்றியது. எனினும் இந்த அடக்குமுறைகளெல்லாம் அக்டோபர் சமன்மைப் புரட்சியை முன்னின்று நடத்தி, நாட்டின் ஆளும் கட்சியாகக் பொதுவுடைமைக் கட்சி வந்ததைத் தடுத்து நிறுத்தவில்லை. இன்றோ உலகப் பொதுமை இயக்கம் மேன்மேலும் மெல்லமெல்ல வலுப் பெற்று வளர்கிறது. சென்ற 50 ஆண்டுகளில் 38 புதிய பொதுவுடைமைக் கட்சிகள் தோன்றியுள்ளன. 1960-ஆம் ஆண்டுக்குப் பின் உலகிலுள்ள பொதுவுடைமைகளின் தொகை 1.4 கோடிவரை அதிகரித்துள்ளது. பல பொதுவுடைமைக் கட்சிகள் தத்தம் நாடுகளில் தலையாய அரசியல் ஆற்றலாக வளர்ந்துள்ளன.

இன்று பொதுவுடைமை இயக்கத்தை எவரும் புறக்கணிக்க முடியாது; அது மிகப்பெரும் அரசியல் செல்வாக்குள்ள ஆற்றலாக மாறியுள்ளது.

சமன்மையத்தின் வலிமையும் செல்வாக்கும் நாம் வாழ்ந்து வரும் காலத்தின் மிகவும் அரும்பெரும் கூறாகும்.

எதிர்காலம் நமக்கு என்ன வழங்க இருக்கின்றது? அறிவியல், தொழில் நுட்ப முன்னேற்றம் அனைத்து துன்ப துயரங்களையும் போக்கப் போகின்றதா? அல்லது மாபெரும் அழிவுக்குரிய ஆற்றல் உலகின் அனைத்து உயிர் வாழ்க்கையையும் தூர்த்துத் துடைக்கப் போகின்றனவா? தேயங்கள் தமது உரிமையைப் பெற்று அவற்றைப் பாதுகாத்து வரமுடியுமா? அல்லது சமன்மை இன்மையும் ஒடுக்கு முறையும்தாம் அவற்றை எதிர் நோக்கி நிற்கின்றனவா? எதிர்காலம் யாருக்கு உரிமை? பொதுவுடைமைக்கா, இல்லை முதலாளியத்துக்கா?

எது புதியதோ, எது முன்னேற்றத்தைத் தன்னுட் கொண்டுள்ளதோ, அதற்குத்தான் எதிர்காலம் எப்போதும் உரியதாகும் என்றே வரலாறு காட்டுகின்றது. எனினும் பழமை முரட்டுத்தனமாக எதிர்ப்புக் காட்டுகின்றது. அது புதுமையைப் புண்படுத்த முடியும்; அதன் முன்னேற்றப் பாதையில் முட்டுக் கட்டைகள் போட முடியும். எனினும் இந்தப் புண்களெல்லாம் ஆறிவிடும்; முட்டுக் கட்டைகள் தகர்ந்து பொடியாகும்; ஏனெனில் புதுமையின் வெற்றி தவிர்க்க முடியாதது.

உரிமையும் பொதுவுடைமையும்தான் இன்று உலகில் புதுமையும் முற்போக்கானதும் ஆகும். உலகில் பல மக்கள் பொதுவுடைமை இயற்றுகையில் ஈடுபட்டுள்ளனர்; வெற்றிகளும் பெற்று வருகின்றனர். 1966 மார்ச்சு இறுதியிலும் ஏப்ரல் தொடக்கத்திலும் நடந்த சோவியத்து பொதுவுடைமைக் கட்சியின் 23-வது பேராயம் பொதுவுடைமை இயற்றுகையில் முதல் பயன்களைத் தொகுத்துக் கூறியது; பொதுவுடைமையை நோக்கி மேலும் முன்னேறுவதற்கான திட்டத்தையும் வகுத்துக் கூறியது. சமன்மை நாடுகளின் மக்களும் தமது வளர்ச்சியின் குறிக்கோள் பொதுவுடைமை என்று உறுதிவெளிப் படுத்தியுள்ளனர்.

# பொதுவுடைமையும் கட்டுக்கதைகளும்

தமது மகிழ்ச்சிக்கு எவ்விதக் குந்தகமும் இல்லாது எல்லோரும் சமமாகவும் உரிமையாகவும் வாழக் கூடிய ஒரு சமுதாய அமைப்பை, ஆயிரமாயிரம் ஆண்டுகளாக மக்கள் கற்பனை செய்ய முயன்று வந்துள்ளனர். தொடக்கத்தில் அத்தகைய கருத்துகள் முறையானவை யாக இருந்தன.

**கனவுகள்**

மக்கள் தமது கனவுகளில் கடந்துபோன தொல்லைப் பழங்காலத்தை, சமுதாய சமுன்மை நிலவிய காலத்தை, சமுதாயச் சமன்மை நிலவிய காலத்தை, தனியார் உடைமையோ ஏழைகளைச் செல்வர் சுரண்டும் சுரண்டலோ இல்லாத காலத்தை நினைத்துப் பார்த்தனர். மாந்த வகுப்பின் வைகறைக் காலம் இருள் மண்டிக் கிடந்தது என்பதே உண்மையாயினும், பலர் அந்தத் தொல்லைப் பழங்காலத்தை ஒரு "பொற்காலம்" எனக் கருதினர். மேலும் பல்வேறு நாடுகளிலும் அந்தக் காலம் போற்றிப் புகழப்பட்டது.

"பொற்காலம்!" .......... பழம் பெரும் கிரேக்கப் பாவலரான இசியாது அக் காலத்தை, உலகம் தானாவே செழிப்பான செல்வததை அள்ளித் தந்து வந்த காலமாக, உழைப்போ கவலையோ இன்றி மக்கள் வாழ்ந்து வந்த

காலமாகக் கற்பனை செய்தார். ஒரு வேளை மக்கள் உழைக்க நேர்ந்த போதிலும் அந்த உழைப்பு அவர்கள் தமக்குள் அமைதியோடு எதிரிடை எதிர் கொண்டு உழைத்த மகிழ்ச்சியான காரியமாகவே இருந்தது. உரிமை, நட்புறவு, ஒப்புறவு உதவி ஆகியவை அக்காலத்தின் ஒழுக்க முறை இருந்தன. அத்தகைய காலத்தை மட்டும் திரும்பக் கொண்டுவர முடிந்தால் என்று கனவு கண்டார் அக் கவிஞர்.

ஆனால் அக் காலத்தை எவ்வாறு திரும்பக் கொண்டு வர முடியும்? ஒடுக்குமுறைச் சுமையைத் தூக்கியெறிய முனைந்த அனைத்து முயற்சிகளும் ஒடுக்கப்பட்டவர் களுக்குத் தோல்வியாகவே முடிந்தன. எதிர்காலம் அவர்களுக்கு எவ்வித நல்ல வாய்ப்புகளையும், இனங்காட்டவில்லை. எனவே தமது கனவுகளில்தான் மக்கள் அந்தப் "பொற்கால"த்தைத் திரும்ப கொண்டுவர முடியும் எனறே தோன்றியது.

இதனால், மக்கள் என்ன காரணத்தாலோ இழந்து விட்ட ஒரு வையகத் துறக்கத்தைப்பற்றிக் கற்பனைப் பாடல்கள் இயற்றப்பட்டன. கிறித்தவர்களின் தூய மறையான விவிலிய நூலின் புதிய ஏற்பாட்டில் தொல்பழங் காலக் பொதுவுடைமைக்காக ஏங்கித் தலிக்கும் பகுதிகள் - சிறு பிள்ளைத்தனமான பகுதிகள் தான் - அடங்கியுள்ளன. அவற்றில் நம்பிக்கை உண்டு: ஆனால் தைரியம் கிடையாது. பழங்கால கிறித்தவ இலக்கியங்களில் ஒன்றான அபோகலிப்சே இறை காப்பாளரான ஏசு கிருத்துவின் வருகையை முன் கூட்டியே கூறுகிறது. அவர் மக்களை இருளிலிருந்து விடுவித்து வழிகாட்டுவார் என்றும், உலகின் மீது ஆயிரம் ஆண்டு காலம் சமன்மையும் அறமும் நிறைந்த ஆட்சியை நிறுவுவார் என்றும் அந் நூல் கூறுகின்றது.

ஆனால் காலம் செல்லச்செல்ல, மதமானது இந்த அறப்போரை விண்ணகப் பேரரசாக மாற்றியது; இந்த

விண்ணகப் பேரரசியம் பற்றாவலர்களுக்கு இறப்புக்குப் பின்னர் கிட்டக்கூடிய பரிசாக மாறியது இதற்கிடையில் திருச்சபையோ நானிலத்தில் மீது நிலவிய சம்மை இன்மையும் ஒடுக்குமுறையையும் சுரண்டலையும் தேவன் விதித்த வாழ்க்கை முறை என வெளிப்படுத்திற்று விண்ணகப் பேரரசும்கூட, தான் பெற்றிருந்த தொன்மை பொதுவுடைமை சாயல்களைப் படிப்படியாக இழந்து விட்டது மண்ணுக்கு அப்பாலுள்ள விண்ணக வாழ்க்கையும் பணக்காரர்களின் வாழ்க்கையை யொத்த வாழ்க்கையாக, சோம்பேறித்தனமும் இன்பம் மலிந்த வாழ்கையாக ஆக்கப் பட்டது

ஆனால் மக்களோ இந்த உலகிலேயே சமன்மையையும், அறமுறையையும் பொருளியல் நல் வாழ்வையும் பெறுவதைப் பற்றிச் சிந்தித்து வந்தனர் அவர்கள் உழைப்பைக் கண்டு அஞ்ச வில்லை மாந்த இனத்தின் மூதாதையர்கள் சோம்பியிருக்கவில்லை என்பதை நினைவு கூர்ந்தனர் ஆதாம் நிலத்தைத் தோண்டினான்; ஏவாள் நூல் நூற்றாள்

உலகில் அறமும் சமன்மையும் நிலவும் பேரரசு பற்றிய பழைய கிறித்தவக் கருத்தை வலியுறுத்த ஆயிரம் ஆண்டுக் காலத்துக்கும் மேலாகப் பல இயக்கங்கள் தோன்றின் திருச்சபையால் வேதப் புரட்டர்கள் எனப் பழிதூற்றப் பட்ட இவ் இயக்கங்களின் தலைவர்கள் தனியார் உடைமை தீவினையான தென்று கற்பித்தனர்; நிலத்திலும் உடைமையிலும் சம உரிமைகள் வேண்டு மென்பதை ஆதரித்தனர் 16ஆம் நூற்றாண்டுத் தொடக்கததில் செருமனியில் நடந்த உழவர்களது போரின் தலைவரான தாமசு முன்செர் தனியார் உடைமையின் முறையின்மையை எடுத்துக் கூறினார்; எந்த வகையான வகுப்பு வேறுபாடுகளோ, தனியார் உடைமையோ, பகை மனம் கொண்ட அரசாங்கமோ இல்லாத ஒரு சமுதாய

அமைப்பை நிறுவுதற்கான திட்டம் ஒன்றையும் உருவாக்கினார்.

அறமும் சமன்மையும் நிலவும் தெய்வப் பேரரசு கடந்து போன அந்தக் காலத்து மக்களின் கனவு-பொதுவுடைமையை ஓரளவு ஒத்திருந்தது என்பது உண்மை. எனினும் தெளிவற்ற வகையில்தான் ஒத்திருந்தது. ஏனெனில் வளர்ச்சி குன்றிய பொருளியலில் எல்லோருக்கும் நல்வாழ்வை உறுதிப் படுத்த முடியாது; அத்தகைய நிலைமைகளில் சமன்மை என்பது ஏழைகளின் சமன்மையாகத்தான் இருக்க முடியும். மேலும் அதனை எய்திய போதிலும் கூட (இத்தகைய முயற்சிகளும் பல்வேறு சிறிய மத சமூகங்களில் மேற்கொள்ளப்பட்டன) அந்தச் சமன்மை வாழ்வு குறைநாளில் தான் முடிந்தது.

மக்களின் கனவு என்ன வாயிற்று? முதலில் அது "பொற்கால"மாக இருந்தது; அதுவோ முற்றிலும் கடந்த காலத்தைச் சேர்ந்ததாகி விட்டது. பின்னர் அது மண்ணகத்துர்க்கமாயிற்று. இதுவோ முற்றிலும் எல்லை காண முடியாத எதிர்காலத்தைச் சேர்ந்ததாகி விட்டது. அறமும் சமன்மையும் நிலவும் பேரரசு நிலத்தில் தானாகவே நிறுவப்பட மாட்டாது என்பதை மக்கள் மேன்மேலும் தெள்ளத் தெளிவாக உணரத் தொடங்கினர்.

அவர்கள் அதனை எவ்வாறு எய்துவது? அத்தகைய கனவுகளிலிருந்து முளைத் தெழுந்ததே -

உண்மையில் அது தொடக்கத்தில் பல இலக்கியல் உலகுகளாக இல்ல; ஒரே கற்பனை உலகமாகத்தான் இருந்தது. கருத்தியல் உலகம் - என்னும் புதிய இலக்கியல் நாடும், பொது நலங் கருதும் சிறந்த அரசும் ஆற்றும் பயனுள்ள இன்பமான பணி - ஆங்கிலேய உட்படு கருமத்தலைவரும் மாபெரும் மனிதநலநாட்டவரான சர் தாமசு மூர் 1516-ல் எழுதிய தமது புகழ்பெற்ற நூலுக்கு இவ்வாறுதான் தலைப்புக் கொடுத்திருந்தார்.

அக் காலத்தில் இங்கிலாந்தில் ஆட்டுக் கம்பளிப் பொருள்களின் பெருக்க வளர்ச்சியின் விளைவாக மேய்ச்சலுக்காக வேலி கட்டி வைத்திருந்த தமது நிலங்களிலிருந்து உழவர்கள் வெளியேற்றப்பட்டனர். இதனால் அவர்கள் கட்டாய தண்டனை கிட்டக் கூடிய இடர் இருப்பினும் கூட, அவர்கள் வேறு வழியின்றி இரந்துண்டு வாழ்வதற்காக நாடெங்கணும் அலைந்து திரிந்தனர்.

தாமசு மூர் தமது காலத்துச் சமுதாயத்தைக் அறச்சியற்றத்தோடு கண்டித்தார். அவர் இவ்வாறு எழுதினார்: இயல்பாகவே அறிவார்ந்த தன்மையும் கட்டுக்கு எளிதில் அடங்கியிருக்கும் பணம் கொண்ட உங்களது ஆடுகள் இப்போது மாந்தர்களையே தின்று வாழ்வதாகச் சொல்லலாம். அவை ஒழித்துக் கட்டுகின்றன."

" வேலைக்கு வர என்றுமில்லாத பெருவிருப்போடு முன் வந்த போதிலும்", அந்த மக்களை எவரும் வேலைக்கு வைத்துக் கொள்ளாத ஒரே குற்றத்தால் ஏழை எளிய மக்களைத் தூக்கு மேடைக்கு அனுப்பும் சமுதாயத்தை, உழைத்து வாழும் மக்களின் வாழ்க்கை ஆடு மாடுகளிலும் கடை கெட்ட பிழைப்பாய் இருக்க, ஒரு சில சோம்பேறிகளின் வாழ்க்கை மட்டும் ஆரவாரமாகவும் இம்பமாகவும் கழிந்து வந்த அந்தச் சமுதாயத்தை அவர் குற்றம் சாட்டினார்.

இந்தத் துயரத்துக்கும் முறையின்மை உரிய காரணம் எங்கிருந்தது? - இவ்வாறு தாமசு மூர் கேட்டார். தனியார் உடைமையில்தான் என்று விடைப்பு அளித்தார். மூரின் கருத்துப்படி, "ஒரு நாட்டில் சொத்துடைமை இருந்து வரும் வரையிலும், ஏதாவதோர் உரிமை ஆவணத்தின் மூலம் ஒவ்வொருவனும் தன்னால் முடிந்த மட்டிலும்

சொத்துக்களைத் தனக்குத்தானே சொந்தமாக்கிப் பெருக்கிக் கொள்கிற வரையிலும் அங்கு ஆனந்தம் இருக்காது ஒரு நாடு எவ்வளவு தான் செல்வ வளம் மிக்கதாயிருப்பினும், அந்நாட்டின் செல்வத்தை ஒரு சிலர் மட்டும் தமக்குள் பங்கு போட்டுக் கொள்வார்களேயானால், ஏனையோர் ஏழைமைக்கு இரையாகியே தீருவர் என்பதும் தானாகவே விளங்கும்"

ஆனால் உட்டோப்பியர் என்ற இலக்கியல் நாட்டில் காணப்படக் கூடிய ஓவியமோ முற்றிலும் மாறு பட்டதாகும் தனியார் உடைமை இல்லாதிருப்பதே இலக்கியல் சமுதாயத்தின் முதன்மைச் சிறப்பாகும் இலக்கிய நாட்டில் வாழ்க்கை சகலரின் உடல் உழைப்பின் அடிப்படையில் அமைந்துள்ளது சமுதாயக் கடமைகளை நிறைவேற்று வதில் சிறிதுகாலமாக ஈடுபட்டுள்ளவர்களும் அறிவியலாளர்களும்தான் உடல் உழைப்பிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தனர் அங்கு ஏராளமான பொருள்வளம் உண்டு அவை அவரவர் தேவைக் கேற்ப பகிர்க்கப் படுகின்றன பொது மக்கள் சமன்மையே அங்கு செங்கோல் ஓச்சுகிறது

முறையான பகிர்வளிப்பதை மட்டும் கொண்ட முறை சமுதாய அமைப்பைக் கனவு கண்ட இடைக்கால குறிக்கோளர்களைப் போலன்றி, ஆக்கத்திளை அறிவு வார்ந்த முறையில் ஒழுங்கமைப்பதுதான் சமுதாய சமன்மைக்கான முன்தேவையாக இரக்க வேண்டும் என்று தாமசு மூர் கருதினார் நாடு பறந்த அளவில் ஆக்கத்தை ஒழுங்கமைப்பதுதான் அனைத்து மக்களது தேவை களையும் நிறைவு செய்யும் பயனீடுக் கோட்பாட்டை நடத்துவதை முடியத் தக்கதாக்கும் என்ற உண்மையின் அடிப்படையில்தான் அவர் இவ்வவாறு ஊகித்தார்

மூர் சித்திரித்துள்ள அத்தகைய சமுதாய அமைப்பின் சில கூறுகள் வருமாறு: ஆக்கக் கைவினைப் பொருள்களின் அடிப்படையில் அமைந்துள்ளது

பண்ணைத் தொழிலைப் பொறுத்த வரையில், அதனை நகர மக்கள் தமக்குள் முறை வைத்து ஏற்றுக் கொள்கின்றனர். அதாவது ஒவ்வொருவரும் அதில் ஈராண்டுக் காலம் உழைக்கினறனர் ஒவ்வொரு குடும்பமும் ஒரு குறிப்பிட்ட தொழிலை ஒரு பொருளியல் பிரிவாக ஏற்றுச் செய்து வருகிறது வேலைநாள் நேரம் ஆறு மணியாகும் எல்லா ஆக்கப் பொருள்களும் பொதுப் பண்டக சாலைகளில் சேர்க்கப் படுகின்றன கணக்குப் புத்ததகத்தில் அவை பதியப் படுகின்றன; ஒவ்வொருவரின் தேவையையும் நிறைவு செய்யும் வகையில் அவற்றை அரசு பகிர்ந்தளிக்கின்றது நலவாழ்வு ஆக்கத்தினால் மட்டுமல்லாமல், மக்களது தேவைகளின் இயல்பான அளவைக் கொண்டும் உறுதி செய்யப் படுகின்றது கருத்தியல்வாரையர்கள் துறவிகள் அல்லர், எனினும் அவர்களுது தேவைகள் முறையா னவை; அவர்கள் இன்பநலநாட்டத்தையோ குலவாழ் வையோ நாடுவதில்லை

மூர் காட்டியபடி, அந்த இரும்பூதான அரசின் நல்வாழ்க்கை மேன்மையான உட்டோப்பசு மன்னரின் சட்ட நடவடிக்கைகளைச் சார்ந்திருந்தது மூர் இவ்வாறு நம்பிக்கையும் ஊட்டினார் "பொறுத்திருங்கள், இன்னும் பல கருத்தியல் மன்னர்கள் தோன்றுவார்கள்!" என்றார் ஆனால் அவர் தமது காலத்துச் சமுதாயத்தை மாற்றியமைப்பதற்கான நடைமுறைக்குரிய இயல்பு வழியைச் சுட்டிக் காட்ட முடியவில்லை

கருத்தியல் நாடு பற்றிய மூரின் கதையைத் திரும்பச் சொன்ன இரால்ப்ஹைறத்லோ தாயி என்ற சுற்றுலாவாளர் கனவியர் வாணர்களின் வாழ்க்கையை மிக ஒளிவான காட்சியில் வண்ணித்தார்; அதனைக் கண்டு அவர் காலத்து மக்களில் பலர் அத்தகையதோர் நாடு உண்மையில் இருப்பதாகவே நம்பிவிட்டனர் ஆனால்

நாம் உட்டோப்போசு (Outopos - உட்டோப்பியா) என்ற கிரேக்கச் சொல்லின் பொருளைப் பார்ப்போம்; இச் சொல்லுக்கு "இடமற்றது", எங்கும் இல்லாதது என்பதே பொருள். அத்தகைய இடம் ஏதும் உண்மையில் இல்லை. மேலும், சான்றவர் உட்டோப்பசு என்ற ஒருவரிடமிருந்து அதனை எதிர்பார்த்தால், அப்படியொரு இடமே இருக்க முடியாது என்பதையும் நாம் சொல்லியாக வேண்டும் கனவகம் என்று ஒன்று இருப்பது இயலாது என்பதற்கு வேறு பல காரணங்களும் உள்ளன. ஆனால் அவற்றை நாம் பின்னர் ஆய்வோம்.

உலகில் உட்டோப்பியா என்று எந்த நாடு இல்லை என்பதை மக்கள் விரைவிலே உணர்ந்தனர். ஆனால் அப் பெயர் மட்டும் மறக்கப்படவில்லை. அது அழகான **எனினும் பலிக்காத பகற்கனவின்** பொருளைப் பெற்றுவிட்டது. மூரின் கருத்தியல்நாட்டைத் தொடர்ந்து எண்ணற்ற பிற கனவுலக நாடுகளும் தோன்றின.

1602இல் சிறைக்குள்ளிருந்த இத்தாலிய மெய்யியல் வாணரான தொம்மாசோ காம்பனெல்லா தமது பொதுவுடைமை கனவுலகான சிவிட்டாசு சோலிஸ் (செங்கதிர் நகரம்) என்ற நூலை எழுதினார்; இந்நூல் 1623ல் வெளி வந்தது. அதிலும் கதை சொல்பவர் ஒரு தாளிகையாளர்தான். அந் நகரம் இந்துமாக் கடலில் தர்ப்ரோபானு என்ற கற்பனைத் தீவில் அமைந்திருந்தது.

அந்த செனோவா ஊர்சுற்றி கூறியதென்ன?

செங்கதிர் மரபினரின் (செங்கதிர் நகரின் குடிமக்கள்) சமுதாயத்தில் தனியார் உடைமை இல்லை. அங்கு மக்கள் பொருள்களுக்காகப் பணி புரியவில்லை; மாறாக மக்களுக்குப் பணி புரிவதற்குத்தான் பொருள்காள் படைக்கப்பட்டன. செங்கதிர் மரபினருக்குக் குழந்தைப் பருவம் முதற்கொண்டே உழைப்பை மதித்துப் போற்றக்

கற்றுக் கொடுக்கப்படுகின்றது அது அவர்களுக்கு வெறும் கடமையாக இருக்கவில்லை; மாறாக, வாழ்க்கைக்கான தேவையாக இருந்தது அங்கு உடல் உழைப்புக்கும் மூளை உழைப்புக்கும் இடையே இடைவெளி இல்லை. எந்த உழைப்பும் அங்கு ஒரு மதிப்புடையதாகும். எந்த அளவுக்கு உழைப்பு கடினமாக இருக்கிறதோ அந்த அளவுக்கு அதன் மேன்மையும் அதிகம் அதே சமயத்தில் பல்வேறு தொழில் நுட்பக் கண்டு பிடிப்புக்களைப் பரவலான அளவில் பயன்படுத்துவதன் மூலம் அங்கு உழைப்பு எளிமையாக்கப்படுகிறது. (காம்பனெல்லா அங்கு பாய்மரத்தால் ஓடும் தானே இயங்கிச் செல்லும் ஊர்தி இருந்ததாகக் குறிப்பிடுகிறார் அங்குள்ள மக்களுக்குப் பறக்கவும் தெரிந்திருந்தது என்றும் கூறிகிறார்). **அங்கு வேலை நாள் நேரம் நான்கு** மணிநேரம்தான். பெண்கள் எளிமையான வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்; அவர்கள் ஆண்களுக்குச் சமதையானவர்களாகவும், பொதுவான மதிப்பைப் பெற்றவர்களாகவும் உள்ளனர் ஆக்கப் பொருள்களின் பெருவளம் எல்லாத் தேவைகளையும் நிறைவு செய்வதாக உள்ளது தனித்தொருசிறப்புக் கல்வி முறை யும், பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கும் முறையும் ஒரே சீராக வளர்ச்சி பெறும் மனிதனை உருவாக்கி வளர்ப்பதை உறுதி செய்கிறது நடைமுறை அன்பு, நட்புறவு ஆகியவற்றின் அடிப்படையிலேயே உறவுகள் அமைகின்றன செங்கதிர் மரபினர் நேய தன்னார்வமும் வாய்மையும் மிக்கவர்கள்.

உண்மையில் அத்தகையதொரு நகரம் ஏதும் இருக்கவில்லை என்பதை காம்பனெல்லா ஒப்புக் கொள்கிறார் ஆனால், மக்கள் தமக்குள் கூடிப் பழகும் வேட்கையை அடுத்தவர்களோடு ஒன்றுபட்டிருக்க வேண்டும் என்று எல்லோரிடம் குடிகொண்டிருக்கும் உள்ளார்ந்த விருப்பத்தைப் பின்பற்றி நடந்தால், இறுதியில்

இத்தகைய சீரான வாழ்க்கையை அவர்கள் எய்துவர் என்பது அவரது கருத்து.

17ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் இருந்த கெர்ரார்டு வின்ஸ்டான்லி, சீன் மெசுலியர், கபிரியேல் மாப்லி, மற்றும் 18ஆம் நூற்றாண்டில் வசித்த, இயற்கை முறைமை என்ற புகழ்பெற்ற நூலின் ஆசிரியரான மோரெல்லி, மாபெரும் சமண்மை, பொதுவுடைமை கருத்தியல் நாடுகளின் பிற்காலத்தையும் ஆசிரியர்கள் ஆகிய எல்லோரும், காலத்தையும் வரலாற்றையும் கடந்த மாந்த இயல்புக்கும், மாந்த அறிவுக்கும், மாந்தனின் தூய நன்னெறிக் கோட்பாடுகள் எனக் கருதப் படுவனவற்றுக்கும்தான் வேண்டுகோள் விடுத்தனர்.

1649ஆம் ஆண்டு இன்னிளவேனில் பருவத்தில், ஆங்கில நாட்டு முதலாளியப் புரட்சி நடந்து வந்த காலத்தில், ஒரு சிறு சமூகத்தினர் இலண்டனுக்கு அருகிலிருந்த சர்ரே என்ற பகுதியிலுள்ள பொது நிலத்தில் குடியேறி அந் நிலத்தைக் கூட்டாக உழத் தொடங்கினர். அந்தக் குழுவினர் "தோண்டுவோர்" என அழைக்கப் பட்டனர். அவர்களின் தலைவரான வின்சுடான்லிஎன்ற அறிவுக்கோட்பாட்டுவாணர் தாம் எழுதிய உயர் நிலையில் உரிமையின் முறைமை அல்லது உண்மை அறத்தி மீட்சி (1952) என்ற நூலில் எல்லாக் குடிமக்களுக்கும் உண்மையான உரிமையை உறுதிப்படுத்தும் குடியரசு சமுதாயம் ஒன்றை வண்ணித்துக் காட்டினார்; அவர் மனித ழியல்பின் தேவைகளை விவிலிய நூல் வெளியிடுவதாகக் கூறினார். அந்தச் சமுதாயத்தில் தனியார் உடைமையும் இல்லை; வாணிபமும் இல்லை. ஆக்கப்படும் எல்லாப் பொருள்களும் பொதுப் பண்டக சாலைகளுக்கு அனுப்பப்படுகின்றன; அதிலிருந்து ஒவ்வொரு குடும்பமும் தனக்குத் தேவையானதைப் பெற்றுக் கொள்கிறது.

18ஆம் நூற்றாண்டில் புரட்சிக்கு முந்திய பிரான்சு நாட்டில் இருந்த கூட்டுடைமை கொள்கைகளின் ஆசிரியர்கள் மாந்த இயல்பிடமும் அறிவிடமும்தான் நேரடியாக முறையிட்டுக் கொண்டனர். ஆவணம் என்ற நூலின் ஆசிரியரான மெசுலியர் "அறிவின் இயல்பான ஒளியினால்" வழி காட்டப்பெற்று, ஒரு குறிக்கோள் சமுதாய அமைப்புப் பற்றிய சித்திரத்தை உருவாக்கினார்; அச் சமுதாயத்தில் பொது உடைமையும் அனைத்து மக்கள் உழைப்பும் உண்மையான உரிமையையும் சமன்மையும் மக்கள் எய்துவதற்கு உதவின. கம்யூனிச லட்சியத்தை எய்துவதற்குக் கல்வி மட்டும் போதாது. என்ற மெசுலியர் கருத்து அவரது கொள்கைக்கு ஒரு தனித்தன்மை அளித்தது. புரட்சிகரமான வழியிலேயே தனியார் உடைமையையும் சுரண்டலையும் ஒழித்தாக வேண்டும் என்று அவர் கருதினார்.

மாப்லியின் கூற்றுப்படி, "இயற்கையின் ஆட்சி"க்கு அனைத்துத் தீமைகளுக்கும் முதல் காரணமான தனியார் உடைமையை ஒழிப்பது தேவையாக இருந்தது. பொதுச் சொத்து, சமன்மை, மிகச்சிறந்த குறிக்கோள்களின் பேரால் மக்களுக்கிடையே போட்டாபோட்டி, மக்களின் கைகளில் அனைத்து அதிகாரம் - இவையே மனித இயல்போடு இசைந்து வரும் சமுதாய உறவுகளாகும்; ஆனால் இவையெல்லாம் கடந்த கால செய்திகளாகிவிட்டன - என்பதே மாப்லியின் கருத்து. எதிர்காலத்தைப் பொறுத்தவரையில் நிராசையே மாப்லியிடம் தென்பட்டது. தனியார் உடைமையால் சீரழிந்துபோன ஒரு சமுதாயத்தில் கம்யூனிச உறவுகளை நிறுவுவதே மிகக் கடினம் என்று அவர் கூறுகிறார்.

மாப்லியைப் போலவே, மோரெல்லியும் மாந்த இனத்தின் தொன்மை நிலையையே குறிக்கோள் வாழ்வாகக் கருதினார்; அதன் தொல்லைப்

பழங்காலத்தைப் "பொற்காலம்" என்றும், "இயற்கை அறம்" நிலவிய காலம் என்றும் கருதினார். ஆனால், மாப்லியைப்போல் எதிர்காலம் பற்றி தோல்வியுணர்வு கொள்ளலாம், மோரெல்லி எதிர் காலத்தில் தன்னம்பிக்கை கொண்டவராக விளங்கினார். மாந்தனது "இயற்கை அறத்தின் முறைகளை மீட்டுக் கொண்டுவர, சட்டங்கள் மாந்த குலத்துக்கு உதவ முடியும் என்று அவர் நம்பினார். இதற்குச் சான்றாக "சொத்துடைமையையும் தனியார் நலனையும்:"ஒழித்தாக வேண்டும். மோரெல்லியின் எதிர்கால பொதுவுடைமைச் சமுதாயம் அதன் சமுதாய உடையை நிறுவனத்தால் குறிப்பிடத்தக்க சிறப்பைப்பெற்றது. சமுதாயம் முழுவதன் நல்வாழ்வுதான் ஒவ்வொரு தனிநபரின் தனிப்பட்ட மகிழ்ச்சிக்கான நிலைமைகளையும் உறுதிப்படுத்த முடியும் என அவர் நம்பினார் உழைப்பு ஒவ்வொரு பிரஜையின் உரிமையாகும்; கடமையாகும்; அவரது சமுதாயத்தில் ஒவ்வொருவருக்கும் ஓய்வுக்கும் பொழுதுபோக்குக்குமான உரிமை உத்தரவாதம் செய்யப்பட்டிருந்தது; பகிர்வளிப்பு மக்களது தேவைகளின் அடிப்படையில் ஒழுங்கமைக்கப் பட்டிருந்தது; அறிவியல் வளர்ச்சிக்குத் துணையான நிலைமை அவரது சமுதாயத்தில் உருவாக்கப்பட்டிருந்தன

கனவுலக சமன்மையின் முழுநிறைவான கொள்கைகள் 19ஆம் நூற்றாண்டின் முதல் முப்பது ஆண்டுகளின்போதுதான் உருவாயின. இங்கிலாந்தில் பொருள் ஆக்கங்களை எந்திர மயமாக்கியதால் ஏற்பட்ட பெருந் தொழில் வளர்ச்சியும் சரி, 1789-94 ஆண்டுகளின் பிரஞ்சு முதலாளியப் புரட்சியும் சரி, உழைக்கும் மக்களுக்குதவும் தீவிரமான வளர்நிலைகள் எதையும் கொண்டு வரவில்லை. மாறாக மக்கட் தொகையின் பரந்த பகுதிகள் இடையில் ஓட்டாண்டியாகும் நிலையே அதிகரித்தது. வாழ்விழந்த உழவர்கள் நகரங்களுக்கு வெள்ளம் போல் திரண்டு வந்தனர்; ஆனால்

ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் நிலவிய ஈவிரக்கமற்ற சுரண்டலும், அதைக் காட்டிலும் இழிவான வேலை இல்லாதத் திண்டாட்டமும் வறுமையும்தான் அங்கு அவர்களுக்குக் காத்திருந்தன. அனைத்து மக்கள் உரிமை, சமன்மை, உடன்பிறப்பாண்மை ஆகிய முதலாளியப் புரட்சியின் வாக்குறுதிகளெல்லாம் மக்களைப் பொறுத்த வரையில் வெறும் ஆரவார சொற்களாகத் தான் இருந்தன.

முதலாளிய அமைப்பை செயின்ட் - சைமன், போரியர், ஓவென் ஆகியோர் கூர்மையாகத் திறனாய்ந்தனர். பிரஞ்சுப் புரட்சியானது மேட்டுக்குடி வகுப்பினர்க்கு எதிராக நடந்த போராட்டமாக மட்டுமல்லாமல் ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் **நடந்த போராகவும் இருந்தது என்பதை செயின்ட் -** சைமனே முதன் முதலில் இனம் கண்டவராவர். இந்தப் போராட்டம், இல்லாதவர்களைப் பொறுத்தவரை துயர விளைவையே விளைவித்தது. முதலாளியத்தை இறும்பூதுடன் திறனாய்வு செய்த திறனியான சார்லசு பெரியர், அரும்பெரும் செல்வத்திலிருந்து பிறந்த வறுமையைக் கொண்ட மக்கட் தொகையில் எட்டில் ஏழு பகுதியினரை, மீதமுள்ள எட்டில் ஒரு பகுதியினர் கொள்ளையடித்துப் பிழைக்கின்ற, புல்லுருவித் தனம் செழித்து வளர்கின்ற, தனியார் நலன்களுக்கும் பொது நலங்களுக்கும் உள்ள முரண்பாடுகள் வெளிப்பட்டு காண்போர் சிரிக்கின்ற "நாகரிக அமைப்பின்" தீமைகளைக் கண்டித்தார். இந்த நாகரிக சமுதாயத்தில் ஒவ்வொருவரும் வெகு மக்களோடு உள் நோக்கம் கொண்ட ஒரு போராட்டத்தை நடத்தும் நிலையிலேயே இருந்ததாக அவர் எழுதினார். அதாவது மருத்துவர் நிறைய நோயாளிகள் இருக்க வேண்டுமென்று விரும்பினார்; கட்டிடச் சிற்பியோ தனது நகரில் தீ நேர்ச்சி ஏற்பட்டு கால்பங்கு நகரைச் சுட்டுக் கரியாக்கக் கூடாதா

என்று கனவு கண்டான்; கண்ணாடி வணிகரோ அனைத்து கண்ணாடிப் பலகணிகளையும் உடைத்து நொறுக்கிச் சென்ற பனிப்புயலைக் கண்டு களிப்படைந்தான்; அறங்கூறவையோ மிகுதியான குற்றங்கள் நடக்க வேண்டும் என விரும்பியது........

மக்களின் ஒழுக்க வடிவம் தாறுமாறாக இருந்தது. தன்னகச்செருக்குதான் அங்கு மேலோங்கிய குணமாக இருந்தது; பொதுவாக , மண வாழ்வில் காதலும் இருக்க வில்லை. செயின்ட் - சைமனைத் தொடர்ந்து, போரியரும் சுமுதாய உரிமையைப் பெண்களுக்குள்ள விடுதலையின் அளவைக் கொண்டு தான் அளந்து பார்க்க வேண்டும் என்று அறிவித்தார்.

போரியர், செயின்ட் - சைமன், ஓவென் ஆகியோர் முதலாளிய பொருளாயத்தின் நன்மைத் தீமைகளை வெளிப்படுத்தினர்; அதில் ஆட்சி செலுத்திய அட்டூழித்தையும், போரியர் குறிப்பிட்டபடி அந்தப் பொருளியலில் நிலவும் நெருக்கடிகளான "மிகுதி நெருக்கடிக" ளையும் வெளிப்படுத்தினர். முதலாளிய சமுதாயத்தின் அறிவுக்கு ஒவ்வாத் தன்மையை விவரிக்கும் போது, முதலாளியத்தின் கீழ் ஆக்கத் துறையில் எந்திரங்களைப் புகுத்திய தன்றன் தொழிலாளர்களின் உழைப்பை எளிதாக்குவதற்கு மாறாக, அதனை இழிவு படுத்தத்தான் செய்தது என்று ஓவென் எழுதினார். ஐம்பதாண்டுகட்கு முன்னால் அறுபதாயிரம் பேர் பெருக்கம் செய்த அதே அளவை இப்போது இரண்டாயிரத்து ஐந்நூறு தொழிலாளர்கள் பெருக்கம் செய்தனர்; ஆனால் இந்த வேறுபாட்டை ஆக்கம் என்ற வடிவில் ஆலை முதலாளிகளும் தொழிற்சாலை உடைமையாளர்களும் பறித்துக் கொண்டு விட்டனர். தொழிலாளிகளைப் பொறுத்த வரையிலோ, அவர்கள் விளைவு செய்த செல்வம் அவர்களுக்கு இழப்பையும் துன்பத்தையும்தான் கொண்டு வந்தது.

19ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் கனவுலகச் சமண்மைக்கு முந்நூறு ஆண்டுகள் அகவையாகியிருந்தது. மேலும் அந்த சமண்மையர்கள் நடப்பில் உள்ள நிலைமைகளை திறனாய்வு செய்து, ஒரு குறிக்கோள் சமுதாயத்துக்கான திட்டங்களை வரைந்து காட்டிய அதே சமயத்தில், அவர்கள் நல்லொழுக்க அறிவுரையும் செய்ய முனைந்து விட்டனர். பழமை நல்லொழுக்கத்துக்கு எதிரானதென்றும் அறிவித்தனர். சில சமயங்களில் அவர்கள் நல்லொழுக்கத்துக்குத் துணையாக அழகியல் முறையான கண்டனத்தையும் தெரிவித்தனர்; அதன் மூலம் குறிக்கோள் சமுதாயத்தின் இன்றியமையாமையை அழகியல் நிலைகளிலிருந்தும் ஆதரித்தனர். நல் லொழுக்கத் தேவைகள், அழகியல் தேவைகள் ஆகிய இரண்டுமே மாந்த இயல்பிலிருந்து தோன்றுவதாகக் கருதப்பட்டன.

19ஆம் நூற்றண்டின் மாபெரும் கருத்தியல் வாணர்கள் சமுதாயத்தின் சமண்மை மாற்றத்துக்கான தமது திட்டங்களை, பணம் படைத்தோரிடமிருந்து பெறும் பொருளாயத உதவியோடு கூடிய கருத்துப் பரப்புதலின் மூலமே நிறைவேற்றிவிட முடியும் என்று நம்பினர். இந்தக் கருத்துகளெல்லாம் முறையானவை யென்றும் என்றும் மாந்த இயல்புக்குப் பொருத்த மானவை என்றும் திண்ணமாகக் கருதினர். மக்கள் இவற்றுக்குச் செவி சாய்க்காமல் இருக்க முடியாது என்றும் அவர்கள் உணர்ந்தனர். போரியரும் செயின்ட்-சைமனும் தமது கனவுலக சமுதாயத்தில் முதலாளிகளுக்கும் வங்கியாளர்களுக்கும் ஒரு தனித்தொரு இடத்தைக் கூட ஒதுக்கி வைத்திருந்தனர்; அவ் இடத்தில் அவர்கள் உழைக்கும் கட்டாயத்திலிருந்து விடுபட்டு தமது தனியார் உடைமை உரிமையோடு இருக்க முடியும்.

செயின்ட் - சைமன் நெப்போலியன் மீது நம்பிக்கை வைத்திருந்ததுபோல், அல்லது விக்டோரியா பேரரசியிடத்திலும், உருஷ்ய நாட்டின் முதலாம் நிக்கொலாசு பேரரசரிடத்திலும் ஓவென் முறையிட்டுக் கொண்டிருந்ததைப்போல், முதலாளிய ஒப்புறவில் ஒருவர் நம்பிக்கை வைப்பாராயின், அவர் பெரிதும் சூதுவாது அறியாதவராகவே இருக்க வேண்டும். ஓவெனே ஒரு முதலாளிதான்; அவர் ஈகம் செய்ய அணித்தாயிருந்தார்; உண்மையில் ஈகமும் செய்தார். முதலாளிகளும் மாந்தத் தன்மை கொண்டவர்கள் என்று அவா நம்பினார்; அதனால் மீண்டும் "மாந்த இயல்பே" ஒரு தன்மையான பங்கை வகிக்கப் போவதாக அவர் கருகினார். அதுதான் அவரது பொன்னான நம்பிக்கையாயிருந்தது.

செயின்ட் - சைமன் காலமானவுடனேயே அவரின் தொண்டர்கள் இறுதி மாற்றம் செய்வதற்கான தேவை வந்து விட்டது என்று எழுதினார்; ஒழுக்கவாணர்களின் கடமை அடிப்படையை நிறுவுவதே; பின்னர் அதனை ஆணையாக்குவது சட்ட அமைப்பாளரின் கடமையாகும் என்று எழுதினர்.

இதனால் ஏற்பட்ட விளைவுகள் என்ன? சமன்மை கொள்கைகள் இன்னும் வாகைக் கோட்டைகளாகத்தான் இருந்து வந்தன; கனவுலகநாடு எல்லாம் வியப்புக்குரியதாயின எனினும் அடையமுடியாத குறிக்கோளாகவே இருந்தன. அவை உண்மையில் அரிய உயரிய கொள்கைகள்தாம்; பிற்காலத்தில் வேறுபட்ட சூழ்நிலையிலும், வேறுபட்ட வழிகளிலும் நடைமுறை வாழ்வில் எய்தப் பெற்ற பல கருத்துகள் அவற்றில் இருக்கத் தான் செய்தன.

மாந்தன் தனது தேவைகளை நிறைவு செய்து கொள்ளவும், தான் பிறந்த இனத்தின் பயனாலன்றி, தனக்குரிய திறைமகளின் காரணமாகவே ஓர் இடத்தைப் பெற்றுக் கொள்ளவும் கூடிய வழிவகைகளை வழங்கும்

ஒரு சமுதாய அமைப்பே, சமுதாய முன்னேற்றத்துக்கு மிக முதன்மையான அளவு கோல் ஆகும் என செயின்ட் - சைமன் கருதினார். இந்தச் வழிவகைகள் தொழில் மயமான ஒரு சமுதாயத்திலேயே உருப் பெற முடியும் என்றும் அவர் நம்பினார். அனைத்து மக்கள் உழைப்பு, மையப்படுத்தப்பட்ட பொருளியல் செயலாக்கம், மக்கள்மீது அரசாட்சி என்பதற்குப் மாற்றாக பொருள்களின் மீது அரசாட்சி (இதன் மூலம் பொருளாதாரத்தில் அரசியல் களையப்படும்) ஆகியவை இந்தச் சமுதாயத்தின் சிறப்பியல்புகளாக இருக்கும், செயின்ட் - சைமன் தமது தொழில்மயமான சமுதாயத்தில் தனியார் உடைமை, முதலீடு, ஆக்கம், ஆகியவற்றுக்கும். அதேபோல் உடல் உழைப்புக்கும் மூளை உழைப்புக்கும் உள்ள வேற்றுமைக்கும் இடம் அளித்திருந்தபோதிலும், அந்தச் சமுதாயம் அதன் மக்கள் அனைவருக்கும் அரும்பெரும் வளத்தையும் மகிழ்ச்சியையும் அறத்தையும் உறுதிப் படுத்தும் ஆற்றல் படைத்தது என நம்பினார்.

ஆனால் தனியார் உடைமையைக் காப்பாற்றி வைத்திருந்தால், "மக்கள் மீது அரசாட்சி"என்பதற்கு மாற்றாகப் "பொருள்களின் மீது அரசாட்சி" என்ற நிலையைக் கொண்டு வருவது முற்றிலும் அருஞ்செயமாகும். இந்தக் கூறுதான் அவர்களது மாபெரிய குறிக்கோளுக்கும் அதன் கருத்தியல் தன்மைக்கும், நடைமுறை நோக்கு சற்றுமில்லாத் தன்மைக்கும், அவர்கள் கூறிய வழிகளில் அதனை நிறைவேற்ற இயலாத் தன்மைக்கும் உள்ள முரண்பாட்டை தெள்ளத் தெளிவாகப் புலப்படுததுகின்றது.

போரியரின் கொள்கையிலும் இதே இடை வெளியைத்தான் காண்கிறோம்; அதாவது எதிர்காலத்தைப் பற்றிய மாபெரும் திட்டத்தின் அடிப்படையில் அவற்றைச் சற்றும் எய்த இயலாத

தன்மையையும்தான் காண்கிறோம். போரியரின் குறிக்கோளான சமூக மனிதரின் சமுதாயம் "இசைவான" கோட்பாடுகள் நடைமுறையில் செய்யப்பட்டுவரும் சமுதாயமாகும்: அங்கு ஒவ்வொரு தனி மனிதனும் தன்னைச் சுற்றியுள்ள உலகத்தின் மகிழ்ச்சிக்குப் பொருந்திய வகையில் தனது இன்பத்தைத் தேடிக் கொள்கிறான். ஆக்க உழைப்பில் எல்லோரும் பங்கெடுப்பதால், உழைப்புக்கும் முதலீட்டுக்கும் உள்ள வேற்றுமையை ஒழிப்பதும் உறுதியாகிறது; மேலும், உழைப்பில் எதிரீடு ஏற்படுவதற்கும், உழைப்பை நாலாவகையாக்கும் விருப்பம் தோன்றுவதற்கும், அதேபோல் போரியர் "ஆர்வர்" என்று குறிப்பிடுகின்ற, பொருள்களைப் படைப்பதில் தடுக்க முடியாத அந்தச் சமூக மாந்தரின் சமுதாயம் இந்த ஆங்வங்களை நிறைவு செய்வதற்குத் தேவையான நிலைமைகளை யெல்லாம் உருவாக்குகிறது. வேறு பல கூறுகளோடு அது மாந்தனின் வேலை செய்யும் உரிமையையும் உறுதிப்படுத்துகின்றது. அறிவியல், தொழில் நுட்ப அடிப்படையில் அமையும் பொருளியல் வளர்ச்சி அங்கு அனைத்து பொருளாயத வறுமையையும் போக்கிவிடும். அங்கு நகர்ப்புறத்துக்கும் சிற்றூர்ப் புறத்துக்கும் வேற்றுமை இல்லை; பெண்கள் வீட்டு வேலைச் சுமைகளிலிருந்து விடுபட்டிருப்பர்; அதனால் சமுதாயத்தில் சரிசமமான இடத்தைப் பெற்றிருப்பர். பிள்ளைகள் சமுதாய உழைப்பின் அடிப்படையில் வளர்ந்து ஆளாக்கப்படுவர்; மேலும் மக்களின் நடத்தைக்கு மாபெரிய நல்லொழுக்கங்களே வழி காட்டும் கோட்பாடாகும் எனப் வெளிப்படுத்தப் பட்டிருக்கும்.

போரியர் சமூக மாந்தரின் சமுதாயம் பற்றிய ஒரு விரிவான திட்டத்தையே தீட்டிவிட்டார். அது ஓர் உலக சமுதாயமாக இருக்கும்; அதில் பல்வேறு சமன்மைக் கூட்டுக் குடும்பங்கள் - பலாங்கிகள் - ஒன்றோடொன்று

தன்னிச்சையான ஒப்பந்தம் செய்து கொள்ளும் அடிப்படையில் முழுமையான ஒற்றுமையைப் பெற்றிருக்கும். இந்தப் பலாங்கிகள் (2000 பேர்வரையிலும் கொண்ட) ஒப்புநோக்கில் குறைந்த உறுப்பினர் தொகையைக் கொண்ட பொருளாக்க - பயனீட்டுக் கழகங்களாக ஒன்று பட்டிருப்பர். அத்தகைய கூட்டுக் குடும்பத்தில் தொழிற் பட்டறைகள், படுக்கையறைகள், உணவருந்தும் அறைகள், பள்ளிக் கூடங்கள் முதலியவற்றைத் தன்னுட் கொண்ட ஒரு பெரிய கட்டிடத்தில் - பலாங்கிக் கூடத்தில் - வாழ்க்கை ஒருமுகப்படுத்தப் பட்டிருக்கும். உழைப்பைப் பலவிதமாக்குவதற்காக, மக்கள் தமது விருப்பம் போல் தொழில்களை மாற்றிக் கொள்வர். உழைப்பு மகிழ்வின் ஊற்றாக மாறிவிடும். பணக்காரர்களையும் உள்ளிட்ட அனைத்து மக்களும் அங்கு உழைப்பர் என்று போரியர் கூறியபோது அவர் இந்த உண்மையைத் தான் பெரிதும் நம்பியிருந்தார்.

ஓவெனின் கொள்கை ஓரளவு வேறுபட்டதாகும். முதன் முதலாக அவரது "அறிவார்ந்த சமுதாய அமைப்பு" தனியார் வகுப்புகளற்ற அமைப்பாகும். அத்தகைய அடிப்படையில் எந்திரங்களின் அற்புதமான ஆற்றல் பெரு வளத்தை உறுதி செய்யும். புதிய சமுதாயத்தின் கருவான - சிறிய உழைப்பாளர் கூட்டுக் குடும்பத்தின் - ஒவ்வோர் உறுப்பினரும் தமக்குத் தேவையானதை யெல்லாம் பெறுவார். எந்திரத் தொழில் உழைப்புக்கும் பண்ணை உழைப்புக்கும், நகரத்துக்கும் சிற்றூர்க்கும் உள்ள வேற்றுமைகளோடு, உடல் உழைப்புக்கும் மூளை உழைப்புக்கும் உள்ள வேற்றுமையும் முற்றிலும் மறைந்துவிடும்.

ஓவெனது கருத்துகளின் மிகப்பெருந் தன்மை குறிப்பிடத் தக்கதாகும். எனினும் அதே நேரத்தில்

நிகழ்கால சமுதாயத்தின் துன்பங்களுக்கெல்லாம் பகிர்வு முறையே ஒரே காரணமாகும் என ஒவென் கருதினார். எனவே பண மாற்றுக்கு மாற்றாக நேரடியான பண்டமாற்று முறையைக் கொண்டு வந்து விட்டால், இந்தத் துன்பங்களை வெற்றி காண்பது ஏற்றதாகிவிடும் என்று நம்பினார். ஏனைய எல்லா கனவுலக சமன்மையர்களையும் போலவே, ஒவெனும் மக்களின், தொழிலாளி வகுப்பின் படைப் பாற்றலில் நம்பிக்கை வைக்கவில்லை; அவர் முதலாளிகளையே நம்பினார். அவர் வகுத்துள்ள சமுதாய அமைப்பு அவர்களுக்கும் நன்மை பயக்கும் என்று என்று கருதினார்.

அனைத்து சமன்மை பொதுவுடைமைக் கொள்கை களையும் விளக்குவது நமது நோக்கமல்ல. இதேபோல் பிற நாடுகளிலும் பிற புகழ் பெற்றவர்கள் இருந்தனர். சாடன்றாக, மெசுலியர் போன்ற சில கனவுலக நாட்டின் எழுத்தாளர்கள் பொதுமக்கள் புரட்சியின் மூலமே சமன்மை குறிக்கோளை எய்த முடியும் என்று கருதினர். அவர்களில் 19ஆம் நூற்றாண்டின் சிறப்பு வாய்ந்த உருசியச் சிந்தனையாளரான என். சி. செர்னிசெவ்சுகியும் ஒருவர். ஆனால் இத்தகைய கொள்கைகள் அனைத்தும் கருத்துருவத்தில் பல திட்பமான கூறுகளில் பிழையாகவே இருந்தன.

பொதுவாக, இத்தகைய ஆசிரியர்களெல்லாம் ஓர் கருத்தியல் சமுதாயம் வடிவத்தோடு "இருக்கக்கூடிய இடமாக" மாறிவிட முடியும் எனக் கருதினர். சான்றாக, 1823இல் செயலாய்வுக்கான ஒரு பலாங்கிக் கூட்டுக் குடும்பத்தை நிறுவினால், அது மறு ஆண்டிலேயே செயல்படத் தொடங்க முடியும் என்றும், 1828-க்குள் சமுதாய மாற்றம் நிறைவாகிவிடும் என்றும் போரியர் நம்பினார். ஒவெனுக்கோ பொதுவுடைமை அடிப்படையில் ஒரு சமுதாயத்தைக் கட்டி யமைக்க கூடிய

வரை பத்தாண்டுக் காலமே போதுமானதாகத் தோன்றிற்று. இத்தகைய சமுதாயத்தை உருவாக்குவதில் உண்மையிலேயே முனைந்து ஈடுபட்டவர்களும் - இந்தச் சிந்தனையாளர்களும் அவர் தம் ஆதரவாளர்களும் - இருந்தனர்.

செயலாய்வுகள்

1832 செப்டம்பரில் ஒரு " சமூக மனிதரின்" வேளான் தொழில் துறைக் குடியிருப்பின் நூற்றாண்டு விழா பாரீசு நகரின் சுற்றுப்புறப் பகுதிகளில் கொண்டாடப்பட்டது. அந்தக் குடியிருப்பை, போயெர் உயிரோடு இருந்த காலத்திலேயே முனைவர் பாடெட் - டுல்லாரிலின் என்பவர் கான்டி - சுர் வெசுகிரே என்ற தமது பண்ணையில் நிறுவியிருந்தார். அதே சமயத்தில், கசுஸ் என்னுமிடத்தில் ஒரு சிறிய இரும்புத் தொழிற்சாலையின் அடிப்படையில் காடென் என்பவர் 1859-க்கும் 1865-க்கும் இடையில் கட்டிய பாமிலிசுடெர் என்ற குடியிருப்பும் இருந்து வந்தது.

அந்தக் குடியிருப்பு வெற்றிகரமாக நடந்து வந்ததா? அந்தோ! கான்டி - சுர் - வெசுகிரேயில் இருந்த "சமூக மாந்தரின் குடியிருப்பு" ஏதோ ஒரு வகையான கூட்டுறவு விடுமுறைக் கால விடுதியைப் போல் எப்போதோ உருமாறிப் போய்விட்டது; ஆக்கம், பகிர்வு, பண்டப் பயன்பாடு, பண்பாட்டு நடவடிக்கைகள் அனைத்தையும் சமன்மை அடிப்படையில் மாற்றியமைப்பதற்காக நிறுவப்பட்டிருந்த பாமிலிசுடெர் குடியிருப்பினர்களோ அனைத்து வகுப்புப் போராட்டங்ளிலும் உழைப்பாளி வகுப்பின் எதிரிகளாகவே செயல் பட்டனர்.

போரியரின் கருத்துகளிலிருந்து விலகிச் சென்றதுதானா இத்தகைய தோல்விக்குக் காரணம்? கான்டி - சுர் - வெசுகிரேயில் இருந்த குடியிருப்பு எந்தக்

கோட்பாடுகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டதோ, அந்தக் கோட்பாடுகளை போரியர் முழுமையாக ஒத்துக்கவில்லை என்பதும், காடென் அமைத்த பாமிலிசுடெரும் போரியரின் திட்டத்தில் ஒரு பகுதியைத்தான் பின் பற்றியது என்பதும் தெரிந்த செய்தியே.

ஆனால், நாம் ஓவெனின் செயலாய்வினையைப் பார்ப்போம். அவர் 1824இல் அமெரிக்கர்விலுள்ள இன்டியானாவில் "புதிய ஒற்றுமை" என்ற பெயரில் ஒரு சமன்மைக் குடியிருப்பை நிறுவினார். சுமார் 800 பேர் (ஒரு சிறந்த சமன்மைக் கூட்டுக் குடும்பத்தில் 800 முதல் 2000 பேர் வரை இருக்கலாம் என்ற ஓவெனின் கருத்துக் கேற்ற தொகைதான் இது). ஐரோப்பாவின் பல திசைகளிலிருந்தும் அமெரிக்காவுக்கு வந்து சேர்ந்தனர். (அவர்களில் அமெரிக்க நிலவியலின் தந்தையான வில்லியம் மக்லூர், அமெரிக்க உயிரியல் தந்தையான தாமசு சே, தச்சுப் நிலவியலாளரான த்ரூட், பிரஞ்சுத் தாவரவியல் அறிஞரான சார்லசு லெஸ்சூர் எட் அல் ஆகிய அறிவியலார்களின் வருகையை ஓவென் மிக இன்றியமையாததாக நம்பியிருந்தார்).

அந்தக் குடியிருப்புக்கு ஓகியோ ஆற்றின் கிளையாறு, கப்பல் போக்குவரவுக்கு உதவக் கூடியதுமான வபாசு ஆற்றின் கரையில் 30,000 காணி பரப்புள்ள நிலமும் இருந்தது. அந்த நிலத்தை விலை கொடுத்து வாங்கிய காலத்தில் , அதில் சாகுபடி செய்யப்பட்டு வந்த வயல்களும், பழத் தோட்டங்களும், கொடுமுந்திரித் தோட்டங்களும் இருந்தன; அத்துடன் தொழிற் பட்டறைகளும் குடியிருப்பு ஏந்துகளும் கூட இருந்தன.

"புதிய ஒற்றுமை" ஓவெனின் திட்டப்படி ஒழுங்கமைக்கப்பட்டது. 1825ஆம் ஆண்டு மே முதல் நாளன்று முழுநிறைவான கூட்டு குடும்பத்துக்கான

அரசியல் சட்டமானது ஓவென் தீட்டிக் கொடுத்த வண்ணம் அப்படியே நிறைவேற்றப்பட்டது. அந்தக் கூட்டுக் குடும்பத்தின் வாழ்க்கை விரிவாக்கங்களின் போது உடைமை, உழைப்புக்கேற்ப பகிர்வு ஆகிய அடிப்படையில் அமைக்கப்பட்டிருந்தது. ஒரு பொதுவுடைமைக் கழகமாக மாறுவதே அந்தக் கூட்டுக் குடும்பத்தின் குறிக்கோள் என அறிவிக்கப்பட்டது. இந்த மாறுதலுக்கான காலம் மூன்றாண்டுகள் என குறிக்கப்பட்டது. ஆனால் 1820ஆம் ஆண்டின் தொடக்கத்திலேயே குடியிருப்பின் வளர்ச்சி திட்டமிட்ட இலக்குகளையும் மிஞ்சிக்கொண்டு வளர்ந்து விட்டதாகவும், பொதுமைக் குறிக்கோளை எய்துவதற்கு எல்லாம் அணியமாகி விட்டதாவும் ஓவென் தீர்மானித்துவிட்டார். பிப்ரவரி 5ம் தேதியன்று பரிபூரண சமன்மை கொண்ட கூட்டுக் குடும்பத்துக்கான சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதில் புதிய கூறு என்னவெனில், சமுதாய உடைமையைத் தவிர ஒவ்வொருவரும் உணவையும் உடையையும் உறையுளையும் பெறும் உரிமையும், அத்துடன் அவர் எந்த அளவுக்கு வேலை செய்பவராயினும் அவரது வாழ்வுக்கான உரிமையும் இதன்மூலம் வழங்கப்பட்டது. அனைத்து தண்டனை களும் அன்பளிப்புகளும் ஒழிக்கப்பட்டன. சட்டம் செய்யும் அதிகாரம் பொதுருக் குழுவுக்கு உரியது; செயலாட்சி அதிகாரம் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவுக்கு உரியது; அமைப்புக்குழு பொதுக்குழுவுக்கு வாரா வாரம் அளிக்க வேண்டும்.

இவ்வாறெல்லாம் இருந்த போதிலும், பிணக்குகள் விரைவிலேயே தோன்றிவிட்டன. அரசியல் சட்டம் ஒருமனதாக நிறைவேற்றப்படவில்லை. முதலில் "புதிய ஒற்றுமை"யிலிருந்து இரு கூட்டுக் குடும்பங்கள் விலகிச் சென்றன; 1827 மார்ச்சில் மேலும் இரண்டு குடும்பங்கள்

பிரிந்துவிட்டன, "புதிய ஒற்றுமை"யிலேயே எந்த வகையான ஒருமித்த கருத்தும் இல்லை; 1828ஆம் ஆண்டில் ஓவென் தோல்வியை ஒப்புக்கொள்ள நேர்ந்தது. ஆனால் அதற்கு மூன்றாண்டுகட்டு முன்னர்தான் அவர் வாசிங்டனில் பேசியபோது, "புதிய ஒற்றுமை" ஒரு புதிய காலத்தின் தொடக்கம் என்று கூறினார்; அதன் பட்டறிவானது அறிவாளிகளின் சிந்தையையும் அனைத்து அரசாங்கங்களையும் தெளியவைக்கும் என்று தாம் உறுதியாக நம்புவதாகவும் தெரிவித்தார்.

"இக்கேரியன்" பொதுவுடைமை வரலாறோ முற்றிலும் துயரமாக முடிந்தது.

1840ஆம் ஆண்டில் பாரீசு நகரில் எட்டியென்னி கேபட் என்பவர் இக்கேரியாவுக்கு உலா என்ற தமது "மெய்யியல், சமுதாய" நாவலை வெளியிட்டார். தொன்மக்கதையில் வரும் இக்கேரசு தன் தந்தை தாடலசு தனக்கென உண்டாக்கிக் கொடுத்த இறக்கைகளின் உதவியால் கிரீட் இலாபிரிந்த்திலிருந்து பறந்து செல்கிறான். பொதுவுடைமை அடிப்படையில் உருவாக்கப்பட்டதொரு உரிமைச் சமுதாய வடிவத்தை வடித்தெடுத்துக் காட்ட இந்தக் கற்பனைக் கோட்டுக்கு உதவியது.

கேபெட் இக்கேரசின் இறப்பையும் எண்ணிப் பார்த்திருக்கவேண்டும். அடிமைத்தனம் மேலாதிக்கம் செலுத்தும்போது எவரும் உரிமையாக இருக்கமுடியாது. "புதிய ஒற்றுமை"யைப் பற்றிய கதையை ஓவெனிடமிருந்தே கேட்டுத்தெரிந்து கொண்ட கேபட் அதன் தீவினையான பட்டறிவையும் கருதிப் பார்த்திருக்க வேண்டும். ஆனால் ஓவெனை நேரில் காணுவதற்கென்றே கேபட் லண்டனுக்குப் புறப்பட்டுப் போன காலத்தில், ஒருவேளை ஓவென் அவருக்கு நம்பிக்கையூட்டும் வகையில் பேசினாரோ என்னவோ?

எவ்வாறாயினும், 1847 மே மாதத்தில் கேபட் இக்கேரியாவுக்குப் புறப்படுங்கள்! என்ற வேண்டுகோளை வெளி யிட்டார். அந்த வேண்டு கோள் சொத்துக் களெல்லாம் பொதுவாக இருக்கும், பகிர்வுகளெல்லாம் தேவைகளின் மூலம் செயல்படுத்தப்படும் ஒரு "புதிய துறக்க"த்தில் குடியேற வருமாறு விடுத்த அழைப்பாகும். 1848 பிப்ரவரி 3-ஆம் நாள் ரோம் என்ற கப்பல் "முதல் முன்னணிப்படை"யான 69 இக்கேரியர் களைச் சுமந்து கொண்டு, ஆவ்ரேயிலிருந்து அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றது. 'கேபட் பாப்புலேர்' என்ற தாளிகையில் எழுதிய வண்ணம், "மாந்த வரலாற்றின் மாபெரும் துணிகர முயற்சி" தொடங்கியது. "இக்கேரியாவிலிருந்து ஏராளமான புதிய தேனீக்கள் உலகை மாற்றியமைப்பதற்காக உலகமெங்கனும் பறந்து செல்லும்" என்று கேபட் நம்பினார்.

இக்கேரியாவின் கதையை விரித்துச் செல்வதில் எவ்விதப் பொருளும் இல்லை. அது தொடர்ச்சியாகத் தோல்விகளையே கண்டு வந்தது என்று சொன்னால் போதும். அமெரிக்காவுக்குச் சென்ற இரண்டாவது முன்னணிப் படை"யில் 1,000 முதல் 1,500 பேர் போவார்கள் என்றே கூறப்பட்டது; ஆனால் 19 பேர் தான் சென்றனர். ஆக மொத்தம் அந்தப் புதிய கூட்டுக் குடும்பத்தில் கேபட்டின் தலைமையில் 487 பேரே இறுதியில் சேர்ந்திருந்தனர். அதிலும் அந்தப் "புதிய துறத்தை" உருவாக்குவதற்கான தொடக்க முயற்சிகளைத் தொடங்கு முன்பே, இக்கேரியன் சமுதாயத்திலிருந்து 200 பேர் விலகிச் சென்று விட்டனர். இக்கேரியர்களின் எண்ணிக்கை ஒரு முறை அதிகரிப்பதாகவும் மறுமுறை குறைவதாகவும் நிலையில்லாமல் மாறிக் கொண்டே யிருந்தது; அதன் பொதுவுடைமைக் குறிக்கோளோ என்றும் போல் எட்டாக் கனியாகவே இருந்து வந்தன. இடையறாத பிணக்குகளால் கேபட்டே தமது இறப்புக்குச்

சிறிது காலத்துக்கு முன்னர் இக்கேரியன் சமுதாயத்திலிருந்து வெளியேற்றப் பட்டு விட்டார்.

"இளம் இக்கேரியா", "புதிய இக்கேரியன் மன்றம்", "இக்கேரியா நம்பிக்கை" ஸ்பெரன்ஜா என்பன போன்ற பற்பல பெயர்களில் சிறு இக்கேரியன் சமுதாயங்கள் பல்வேறு இடங்களில் இடையிடையே தோன்றின. இவற்றில் இக்கேரியா நம்பிக்கை கூலிக்கே ஆட்களை அமர்த்தியதன் மூலம் குழிமூடிப் போய் விட்டது; அதில் அதில் கம்யூனிச் முறை உண்மையில் முதலாளிய முறையாகி விட்டது.

வேறு பல ஆய்வுகளும் நடந்தன. அமெரிக்காவிலுள்ள புரூக் பார்ம் என்ற இடத்தில் செயின்ட்-சைமன் கூட்டுக் குடும்பம் ஒன்று உருவாக்கப்பட்டது; "சமுதாயப் ஆய்வுக்கான சிற்றூர்ச் சிறுவர்களின் இல்லம்" என்றழைக்கப்பட்டதும், பிரான்சில் 22 ஆண்டு காலம் இருந்து வந்ததுமான டாக்டர் சூவானின் கழகத்தைப் பேன்ற மோரியரிசுடுக் கழகங்களும் இருந்தன; மற்றும் (இசுகாத்லாந்திலிருந்த ஒரு பிசுடோன் கூட்டுக் குடும்பம், அயர்லாந்தில் கார்க்கிலிருந்த இரோலாகின் கூட்டுக் குடும்பம், இலண்டனிலும் ப்ர்மிங்காமிலும் ஓவென் உருவாக்கிய பண்ட - மாற்றுச் சந்தைகள் ஆகிய) ஓவெனிஸ்டுக் கூட்டுக் குடும்பங்களும் இருந்தன.

இந்தச் செயல்முறை முயற்சிகள் அனைத்தும் படுதோல்வியிலேயே முடிவடைந்தன; இந்த முடிவு "உட்டோப்பியன்" சமன்மையின் முழு மாயைத் தன்மையைத்தான் மெய்ப்பித்தது.

1726ஆம் ஆண்டில் இத்தாலிய மெய்யியல்வாணர் கியாம் பட்டிசுடர் விக்கோ "மனித நிலை மாந்தனில் காணப்படும் தெய்வக்கூறாகும்" என உறுதிப் படுத்தினார். இதன் மூலம் நிலை என்பது ஒரு தெய்வப் பிறவியால்

முழுமையாக முன் கூட்டியே சிந்தனை செய்யப்பட்டு விட்ட ஒன்றாகும் என்ற வரலாறு பற்றிய கருத்தினை மறுத்தார்.

விக்கோவுக்குப் பின்னர் 18ஆம் நூற்றாண்டின் முதலாளித்துவ அறிவியக்க வாணர்கள் அனைத்து சமுதாய நிறுவனங்களையும் "பகுத்தறிவால் ஆய்வு" செய்யப் படவேண்டுமென அறைகூவல் விடுத்தனர். அவை அறிவுக்குப் பொருந்தாதவை எனக் கண்டனர்; எனவே பழைய நிலக் கிழார்வ உறவுகளுக்கு மாற்றாக முதலாளிய உறவுகள் இடம் பெற வேண்டுமெனக் கோரினர். மாந்த அறிவும் நல்லொழுக்க நெறிகளுமே உலகத்தை மாற்றியமைக்கும் தன்மை படைத்தவை எனக் கருதி வந்த 19ஆம் நூற்றாண்டின் சமன்மைகளின் மனமயக்கங்களை யெல்லாம், மக்களுக்கு எந்த நன்மையும் செய்யாத முதலாளிய புரட்சியின் விளைவுகளும், "இல்லாத இடங்"களாகவே இருந்து வந்த 16 - 18 நூற்றாண்டுகளின் எண்ணிறந்த உட்டோப்பியாக்களும் போக்கி யிருக்க வேண்டும் என்றே கருதத் தோன்றும். ஆனால் சமன்மை சமுதாய மாற்றத்தைக் கொண்டு வரும் ஆற்றலைப் படைத்த காலம் அதற்குள் பிறப்பித்துவிட வில்லை. எனவே மனித அறிவு, மனித இயல்பு ஆகிய "நிலையான" தன்மைகளையே சிந்தனையாளர்கள் அப்போதும் நம்பி வந்தனர்.

தீவினை காரணமாக வரலாற்றுக்கு அப்பாற்பட்டு விளங்கும் "மனித இயல்பு", மனித அறிவின் கூர்மையான தேவைகள், இனங்களைக் கடந்து நிற்கும் தூய இயற்கையான நல்லொழுக்கம் என்றெல்லாம் எதுவும் கிடையாது.

கடந்த காலத்தில் சமன்மை, பொதுவுடைமைக் கொள்கைகளின் உட்டோப்பியன் தன்மையைத் தெள்ளத் தெளிவாக்குவதில் இணை பிரிக்க வொண்ணாத இரு

கூறுகள் இடம் பெற்றிருந்தன. அவை: நல்லொழுக்க நெறி, பகுத்தறிவு, மாந்த இயல்பு ஆகியவற்றின் மீது மட்டும் அவர்கள் வைத்த நம்பிக்கைகளும் நன்னெறி மொழிகளும் ஒரு கூறு; பொதுவுடைமை அடிப்படையில் சமுதாயத்தை மாற்றியமைக்கும் ஆற்றல் படைத்த, வரலாற்றின் மூலம் அவ்வாறு செய்து முடிக்கும் வாய்ப்பினைப் பெற்றிருந்த ஒரே உண்மையான ஆற்றலை, அவர்கள் மக்களிடத்திலும், அதற்கும் மேலாக தொழிலாளி வகுப்பிலும் சற்றேனும் இனங்காண முடியாது போன ஏலாத்தன்மை மற்றொரு கூறாகும்.

கருத்தியல்வாணர்களின் இரக்கமெல்லாம் பொது மக்களின் பால், தொழிலாளி வகுப்பின்பால், இருந்தது என்பது உண்மை. எனினும் அவர்கள் அம் மக்களைச் சுரண்டலுக்குரிய பொருளாகத்தான் கருதினர்களே யன்றி, வரலாற்றுக்குரியவர்களாகக் கருதவில்லை.

(காம்பனெல்லா தொடங்கி) சமன்மை எழுத்தாளர்கள் பலரும் தொழில் நுட்ப முன்னேற்றத்தை யும் உயர்வான உற்பத்தித் தரத்தையும் பொதுவுடைமை யோடு சரியாகவே தொடர்புப் படுத்திக் கூறினர். அவர்களில் சிலர் (செயின்ட் - சைமன், போரியர்) நடைமுறை முன்னிட்டு வரலாற்று வளர்ச்சி கருத்துக்கள் மூலம் "மனித அறிவின் கோரிக்கைகளை" வரையறுக்கவும் கூட முயன்றனர்; சமன்மையை ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டத்தில்தான் எய்த முடியும் என்றும் நம்பினர். ஆனாலும் 18-ஆம் நூற்றாண்டின் முதலாளிய அறிவியக்க வாணர்களைப் போலவே, புனைவியல் சமன்மைகளும் தக்கவகையான வரலாற்று வளர்ச்சி பற்றிய தமது முடிவை அதே "மாந்த அறிவின்" அடிப்படையில்தான் அமைத்தனர். ஆனால் அறிவை எது பெருக்கமடையச் செய்தது? குறிப்பிட்ட திசை வழிகளில் வரலாற்றைச் செலுத்திச் செல்லுமாறு அறிவைத் தூண்டியது எது?

வரலாறு அதன் உரிய முறைகளின்படியேதான் வளர்ச்சி பெறுகிறது என்று முதன் முதலில் கூறியவர்களில் விக்கோவும் ஒருவர். ஆனால் அறிவை இயக்கிச் செல்லும் முறைகளை அவரால் கண்டுணர முடியாது போன ஏதுவானால், தெய்வ முடிவால் விதிக்கப் பெற்ற மாற்ற முடியாத முறைகளால்தான் அறிவு பெருக்கமடைகின்றது என்ற முடிவுக்கே விக்கோவும் வந்தார். வேறு வகையாகச் சொன்னால், கடவுள் வகுத்த மாபெரும் திட்டப்படி அமைந்த ஏதோ ஒரு "குறிக்கோள் வரலாறு" தான் இருந்தது. இந்தக் காரணத்தால், "தெய்வ முடிவின் அறிவுக்கொத்த, திருத்தமான சமைய நூல்களை" விக்கோ ஒரு "புதிய அறிவியல்"மாகக் கருதினார்.

அறிவு வளாச்சியின் காரணங்களையும் போக்குகளையும் பற்றிச் சிந்தித்த சில கனவுலகவாணர்களும்-கூட்டாக, போரியர் - இதே முடிவுக்கே வந்தனர்.

இவ்வாறாக, சமன்மை கம்யூனிச குறிக்கோள்களைச் செயலாக்கும் பொறுப்பு தெய்வ முடிவின் பால் சுமத்தப் பட்டு விட்டது. எனவே ஏழைகள் பணக்காரர்கள் என்று வேற்றுமை பாராட்டாமல், எல்லாச் சமுதாய ஆற்றல்களின், அனைத்து மக்களின் ஒற்றுமையின் மீது நம்பிக்கை வைப்பதும் தருக்கமுறையில் பொருத்தமாகவே இருந்தது. இந்தக் கருத்து நிலையிலிருந்து கவனித்தால், பொதுவுடைமை மாற்ற அடிப்படையில் அமையும் சமுதாய ஒற்றுமையை வகுப்புப் போராட்டம் குலைக்கத்தான் செய்யும். இந்தக் காரணத்தாலேயே பாட்டாளி இனம் தனது சொந்த வர்க்கப் போராட்டத்தைத் தொடங்கியவுடனேயே, மாபெரும் உட்டோப்பியர்களின் தொண்டர் கோடிகள் அதற்கு எதிராகக் கிளம்பி விட்டனர்.

மாபெரும் கருத்தியல் வாணர்களின் திட்டங்கள் வரலாற்றின் உண்மையான உள்ளடக்கத்துக்கு மாறாகச்

சென்றன. அவர்களது மாபெரும் குறிக்கோள்களை பொது மக்கள் ஆதரிக்க வில்லை; அவர்களது ஆய்வுகளும் படு தோல்வியடைந்தன.

அறிவினால் எவ்வளவோ நிறைவேற்ற முடியும்; ஆனால் அந்த அறிவு வெளியிடும் கருத்துக்கள் வாழ்க்கையின் எதார்த்தத் தேவைகளை உண்மையாக எதிரொலித்தால் தான் அவ்வாறு முடிக்க முடியும்.

பொதுவுடைமைக் கொள்கையை அறிவியலோடும், அறிவியலைத் தொழிலாளி வகுப்பு இயக்கத்தோடும் இணைப்பது அதற்கு தேவையமாயிற்று.

### பொதுவுடைமையும் அறிவியலும்

### கடலுக்குள் சென்று விழவேண்டுமென்று ஆறுகளுக்கு எப்படித் தெரியும் ?

அவற்றுக்கு தெரியாதுதான். அவை வெறுமனே சென்று விழுகின்றன. வோல்கா காசுபியன் கடலிலும், நைல் நடுநிலக் கடலிலும், இலேனா ஆறு ஆர்க்டிக் கடலிலும், அமெஸான் ஆறு அட்லாண்டிக் ஆழியிலும் சென்று விழுகின்றன. கங்கை, காவிரி, வங்கக் கடலிலும் அவை வெறுமனே விழுகின்றன; விழாமல் இருக்க அவற்றால் முடியாது.

ஏன் அப்படி? ஏனெனில் இயற்கையில் தென்படும் எல்லாப் பொருள்களும் தத்தம் தன்மைகளை-இயல்பு, இயற்பியல்,வேதியல், உயிரியல் தன்மைகளை,- தமக்குரிய உறவுகளை, முறைகளைப் பெற்றுள்ளன. அவற்றை மக்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், அவை மாந்த உணர்வுக்கும் மனத்துக்கும் அப்பாற் பட்டுச் தன்னிச்சையாக இருந்து வருகின்றன. வேண்டுமானால், கிரேக்க நாட்டுப் பைரசும் அல்லது உரோமானிய நாட்டு செக்சுடசு எம்பிரிக்கசும் கூறியதுபோல், தான் அவற்றைச் சற்றேனும் பொருட்படுத்தவில்லை என்று யாரும் சொல்லிவிட்டுப் போகலாம். ஆனால் அவ்வாறு சொல்வதால் எதையும் மாற்றி விட முடியாது.

முறைகளும் தன்மைகளும் உறவுகளும் என்றும் இருந்து வந்ததைப் போலவே இன்றும் இருந்து வரும். மக்கள் இயற்கை முறைகளைப் புறக்கணித்து விட முடியாது; மேலும் அவர்கள் அவற்றுடன் முற்றிலும் பொருந்தித் தான் செயல்பட வேண்டும். அப்போது தான் அவர்கள் தமது குறிக்கோள்களை விரைவாகவும் முழு உறுதியாகவும் எய்த முடியும்.

புராதன காலக் கிரேக்கர்களின் அரிய வியப்பான கதையொன்றை நினைவு கூர்வோம். துரோஜன் போரின் மாபெரும் வீரனான அக்கிலசிஸ் மீது கோபம் கொண்ட அப்பாலோ, அக்கிலஸின் குதியங்காலில் தைக்குமாறு பாரீசின் அம்பை ஏவச் செய்தான் அந்தக் குதியங்கால்தான் அக்கிலசின் உடம்பில் காயப்படக் கூடிய ஒரே இடமாகும்.

கிரேக்கர்கள் தலைவிதியையும் தெய்வத் தீர்ப்பையும் நம்பினர். எனினும் அவர்களது பல தொன்மக் கற்பனை களிலும் கதைகளிலும், மனிதர்கள் மட்டுமல்லாமல் கடவுளர்களும் கூடச் சமயங்களில் புற நிலைத்தன்மை களைக் கருத்தில் கொள்ள வேண்டியிருந்தது என்ற கருத்தும் தலை காட்டுகிறது. கற்பனவுவுலகில் கூறப்படும்போது, இயல்பான தொடர்புகளும் தன்மைகளும் பெரும்பாலும்"அக்கிலசின் குதியங்கால்" வடிவத்தையே பெற்று விடுகின்றன.

இயல்பு முறைகளை அடக்கியாளவும் அவற்றை மாந்தனுக்குப் பணியாற்றச் செய்யவும் வேண்டுபென்றால், முதலில் அவற்றைப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

இதைத்தான் அறிவியல் செய்கிறது.

கருத்துகள், ஊகங்கள், கொள்கைகள் ஆகியவை யெல்லாம் இயற்கை முறைகளோடு பொருந்தியிருந்தால்

தான் அறிவியலில் இடம் பெறுகின்றன. ஏறக்குறைய நானூறு ஆண்டுகளுக்கு முன் உலகைப்பற்றிய பருதி மண்டலக் கருத்தை வகுத்துக் கூறிய கோப்பர்னிக்கஸின் நூலை வாட்டிகன் திருச்சபை தடை செய்து விட்டது. கோப்பர்னிக்கசின் தெய்வப் பழிப்பான கொள்கையை மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்க மாட்டோம் என்று வானியல் பேராசியர்கள் வாக்குறுதி கொடுக்க நேர்ந்தது. அந்தப் புத்தகம் படிக்கப் படவில்லை; எடுத்துக் கூறப்படவில்லை; அத எரிக்கவும் பட்டது. ஆனால் கோப்பர்னிக்கசின் கொள்கை சரியானதன்று என்று இன்று யார்தான் மறுக்க முடியும்?

ஒரு கருத்தோ கொள்கையோ தவறானால், இயற்கை முறைகளுக்கு முரண்பட்டதானால், அதற்கு எவ்வளவுதான் வலுவான காவலும் தடுத்து நிறுத்த முடியாது. எப்போதும் இயங்கிக் கொண்டிருக்கும் ஓர் எந்திரத்தை உருவாக்க எண்ணுவது மிகவும் கவர்ச்சியான ஆசை தான். இன்றும் கூட இந்த எண்ணத்தைக் கைவிடாதவர்கள் இருக்கத்தான் செய்கின்றனர். சிலரோ அப்படிப்பட்ட எந்திரத்தைத் தாம் உண்மையிலேயே கண்டு பிடித்து விட்டதாகக் கூட நம்புகின்றனர். ஆனால் என்றென்றும் இயங்கிக் கொண்டிருக்கும் எந்திரங்களைப் பற்றிய திட்டங்களை, எந்த ஒரு நாட்டிலுள்ள எந்தவொரு வணிக நிலையமும் ஏறிட்டுப் பார்க்கக் கூடத் அணியமாய் இராது: அவற்றை உருவாக்க முடியாது; ஏனெனில் அவை இயற்கை நியதிகளுக்கு மாறானவை.

சமுதாயத்தையும் கூட, இயல்பு முறைகள் ஆண்டு வரக்கூடுமோ? ஒருவேளை எவரது விருப்பத்தையும் பொருட்படுத்தாமல் ஒரு பொருங்கடலுக்குள் "அதுவும் சென்று விடுகின்றதோ?" அவ்வாறு விழுவதுதான் அதன் வளர்சியின் நடைமுறைப் போக்கோ?

மூரிலிருந்து ஓவென் வரையிலும் கடந்த காலத்தின் அனைத்து கருத்தியல் உலகம் சமன்மையாளர்களும்

அந்தப் " பெருங்கடலை" - அறமும் சமன்மையும் நிலவும் வருங்கால சமுதாயத்தை - தேடியலைந்தனர்; ஆராய்ந் தனர். ஆனால் அந்தக் கடலின் அடியாழத்துக் குள் நடத்திய ஆராய்சி பெரும்பாலும் பிழையாகவே முடிந்தது; அது நடைமுறைக்குகந்ததாக இல்லாதிருந்தது; போதுமான அளவுக்குத் "தகுதி" பெற்றிருக்கவும் இல்லை. அந்த ஆராச்சியாளர்கள் பொதுவுடைமைக்குச் செல்லும் நடைமுறைக்குகந்த வழியைக் காணவில்லை; உண்மையில் அவர்களால் காண முடியவில்லை.

"நடைமுறைக்குகந்தம்" என்று சொன்னால் அது மாந்தர்களின் சித்தத்தையோ, அறிவையோ, விருப்பையோ பொருட்படுத்தாது தானே நிலவிவரும் ஒன்றாகும். அறிவியலின் நிலையை வளர்த்துச் செல்ல, பொதுவுடைமைக் கொள்கையானது வரலாற்று நியதிகளின் ஆதரவைப் பெற்றாக வேண்டும். இந்த நியதிகளை சிறப்புமிக்க மெய்மைவாணர்களும் புரட்சிவாணர்ளும் ஆன காரல் மார்க்சும் பிரெட்ரிக் ஏங்கெல்சும் சென்ற நூற்றாண்டின் 40ஆம் ஆண்டுகளின் போது கண்டு பிடித்த போதுதான் இந்த ஆதரவு கிட்டியது.

மார்க்சும், ஏங்கெல்சும், லெனினும் இவர்களது சீடர்களும் சமுதாய வளர்ச்சியின் எதார்த்த பூர்வமான நியதிகளை ஆராய்ந்தனர்; கம்யூனிசக் கொள்கையை உட்டோப்பியாவிலிருந்து விஞ்ஞான நிலைக்கு உயர்த்தினார்.

**கனவுலக**

**அறிவியலுக்கு**

18ஆம் நூற்றாண்டிலேயே வரலாற்றை ஓர் எதார்த்தபூர்வான வளர்ச்சிப் போக்காக பொருள்

படுத்தும் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. என்பதை நாம் குறிப்பிட்டுள்ளோம். அம் முயற்சிகள் அனைத்தும் தோற்றுப்போயின. ஏனெனில் அவை அனைத்தும் வரலாற்று வளர்ச்சியை மாந்த அறிவின் வளர்ச்சியாகவும் முழுநிறைவாகவும் கருதின; இந்தக் கருத்தினால் அதனை நன்மை தீமை பற்றிய கருத்துகளின் வளர்ச்சியாகவும் கருதின; இந்தக் கருத்து வளர்ச்சியே அனைத்து வரலாற்று மாற்றங்களிலும் தீர்மானக் அம்சமாகும் என்ற கருத்தின் மூலமே அணுகித் தோற்றுப் போயின. ஆனால் அந்த அணுகல் முறையில், அறிவும் நல்லொழுக்கமும் வளர்ச்சி பெறுவதற்கான அடிப்படையைப் பற்றிய வினாக்களுக்கோ, அவை பல்வேறு காலங்களில் பல்வேறு வகையாக இருந்ததன் காரணத்துக்கோ விடை கிட்டவில்லை.

மார்க்சு இந்தக் வினாவை எழுப்பி அவற்றுக்கு விடையும் அளித்தார். மாந்தனின் வாழ்விலும் சமுதாய வளர்ச்சியிலும் அறிவுக்கும் நல்லொழுக்கத் துக்கும் உள்ள பங்கு உறுதியாய் மிகச் சிறப்பானது தான். வீட்டைக் கட்டுவதற்கு முன்னால் அதனைத் தாளில் வரைந்து பார்த்துக் கொள்ளும் நிலைகளில் இழிவான மனைச் சிற்பிகூட சிறந்த தேனீயைக் காட்டிலும் மேம்பட்டவன் தான், ஆனால் அவன் தனது வரைபடங்களில் புறநிலை இயல்புச் சூழ்நிலைகளையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்; இல்லா விடில் அவனது திட்டம் தாள் நிலைக்கு அப்பால் சிறிதும் முன்னேறப் போவதில்லை. அடிப்படையின் உறுதிப்பாடு அல்லது அந்த உறுதிப் பாட்டை உண்டாக்கும் பொருள், கட்டுமானப் பொருள்களின் தன்மை, கட்டுமானமுறை முதலிய பலவற்றையும் அவன் கருத்தில் கொள்ள வேண்டும்.

சமுதாயத்திலும் கூட, கருத்துக்களும் நல்லொழுக்கக் கோட்பாடுகளும் கொள்கைகளும் சமுதாய அமைப்பின் கட்டுமானத்தை அல்லது புனர்நிர்மாணத்தை ஊங்குவிக்க

முடியும்; எனினும் அவை அதன் இருப்பு, வளர்ச்சி ஆகியவற்றின் முறைகளோடும் நடைமுறைக்குகந்த பாடுகளோடும் இணைந்து பொருந்தியிருக்கவேண்டும். சமுதாய வாழ்க்கையின் உண்மை நிலைமைகளைக் கருத்தில் கொள்வதே பொருள் முதலியல் வரலாற்று விளக்கத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது.

இது மிகவும் எளிதாகத் தோன்றலாம். உண்மையில் பொருள் முதலியல் வரலாற்று விளக்கமானது முதன் முதலாக மக்கள் எல்லோருக்கும் உண்ண உணவும் உடுத்தத் துணியும் கிட்டவேண்டும், எல்லோரும் வாழ்வின் பொருளியல் தேவைகளைப் பெற்றாக வேண்டும் என்ற எளிய உண்மையைத்தான் கூறுகிறது. பொருளியல் தேவைகளைப் பெற்றாக வேண்டும் என்ற எளிய உண்மையைத்தான் கூறுகிறது. பொருளியல் செல்வங் களின் ஆக்கத்தையும் பகிர்வையும் முறைப்படுத்தும் பொருளியல் உறவுகளில்தான் வாழ்க்கை யின் அடிப்படை அமைந்திருக்கிறது. இந்த உறவுகளே சமுதாயத்தில் வகுப்புகள் இருப்பதையும் இல்லாதிருப்பதையும் உறுதி செய்கிறது. பொருளியல் உறவுகள் சகல அரசாங்க, சட்ட உறவுகளையும், அதே போல் ஒவ்வொரு வரலாற்றுச் காலத்தில் மெய்யியல், சமய நல்லொழுக்கக் கருத்துகளையும், பிற கருத்துகளையும் உருவாக்கும் கூறாக உண்மையில் விளங்குகின்றன. மனிதரின் மனவுணர்வு அவர்களின் வாழ்க்கையை உறுதிசெய்யவில்லை; மாறாக, அவர்களது வாழ்க்கையை உறுதி செய்கின்றது. காட்டாக, ஆண்டானுக்கு முற்றிலும் உரிமையான உடைமைப் பொருளாக மாந்தனை மாற்றும் அடிமைமுறையை நமது காலத்தில் மாந்த வகுப்பில் மிகப் பெரும்பாலோர், மேல் வர்க்கங்களை சேர்ந்தவர்களும் கூட, மனித இயல்புக்கே மாறானது என்று கருதுகின்றனர் : அடிமை முறைக்கு ஆதரவான பேச்சுரையே தாழ்வானது என்று கருதப் படுகிறது. எனினும் அடிமை கருதப்படுகிறது. எனினும்

அடிமைகளை வைத்திருக்கும் சமுதாய அமைப்பில் அடிமைத்தனத்தின் "இயல்புத் தன்மை" முற்போக்கானவர்கள் இடையிலும் கூட எந்தச் சிக்கலையும் எழுப்பவில்லை; அடிமைகளை வைத்திருப்பது அப்போதைய வாழ்க்கை முறையாக இருந்தது.

மக்கள் எந்தக் கருவிகளைக் கொண்டு இயற்கையின்மீது செல்வாக்கைப் பயன்படுத்துகின்றார்களோ, அதனை மாற்றியமைக்கின்றார்களோ, அதன் மூலம் தமது வாழ்க்கையின் பொருளியல் நிலைமைகளை உருவாக்குகின்றார்களோ, அந்தச் கருவிகளின் இயல்பு, வளர்ச்சிநிலை ஆகியவற்றைத் தான். அதாவது சமுதாயத்தின் விளவு ஆற்றல்களைத் தான் பொருளியல் உறவுகளும் சார்ந்து நிற்கின்றன. எடுத்துக் காட்டாக, கற்காலத்தைச் சேர்ந்த மனிதர்கள் தமது உயிர் வாழ்க்கைக்குத் தேவையான எளிய உணவைக் கூடக் கருவிகளைக் கொண்டே பெற்றுவந்த காலத்தில் (அதுவும் கூட சமுதாயத்தின் அனைத்து உறுப்பினர்கள் சேர்ந்து உழைத்தால் தான் வெற்றியாயிருந்த காலத்தில்), அவர்கள் தம்மிடம் கைதியாகி விட்ட ஒருவனை அடமையாக்க வேண்டும் என்று முயன்றிருந்தால், அந்த அடிமை ஐந்து நாள்கள் கூட உயிர் வாழ்ந்திருக்க மாட்டான். ஏனெனில் சமுதாய உறவின் அடிப்படை வடிவமாக அடிமைமுறை மாறுவதற்கு, உயிர்வாழ்க்கைக்குத் தேவையான பயன்பட்டுப் பண்டங்களின் குறைந்த அளவு தேவைக்குமேல் குறைந்த அளவு உபரிப் பண்டங்களையேனும் சமுதாயம் வழங்க வேண்டிருந்தது; இல்லையெனில் அந்த அடிமை பட்டினியால் மாண்டிருப்பான். சமுதாய உறவுகள், அவை எந்த வகையைச் சேர்ந்தனவாயினும், எப்போதும் ஆக்கத்தியின் நிலையையே சார்ந்திருக்கின்றன.

சமுதாய வளர்ச்சி அதனை உருவாக்கும் கூறுகளின் செயலெதிர்ச் செயலில்தான் அடங்கி யுள்ளது. வரலாற்று

வளர்ச்சிப் போக்கில் ஆன்மிக கூறும் பொருளியல் பங்கைக் காட்டிலும் முதன்மை நிலை குறைந்ததன்று. ஆனால் அவற்றின் செயலெதிர்ச் செயல் பொருளியல் வளர்ச்சியின் அடிப்படையில் தான் அமைந்துள்ளது. இங்கு தான் அனைத்துச் சமுதாய மாறுதல்களுக்கும் அரசியல் மாறுதல்களுக்கும் உரிய காரணங்களின் இறுதியான விளக்கம் அடங்கியுள்ளது. நடப்பில் இருந்து வரும் சமுதாய உறவுகளின் அறிவுக் கொவ்வாத் தன்மையையும் முறைகேட்டை உணர்ந்தறிவது என்பதே, பழைய பொருளியல் "அளவு கோலால்" அளந்து பார்க்கப்பட்ட சமுதாய அமைப்போடு, இனியும் பொருந்தி வராது போகும் அத்தகைய படைப்பு முறை மாற்றங்களின் விளைவாகத் தான் தோன்றுகின்றது.

சமுதாய வளர்ச்சியில் ஒவ்வொரு சமுதாயமும் ஒன்றையடுத்து ஒன்றாய்த் திட்வட்டமான வரிசை முறையில் உண்மையாக இடம்பெற்று வந்த முதன்மைக் காலகட்டங்களை இனங்கண்டு தெளிவதை, பொருள் முதலியல் வரலாற்று விளக்கம் உறுதியாக்கிற்று. அந்தக் காலப் பகுதிகள் சமுதாய -பொருளியல் அமைப்புகள் எனக் கூறப்படுகினறன. அவற்றில் ஐந்து வகையுண்டு. அவை: தொல்பழங்காலக் கூட்டுக் குடும்ப அமைப்பு; அடிமைச் சமுதாய அமைப்பு; பெருநிலக்கிழமை; முதலாளியம்; பொதுவுடைமை.

அடுத்தடுத்து வரும் ஒவ்வொரு அமைப்பும் ஆக்க வளர்ச்சிக்கு மேலும் வாய்ப்பான ஆக்கப் பாடுகளை வழங்குகின்றது, மேலும் உயர்நிலையான உழைப்பின் விளைவாற்றலைப் பெறவும், சமுதாயத்தை மேலும் வளம் பெறச் செய்யவும் ஆற்றல் படைத்துள்ளது என்ற காரணத்தால் தான் ஒரு சமுதாய - பொருளியல் அமைப்பை நீக்கி விட்டு, அதன் இடத்தில் புதிய அமைப்பு இடம் பெற நேர்கிறது. சான்றாக, புற நிலை உண்மை

முறைகளுக் கேற்பவே ஒரு நிலக்கிழமையை நீக்கி விட்டு முதலாளியம் இடம் பெற்றது. ஏனெனில் நிலக்கிழமை யின் கீழிருந்த அங்காடிப் பொருள் உறவுகளின் வளர்ச்சி கூட்டுறவையும், பெருவாரி விளைவையும் தோற்றுவித்தது. இதனால் உரிமை மிக்க உழைப்பாளிகளுக்கான தேவை பிறந்தது; அதே நேரத்திலோ நிலமும், அதன் இயற்கைச் செல்வமும், நிலத்தை உழுது பயிரிடுவோர் கூட்டமும்கூட நிலக்கிழார்களின் உடைமையாகவே இருந்தன. எனவே நிலத்தின் மீதிருந்த நில மேலாண்மைச் சொத்துரிமையை ஒழிப்பதும், அடிப்படைப் பொருள்களின் பெருக்கத்தை அதிகரிக்கச் செய்வதற்காகப் பண்ணையடிமையை ஒழிப்பதும் இன்றியமையாததாயிற்று. வெகு மக்களின் ஆதரவோடு முதலாளிகள் பண்ணையடிமையத்தை ஒழித்தனர்; இதனால் உரிமைமிக்க தொழில் வளர்ச்சியும் உழைப்பாளிகளைக் கூலிக்கமர்த்தும் முறையும் தோன்றின. முதலாளிகள் வெற்றி பெற்றனர்; ஏனெனில் அந்தக் காலத்தில் அவர்களது குறிக்கோள்கள் புறநிலை நடப்போடும், வரலாற்று வளர்ச்சியின் நடைமுறைப் போக்கோடும் ஒத்திருந்தன.

எந்த ஒரு புதிய அமைப்பும் பழைய அமைப்பைத் தானே நீக்கிவிட்டு வந்து விடுவதில்லை, ஆனால், அந்தப் புதிய அமைப்பின் தோற்றமே படைப்பாற்றல்களின் குணத்தாலும் வளர்ச்சி நிலையாலும் தான் உறுதி செய்யப்பட்டுள்ளது என்பதையும் சுட்டிக் காட்டியாக வேண்டும். சமுதாய வளர்ச்சியின் அடுத்த கட்டத்துக்கான நிலைமைகள் முந்திய அமைப்பின் வரம்புக்குள்ளேயே தோன்றி விடுகின்றன.

சமுதாய - பொருளியல் அமைப்புகளின் வளர்ச்சியைப் புரிந்து கொண்டதானது, வரலாற்று வளர்ச்சிப் போக்கின் ஒருமைத் தன்மையைப் புலப்படுத்துவதை முடிவாக்கிற்று, எந்த மக்களின்

வரலாறும் பெருமளவுக்குத் தனித் தன்மை வாய்ந்தது என்பது உண்மையே. சான்றாக, பல்வேறு நாடுகளின் முதலாளிய அமைப்பை அலசிப் பார்த்தால் இது தெளிவாகத் தெரியவரும். ஆனால் அந்த நாடுகளின் அடிப்படையான நிலைமைகள் முதலாளியத்தையும் அதன் பொருளியல் உறவுகளையும்தான் முகவாண்மைப் படுத்துகின்றன; அவற்றின் சிறப்புத் தன்மைகளான ஆக்கக் கருவிகளின் உடைமை, பகிர்வு, வகுப்பு உறவுகள் ஆகியவற்றின் வடிவங்கள் திட்டவட்டமாக முதலாளியக் குணத்தையே பெற்றிருக்கின்றன. அமெரிக்க ஒன்றிய நாடுகள்,செருமனி கூட்டுக் குடியரசு, பிரிட்டன், இசுபெயின், சப்பான் அல்லது தென் ஆப்பிரிக்கக் குடியரசு முதலிய எந்தவொரு முதலாளிய நாட்டிலும் ஆக்கக் கருவிகள் முதலாளிகளுக்கே உரிமையாக உள்ளன; பகிர்வு, எல்லாவற்றுக்கும் மேலாக முதலீடு செய்யப்பட்ட முதலீட்டின் அளவையே சார்ந்துள்ளது; முதலளிகளுக் கெதிரான பாட்டாளிகளின் போராட்டம் அங்கு என்றும் ஓய்வதில்லை.

அனைத்து முதலாளிய நாடுகளிலும் வளர்ச்சியின் நடைமுறையிலான முடிவுகளை தீர்மானிக்கும் பொருளியல் நிலைமைகள் ஒன்று போலவே இருப்பதால், இந்த நிலைமைகளைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, எந்தவொரு முதலாளிய நாட்டின் உடனடியான எதிர்காலமும்கூட அடிப்படையில் ஒன்று போலத்தான் இருக்கின்றது.

ஒரு நாட்டு மக்களின் அடிப்படையான வரலாறு எண்ணிறந்த கூறுகளைச் சார்ந்ததாகும் என்பது சொல்லாமலே விளங்கும். நிலவியல் நிலைமைகள், வண்ண இன தேசிய இன உறவுகள், சமைய ஆட்சியின் அளவு, வரலாற்று வகையான பல்வேறு செல்வாக்குகள் ஆகியவற்றோடு, பல்வேறு பொதுமக்கள் இயக்கங்களை

முன்னின்று நடத்துவோரின் குணக்கூறுகள் ஆகியவையும் அந்த உரிமைப்பங்காகும். எனவே பல்வேறு மக்களின் வரலாற்ற வளர்ச்சியில் முழுநிறை ஒருமைத் தன்மை என்பது இருக்க முடியாது.

எவ்வாறாயினும், ஒரு நாட்டின் வளர்ச்சி அதன் நுணுக்க விளக்கங்களிலும் போக்குகளிலும் எவ்வளவு சிறப்புத் தன்மை பெற்றிருந்தபோதிலும், வரலாற்று வளர்ச்சியின் திசை வழியானது மனித குலம் முழுமைக்கும் பொதுவானதேயாகும்.

ஆக்க வளர்ச்சியிலும், ஒரு வகை படைப்பு முறைக்கு வேறாக மறுவகை படைப்புமுறை நடைமுறையில் இடம் பெறுவதிலும்தான் வரலாற்று வளர்ச்சியின் மிக ஆழமான சாறாம் அடங்கியுள்ளது.

மார்க்சு கூறிய மிகை மதிப்பின் முறைமை முதலாளிய சுரண்டலின் திறமையை வெளிப்படுத்தியது: முதலாளிய ஆக்க முறையில், படைப்புக் கருவிகளின் உடைமை யாளனான முதலாளி தொழிலாளியின் உழைப்பில் ஒரு பங்கை, அதற்கு எந்தவிதக் கூலியும் கொடுக்காமலே, தனக்கு உரிமையாக்கிக் கொள்கிறான். என்றென்றும் வளர்ந்தோங்கும் தனது ஆக்க வேட்கையைத் தணித்துக் கொள்ள முதலாளி எந்த வழியைக் கடைப்பிடிக்கிறான் என்பதை மிகை மதிப்பின் முறை புரிய வைத்தது. ஊதியம் அளிக்காத மிகை உழைப்பின் அளவை அதிகரித்துக் கொண்டு போவதே அந்த வழியாகும்.

முதலாளியத்தின் கீழ் சுரண்டலை ஒழித்துக் கட்டுவதென்பது இயலாத செயல். மேன்மேலும் ஊதியம் பெறுவதற்கு நிரந்தமாகப் பாடுபடுவதை முதலாளியம் தோற்றுவிக்கிறது. இது நிலையான முயற்சிதான். ஏனெனில் மேலும் மேலும் ஊதியத்தைப் பெருக்கிக் கொண்டு போனால்தான் முதலாளி எதிர்நிலையைச் எதிர்த்து நிற்க முடியும். மேலும் முதலாளியம்

சுரண்டலுக்கான "நாட்டு எல்லைகளையும்" தவிர்க் கொணாத வண்ணம் விரிக்கின்றது. பிற தேயங்களை, வலுவற்ற நாடுகளை அடிமைப் படுத்தும் போக்கு, அதாவது உலக ஆதிக்கத்துக்குப் பாடது அதனுள் உள்ளார்ந்து உறைந்திருக்கிறது.

எனவேதான் படைப்புக் கருவிகளில் தனியார் உடைமையைக் கட்டிக் காத்துவரும் நிலைமைகளின் கீழ் சமன்மை குறிக்கோள்களை நனவாக்குவதற்கான திட்டங்கள் நடைமுறைக்குப் புறம்பானவையா யுள்ளன.

பாட்டாளி இனமும் அவர்களோடு ஒன்றுபட்டி ருக்கும் அனைத்து உழைக்கும் மக்களும் தமது வகுப்புப் போராட்டப் போக்கின்போது, தமது வர்த்த நலம்களுக்கும் நடப்பில் இருந்துவரும் சமுதாய உறவு களுக்கும் இடையேயுள்ள முரண்பாட்டை மேன்மேலும் தெள்ளத் தெளிவாகக் கண்டுணர்கின்றனர். இதன் விளைவாக, மனிதனை மனிதன் சுரண்டும் சரண்டலையும் ஒடுக்குமுறையையும் ஒழித்துக் கட்டும் திசை வழியில் அவர்கள் தமது முயற்சிகளைச் செலுத்துகின்றனர்.

பொருள் முதல் வரலாற்று விளக்கமும், வெளியாகி விட்ட முதலாளிய விளைவு முறையின் சாறம் தான் பொதுவுடைமையை அறிவியல் ஆக்குவதற்கு உதவின.

அறிவியல் பொதுவுடைமையின் வரலாற்றுக் குணமே, அதற்கும் அதற்கு முந்திய ஏனைய எல்லா சமன்மைக் கொள்கைகளுக்கும் இடையே தென்படும் முதல் வேறு பாடாகும். சமுதாயம் பொதுவுடைமைக்கு மாறுவது ஒரு தருக்கமுறையான வளர்ச்சிப் போக்கு என்ற, அத்தகைய மாற்றத்துக்கான ஆக்கப்படம் இன்றியமையாமும் அதற்கு முந்திய சமுதாய அமைப்பிலேயே உருவாகி விடுகின்றன என்ற மறுக்க முடியாத உண்மையோடுதான், கனவுலகை அறிவியலாக

மாற்றும் பணி தொடங்கியது. உண்மையில் பொதுவுடைமையை நிறுவுவதென்பது பொருளியல் தன்மை கொண்டதே. கம்யூனிச சமுதாயம் முதலாளியம் உண்டாக்கிவிட்ட நிலைமைகளால் தான் உருவாகிறது.

முதலாளியத்தை நீக்கிவிட்டுக் பொதுவுடைமை இடம் பெறுவதன் தவிர்க்கொணாத பொருளியல்த் தன்மையானது, முதலாளிய விளைவாக்க திட்ட வட்டமான சமுதாயத் தன்மையைப் பெற்றிருக்கும் உண்மையில்தான் முதன் முதலாக அடங்கியுள்ளது. உண்மையில் முதலாளியத்தின் கீழ் உழைப்பால் உருவான எந்த ஆக்கம் செய்யப்பட்டதாயினும் கூட, கூட்டு உழைப்பின் மூலம் விளைவாக்கம் செய்த பொருளாகத்தான் உள்ளது --அதாவது அந்தப் பொருள் ஏனைய தொழிலாளர்கள் அல்லது உழவர்கள் படைத்துத் தந்த மூலப் பொருளிலிருந்து, ஏனையோர் கட்டி முடித்த எந்திரத்தின் உதவியினாலும், இன்னும் பலர் விளைவு செய்து தரும் மின்விசையாலும் ஆக்கமாகும் பண்டமாகவே உள்ளது. சிதைக்க முடியாத, கண்கண்ட, காண்காணாத பிணைப்புகளால் பல்வேறு தொழில் களும் அதில் ஒன்றோடான்று பிணைக்கப் பட்டுள்ளது.

அனைத்து வகையான விளைவாக்க ஆற்றல் களையும் பயன் படுத்தி, சமுதாய ஆக்கத்தை இயல்பாக நடைபெறச் செய்வது, அதனை வளர்ப்பது, நெருக்கடிகளும் தேக்கமும் இல்லாதிருப்பது என்பவை யெல்லாம், முதலாளியத்தின் கீழ் சாத்தியமே இல்லை; ஏனெனில் அதில் உழைப்பின் பயன்களை படைப்புக் கருவிகளின் உடைமையாளர்கள் தனிப்படத் தமக்கு உரிமையாக்கிக் கொள்கின்றனர். எனவே தனியார் உடைமையை அகற்றிச் சமுதாய உமைமையைக் கொண்டு வருவது தான் உற்பத்தியின் சகஜமான வளர்ச்சிக்கான ஆரம்பத் தேவைக் கூறுகளை உறுதி செய்ய முடியும்.

சமுதாய உடைமையை நிறுவுவதானது முதலீட்டை ஒன்று குவிப்பதையும் நடுமைப்படுத்துவதையும் நிறைவு பெறச் செய்கிறது என்பதும் குறிப்பிடத் தக்கதாகும். இந்த வளர்ச்சிப் போக்கு முதலாளிய வளர்ச்சியின் ஏரணவகையின் விளைவாகவே, முதன்மையாக முதலாளியப் போட்டி முறையின் விளைவாகவே, முதலாளிய ஆக்க முறைக்குள்ளேயே பொங்கிவந்து கொண்டிருந்த ஒரு போக்குத்தான். விளைவாகக் கருவி களின் தனியார் உடைமையை அகற்றிச் சமுதாய உடைமையை ஏற்படுத்துவது சமுதாய வளர்ச்சியில் ஒரு பண்பு மாற்றத்தைக் குறிக்கின்றது; அதன்முன், பரந்துபட்ட வரலாற்று வாய்ப்புக்களைத் தோற்றுவிக் கிறது.

கருத்தியல் நாடுகள் முட்டி மோதி நிலைகுத்தி நின்றுவிட்ட இடத்தில், அறிவியல் பொதுவுடைமை வெற்றி பெற்றுவிட்டது. கனவுலகுகளெல்லாம் முதலாளிய உறவுகளை ஆய்வு செய்தன; ஆனால் அவற்றைப் புரிந்து கொள்ளவோ, அல்லது முறையான சமுதாய மொன்றை உருவாக்கும் நடைமுறை சார்ந்த வழிகளைக் கண்டறியவோ அவற்றால் இயலவில்லை. சமுதாய அமைப்பைப் பொறுத்தவரையிலும் நன்னெறி அறிவுரை செய்வதை அறிவியல் பொதுவுடைமைக் கோட்பாடு தீர்த்துக் கட்டிவிட்டது. குறிப்பிட்ட வரலாற்றுக் கால கட்டம் வரையிலும் முதலாளியம் இருந்தே தீரும் என்பதையும், எனவே அதனை மிகவும் முற்போக் கானதொரு சமுதாய - பொருளியல் அமைப்பினால் அகற்றுவதும் தவிர்க்கொணாதது என்பதையும் அது மெய்ப்பித்தது.

முதலாளியம் பொதுவுடைமைக்கான அடிப் படையை நிறுவியது; ஏனெனில் விளைவாக்கத்தை வளர்ப்பதன் மூலம், அது உரிமைக்கும் சமன்மைக்குமான

பொருளியல்த் தேவைக் கூறுகளை உருவாக்கியது. வகுப்புகள் ஒழிக்கப்பட வேண்டும்; அப்போதுதான் சட்டத்தின் முன்னால் எல்லோரும் சமம் என்பது வெறும் ஒப்புக்கென்று இல்லாமல், உண்மையான சமன்மையாக மாறும். இதற்கு, தேவைகளுக்கேற்ப பகிர்ந்தளிக்க உதவும் வகையில், பொருளியல் உயிர்வாழ்வுச் செல்வங்களின் மிகப்பெரு வளமும் இன்றியமையாததாகும். முதலாளியத்தின் கீழ் தொழில் நுட்ப முன்னேற்றம் பொங்கிப் பிரவகிக்காது போயிருக்குமானால் என்றுமே பொதுவுடைமையை எய்தியிருக்க முடியாது.

அறிவியல் பொதுவுடைமைக் கொள்கையின் வரலாற்றுக் பண்பானது, அது முதலாளியத்தின் கீழ் மக்களுக்கிடையே நிலவும் உறவுகளை ஒழிப்பதன் இன்றியமையாமையை மெய்ப்பித்துக் காட்டிய உண்மையிலும் அடங்கியுள்ளது. உருவாக்க கருவிகளின் தனியார் உடைமையையும், உழைக்கம் மக்களைச் சுரண்டும் வகுப்புகள் அடக்கியெடுக்குவதையும் ஒழிப்பதே. "பொற்கால"த்தைக் கொண்டுவரக்கூடிய பங்காகும்; இதனை செயின்ட் - சைமனும் கூட, கதைகள் கூறிவந்ததைப் போல் கடந்த கால பொருளாகக் கருதாமல், வருங்காலத்தில் வரப்போகும் நிகழ்ச்சி என்று சரியாகத் தான் கூறினார்.

நிலக்கிழமையை அகற்றிவிட்டு எவ்வாறு முதலாளியம் வந்ததோ, அதேபோல் முதலாளியத்திலிருந்து பொதுவுடைமைக்கு மாறுவதும் அத்தனை தேவையானதும் தருக்க முறைமையானதும் ஆகும். முதலாளிய முறை, தானே தோற்றுவிக்கும் விளைவாக்க ஆற்றல்களோடு, தனியார் - உடைமை பகிர்வின் குறுகிய வரம்புக்குள் இனியும் பொருந்தியிருக்க முடியாத விளைவாக்க ஆற்றல்களோடு மோதுகிறது.

எனினும் புத்தம்புதிய முதலாளித்துவம் தனது ஆக்க ஆற்றலை யெல்லாம் தீர்த்து விட்டது என்று கருதுவது

தவறாகும், இரண்டாம் உலக போருக்குப் பின்னர் பல முதலாளிய நாடுகளில் கணிசமான விளைவாக்க வளர்ச்சி தென்பட்டுள்ளது; அத்துடன் உழைப்பின் விளைவுகளும் உழைப்பு முறைகளும், ஆக்கத்தின் தொழில் நுட்பச் செய்முறைகளும், கருவிகளும் அங்கு புதுமை மயமாக்கப் பட்டுள்ளன. இதனைப் பல்வேறு சூழ்நிலைகளின் மூலம் விளக்கவேண்டும்; உலக அங்காடியில் தனித்தோங்கிய முதலாளிகளுக்கிடையே நடைபெறும் கடுமையான எதிர்நிலை, தன்னிச்சையான பொருளியல் வளர்ச்சிப் பாதையைத் தேர்ந்தெடுத்துள்ள புதிதாக வளர்ந்து வரும் இளம் நாடுகளின் மீது பொருளியல், அரசியல் செல்வாக்கைச் செலுத்த அவர்கள் நடத்தும் போராட்டம், தொடர்ச்சியான படைப்பெருக்கப் போட்டி ஆகியவையே அச் சூழ்நிலைகளாகும்.

எனினும், இவை யெல்லாம் தாற்காலிகமான தன் மைகள் தாம். ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் இலத்தீன் அமெரிக்காவிலும் உள்ள இளம் நாடுகள் எய்தியுள்ள பொருளியல் முன்னேற்றமானது உலக அங்காடியில் முதலாளியத்தின் முடிக்கத்தக்கத் தீவிரமாகக் குறைக்கும். சமன்மைக் கூட்டுக் குடும்பம் வளர வளர, அது தன்னிச்சையான இளம் அரசுகளுக்குத் தான் அளித்துவரும் உதவியை அமைதியாக அதிகரிக்கும்; இது தனி வல்லாட்சி அரசுகளுக்கு இன்னும் பெரிய தொல்லைகளை விளைவிக்கும்.

தொகுத்துச் சொல்வோம்; உழைப்பின் விளைவாக்க ஆற்றல் குறைவாக இருந்து, அது உயிர் வாழ்க்கைகுத் தேவையான பொருள்களை மிகமிகக் குறைந்த அளவில் மிகுதியாக விளைவு செய்து வந்தபோது, மாந்தனை மனிதன் சுரண்டும் சுரண்டல் இருந்தால் தான் பொருளியலை வளர்க்க முடிந்தது. முதலாளியத்திலோ, பொருளியல் வளர்ச்சி ஒரு கட்டத்தை எய்துகிறது.

முதலாவதாக, அதில் உழைக்கும் மக்கள் ஆலைகளிலும் தொழிற் சாலைகளிலும் வேலை பார்ப்பதோடு, அரசியல் நடைமுறைகளிலும் பங்கெடுக்க முடிகிறது; இரண்டாவதாக, சமுதாயத்தின், அனைத்து மக்களின் நிலையான வளர்ந்தோங்கும் தேவைகளைப் நிறைவு செய்யும் நோக்கத்தைப் பெற்றிராத முதலாளிய விளைவாக்கம், தான் தோற்றுவிக்கும் விளைவாக்க ஆற்றலையே தவிர்க்கொணாத வண்ணம் கட்டுப்படுத்துகிறது. மூன்றாவதாக, ஆக்கத்தின் சமுதாயத் தன்மைக்கும், தனியாரின் செல்வச் சேமிப்புக்கும் இடையே முதலாளியத்தின் கீழ் முற்றி வரும் மோதலை, அதைக் காட்டிலும் மேம்பட்ட சமுதாய அமைப்புக்கு மாறுவதன் மூலமே தீர்க்க முடியும்.

**நிலவுக் கோள்மறைப்பின் வருகையைத் விரைவு படுத்துவதற்கென்று எவரும் ஏன் ஒரு கட்சியைத் தோற்றுவிப்பதில்லை?**

19ஆம் நூற்றாண்டில் மெய்யியல் வாணரும் அற நூலாசிரியருமான உருடால்ப் இசுடாம்லெர் இந்த வினாவை மார்க்சியத்துக்கு எதிரான கருத்தாகவே பயன்படத்தினார். பொருள் முதல் வரலாற்று விளக்க நிலையிலிருந்து பொருளாயமும் சட்டமும் என்ற தமது நூலில், பொதுவுடைமைக்கு மாறும் மாற்றம் தவிர்க்க முடியாதது எனக் கூறும் மார்க்சியவாதிகள், அந்த மாற்றத்தைத் விரைவுப் படுத்துவதும் தேவை என்று கருதுவதன் பொருளைப் புரியமாட்டாது திகைத்தார் இசுடாம்லெர். வானவியலின்படி தவிர்க்கொணத வண்ணம் நிகழும் நிலவுக்கோள் மறைப்பை விரைவுபடுத்த ஒரு கட்சியை உருவாக்கத் துணிவதுபோல், இதுவும் அத்தனை வியப்பானதொரு செய்கைதான் என்று அவர் கூறுகிறார்.

அன்று தொட்டு இது பலருக்குப் பிடித்தமான கருத்தாக இருந்து வந்துள்ளது. இன்றும் கூட அறிவியல்

பொதுவுடைமைக் கொள்கையை திறனாய்பவர்கள், இந்தக் கொள்கையின் ஏரணவகையில் "பொருந்தாத் தன்மை"யை மெய்ப்பிக்கும் முயற்சிகளில் இந்த கருத்தைப் பயன்படுத்துகின்றனர். வரலாறு பொருள் முதல் முறையில் தீர்மானிக்கப்படுகிறது. (அதாவது வரலாறு நடைமுறை முறைகளுக் கேற்ப வளர்ச்சி பெறுகிறது) என்ற கொள்கை, புரட்சிமீது வைக்கும் நம்பிக்கையோடு பொருந்திப் போகவில்லை என்று அவர்கள் கூறுகின்றனர். ஏனெனில் பொதுவுடைமை உண்மையிலேயே வெற்றி பெறுமானால், நிலவுக்கோள் மறைப்பு வருவதைப் போல், இரவை அடுத்துப் பகல் வருவதைப்போல், வேனிலுக்குப் பின் கோடை வருவதைப்போல் அதுவும் எந்தவொரு புரட்சியோ போராட்டமோ இல்லாமலே நிறுவப்படும் என்று அந்த திறனிகள் கூறுகின்றனர்.

சமுதாயம் பொதுவுடைமைக்கு மாறிச் செல்லும் இன்றியமையாமையை மறுப்பதற்காகவே இக் கருத்து கூறப்படுகிறது என்பது சொல்லாமலே விளங்கும். மேலும் இதன் பின் அடங்கியுள்ள பொருள் இதுதான்: மார்க்சிய வாதிகளே பொதுவுடைமையின் நடப்பியல் தேவையை நம்பவில்லை; அவர்கள் அதனை வகுப்புப் போராட்டத்தோடும் புரட்சியோடும், அதாவது மாந்த இனச் செயலாற்றலோடும் தொடர்புபடுத்துவதற்கு இதுதான் காரணம். இத்தகைய சிந்தனையைப் பின் பற்றிச் சென்றால், மூரையும் காம்பனெல்லாவின் பயணியர் களையும் போன்று மார்க்சியவாணர்களும் கருத்தியல்வாணர்கள்தான் என்றும், அவர்களும் கற்பனை நலத்தில்தான் ஈடுபட்டுள்ளனர் என்றும் முடிவுக்கு வருவது மிகவும் எளிது. இறுதியாக, மார்க்சியத்துக்குத் தொளைநோக்குக் கூடக் கிடையாது என மறுப்பதும், வருங்கால அறிவியலை உருவாக்க முயலும் எந்த வொரு முயற்சியையும் கற்பமனை கருத்தென ஒதுக்கித் தள்ளுவதும் எளிதாகிவிடும்.

உண்மையில் இந்தக் பொதுவுடைமை பகைமை கோட்பாட்டினர்கள் மிகவும் விரைபட்டு விடுகிறார்கள்!

இருநூறு ஆண்டகட்குமுன் பிரித்தானிய மெய்யியல் வாணியும் வேதியல் அறிஞருமான சோசப் பிரீசுட்லி தவிர்க்க முடியாது நிகழும் சில நிகழ்ச்சிகள், அவற்றில் மாந்தனும் பங்கு பெறும் முயற்சிநிலை முற்றிலும் விலக்கி விடுவதில்லை என்று எழுதினார். கவனியுங்கள் - இது பொதுவுடைமைக் கருத்தைச் சிறிதும் கருதிப் பார்க்காது எழுதியதாகும்; அக் கருத்தை நிறை வேற்றுவதற்கான உண்மையான முயற்சிநிலை தோன்றுவதற்கு நெடுங் காலத்துக்கு முன்பே எழுதியதாகும். காரண காரியச் சங்கிலித்தொடரில் மனித நடவடிக்கைகள் ஓர் இன்றியமையாத வளையமாக விளங்குகின்றன; இந்தக் காரணத்தால் நிகழ்வுகளின் விளைவுகள் பெரும்பாலும் மாந்தர்களையே சார்ந்துள்ளன.

நிலவின் இடத்தையும் இயக்கத்தையும் பொறுத்த நிலவுக் கோள்மறைவு, இரவும் பகலும் மாறி மாறி வருந் தோற்றம், ஆண்டுதோறும் வரும் பருவங்கள் முதலிய நிகழ்ச்சிப் போக்குகளும் காட்சி உண்மைகளும் இயல்பாகவே மாந்தர்களைச் சார்ந்திருக்க வில்லை; அவற்றை விரைவுப் படுத்தவதற்குக் கட்சிகள் நிறுவுவது அறியாமையேயாகும்.

எனினும் இயற்கையின் நிகழ்ச்சிப் போக்குகளைப் புரிந்து கொள்ளும்போதே, மக்கள் பெரும்பாலும் அவற்றைக் கட்டுப் படுத்துகிறார்கள் என்பதும், அதன் மூலம் நல்ல பலனை அதிகரிக்கவும் கெட்ட விளைவைக் கூடியவரையில் குறைக்கவும் செய்கிறார்கள் என்பதும் உண்மை.

சமுதாய நிகழ்ச்சிப் போக்குகளோ முற்றிலும் வேறு வகையானவை. மக்கள் இல்லாது எந்தச் சமுதாயமும் கிடையாது. மக்களோ மன உணர்வு படைத்த பிறவிகள்;

செயலாற்றும் திறமை கொண்டவர்கள். மாந்த இன மன உணர்வும் மக்களது நடவடிக்கைகளின் தன்மையும் அவர்களது சமுதாய வாழ்க்கையின் விளைவுதான் என்றாலும், வரலாற்று முறைமைகளை எய்தும் வளர்ச்சிப் போக்கில் மக்களும் ஓர் இன்றியமையாத கூறாகத் திகழ்கின்றனர். உண்மையில் மக்கள் கருத்துகளையும் செயல்களையும் வளர்க்கின்றனர்; ஏனெனில் அவர்களின்றி எந்த வரலாற்று வளர்ச்சிப் போக்கும் இருக்கமுடியாது. வரலாற்று முறைமைகள் ஒரே சமயத்தில் மாந்தர்களின் சமுதாய நடவடிக்கையின் முறைமைகளாகவும் இருக்கின்றன.

ஏதோ மறைபுதிரான விதிவசமான ஆற்றல்களால் அல்லது தனி ஆள்களால் ஆட்டி வைக்கப்பெறும் பொம்மைகளைப்போல் தோற்றுமாறு மாந்தர்களை ஆக்க விரும்பும் இந்த வேட்கைக்கு, ஒருவேளை அவர்களின் நடவடிக்கைகளைப் பற்றிய அச்சமே காரணம் என்றும் சொல்லலாம்.

வரலாற்றில் பொது மக்களே சிறப்பான உந்தாற்றலாக விளங்குகின்றனர் என்பதை எண்ணற்ற சான்றுகள் மெய்ப்பிக்கின்றன. இந்தக் கருத்து தனி ஆள்களின் பங்கை, பெரிய புகழாளர்களின் பங்கை மட்டுமல்லாமல் ஒவ்வொரு தனி ஆளின் பங்கையும் கூட, விலக்கி விடவில்லை. எனினும் தனி ஆள்களின் முயற்சிகள் வெள்ளம்போல் ஒன்று திரண்டால் மட்டுமே, சமுதாய முறையில் முதன்மை வாய்ந்த பலன் விளைகின்றது. மேலும் இவ்வாறு ஒன்று திரளும் சாத்தியப்பாட்டை வரலாற்று நிகழ்ச்சிப் போக்கின் நடைமுறைகள் தான் உறுதி செய்கின்றன.

எப்போது வகுப்புகள் தோன்றியதோ அப்போது முதற்கொண்டே வகுப்புப்போராட்டம் பொதுமக்கள் நடவடிக்கையின் மிக முதன்மையான வடிவமாக இருந்து வந்திருக்கிறது. பொதுவுடைமையின் கண்கண்ட

தோற்றம் அதற்கு முந்திய முதலாளித்துவ சமுதாயத்தின் வளர்ச்சியிலிருந்து தோன்றியபோதிலும், முதலாளி களுக்கு எதிராக பொது மக்களும் நடத்தும் வகுப்புப் போராட்டத்தை வளர்த்துச் செல்வதன் மூலமே அதனை எய்த முடியும்.

கம்யூனிச சமுதாயத்தின் அமைப்பாளராக விளங்கும் பாட்டாளி வகுப்பின் வரலாற்றுப் பங்கை நிறுவிக் காட்டியது அறிவியல் பொதுவுடைமையின் இரண்டாவது பெருங் கண்டுபிடிப்பாகும். இந்தக் கொள்கையின் படி, உழைப்பாளி வகுப்பின் விடுதலையை உழைப்பாளி வகுப்பேதான் செயல்படுத்த முடியும்.

பாட்டாளி வகுப்பு தன்னைத் தானே விடுவித்துக் கொள்ளும் போதே சமுதாயம் முழுவதையும் விடுதலை பெறச் செய்கிறது. ஏனெனில் அந்த விடுதலை சுரண்டலிலிருந்து விடுதலை பெறுவதாகும்; எனவே விளைவாக்கக் கருவிகளின் தனியார் உடைமை யிலிருந்தும் விடுபடுவதாகும். இது மாந்தனை அடிமைப் படுத்தும் சமுதாய நிலைமைகளை ஒழித்து விடுகிறது. எனவேதான் புதிய சமுதாய அமைப்பின் வெற்றியைக் கொண்டு வருவதற்கு, முதலாளிகளாலும் நிலக் கிழார்களாலும் ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட, சீரழியப் பெற்ற சகல மக்களும்-வேளார்களும், கைவினைத் தொழிலாளர்களும், அலுவலக ஊழியர்களும் - பாட்டாளி இனத்தோடு நிலையான உறுதியான கூட்டுறவோடு ஒன்றுபட வேண்டும்.

இந்தக் கூட்டுறவின் வலத்தின்மீதும், இது எந்த அளவுக்கு பொது மக்களைத் தழுவி நிற்கிறதோ அந்த அளவின் மீதும்தான், மிகவும் முற்போக்கான சமுதாயத்தின் வெற்றி சார்ந்து நிற்கிறது.

முதலாளியத்துக்கு எதிரான போராட்டத்தில் பொது மக்களைக் கிளர்ந்தெழச் செய்வதற்கும், உழைக்கும்

வகுப்பை, அனைத்து ஒடுக்கப்பட்ட பாடு படும் மக்களை ஒன்று படுத்துவதற்கும், அவர்களது நடவடிக்கைகளை ஒழுங்கமைப்பதற்கும், அவர்களை மேலும் காரிய வீரர்களாக்குவதற்கும், பாட்டாளி வகுப்பு தனது அரசியல் கட்சியை - முன்னேறிய சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட, உணர்வு மிக்க உழைப்பாளி வகுப்புப் பகுதியை நிறுவுகின்றது

**பொதுவுடைமை: இன்றுள்ள நிலையும்**

**எதிர்கால நிலையும்**

பொதுவுடைமை பற்றிய மார்க்சியக் கொள்கையானது சமுதாயத்தையும் அதன் வளர்ச்சியை யையும் பற்றிய அறிவியல் பொதுவுடைமைக் முதன்மையாளர்களால் வரைந்து காட்டப்பெற்ற வருங்கால சமுதாயச் ஓவியமாகும் பொதுவுடைமை மாற்றத்துக்கான தேவைக் கூறுகளைத் தோற்றுவிக்கும் நடைமுறை வகையிலான தற்கால வளர்ச்சிப்போக்கு களின் ஆராய்ச்சி அடிப்படையில் அமைந்ததாகும்

ஆனால் அது கற்பனை வாழ்வியல் ஆயிற்றே! - என்று அறிவியல் பொதுவுடைமையின் இன்றைய விரோதிகள் கூறுகின்றனர் எதிர்காலம் அறிவியலுக்குரிய செய்தியாக முடியாது என்பது அவர்கள் கருத்து

ஏன் முடியாது என்று நாம் வினவுவோமா? வானியலில் யாரேனும் எந்தக் கற்பனைக்கோட்பாட்டை யேனும் காண்கிறார்களா? வானியல் வானமண்டலத் திலுள்ள கோள்களும் விண்மீன்களும் பல்லாண்டு களுக்கு, ஏன் நூற்றாண்டுகளுக்கு அப்பாலும் எந்தெந்த இடத்தில் இருக்கும் என்று முன் கூட்டியே கூறும்போது, அதுவும்கூட எதிர்காலத்தை ஆராய்கிறது என்பது தானே உண்மை. இவ்வாறு கூறக்கூடிய இயற் பாடும், நடைமுறையில் இறும்புதுடன் மெய்மையாகியுள்ள

அதன் வரலாற்றுத்தன்மையும், விண்மீன்களும் கோள்களும் இயங்கும் இயக்கத்தின் நடைமுறையிலான முறைகளைப்பற்றிய அறிவிலிருந்துதான் தோன்று கின்றன

அறிவியல் பொதுவுடைமைக் கொள்கையும் சமுதாய வளர்ச்சி முறைகளின் அடிப்படையில்தான் பொதுவுடைமை எதிர்காலத்தை விளக்குகின்றது இயல்பாகவே இந்தக் கொள்கை அந்த எதிர்காலத்தின் அனைத்து நுணுக்கங்களையும் முன் கூட்டியே காண முடியாது என்பது உண்மைதான் அது அந்த எதிர்காலத்தின் பொதுவான சித்திரத்தையும் பொதுத் தன்மைகளையும்தான் சித்திரிக்கின்றது ஆனால் அந்தச் சித்திரம் வியக்கத் தக்க வகையில் மிகவும் திட்பமாகக் காட்சியளிக்கின்றது இதற்குப் பதினான்கு நாடுகளின் சமன்மை அமைப்பு பட்டறிவை ஆய்ந்தாலே போதும்

தேவைக்கேற்ப பகிர்வு என்பது மக்களது மன உணர்வில், மனப்பொங்கில் ஒரு மாறுதலை ஏற்படுத்த முனைகிறது பொதுவுடைமையின் கீழ் மக்களது உழைப்பின் அளவும் நிலையும் எவ்வாறிருந்தபோதிலும், அனைத்து மக்களும் தமது தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் முடிக்கத் தக்கதனைப் பெறுகின்றனர் அதில் உழைப்பு மேன்மை மிக்க அடிப்படையான தேவையாக மாறி விடுகிறது; சமுதாயம் முழுவதன் நலனுக்காகவும் தன்னால் முடிந்த மட்டிலும் நன்கு உழைக்கும் மனிதனின் இயல்பான வேட்கையை அது புலப்படுத்துகிறது

சமன்மையின் கீழும் கூட, உழைப்பின் நல்லொழுக்க உள்ளோட்டமும், சமுதாயம் முழுவதற்கும் கிட்டிய வெற்றிகள் ஒவ்வொரு தனிஒருவரின் வாழ்க்கையை மேம்படுத்துவதை உறுதிப்படுத்துகின்றன என்ற திடமான நம்பிக்கையும் ஒரு தன்மையான பங்கினை வகிக்கின்றன

இந்த அடிப்படையின் மீதுதான் உழைப்பைப் பற்றிய - பொதுவுடைமைக் கண்ணோட்டம் உருவாகிறது;

அத்துடன் அவரவர் திறமைக்கேற்ப உழைப்பு, அவரவர் தேவைக்கேற்ற ஊதியம் என்ற சிறப்பான பொதுவுடைமைக் கோட்பாட்டின் வெற்றிக்கான முக்கிய தேவைக் கூறுகளும் தோன்றி விடுகின்றன.

இவ்வாறாக, பொதுவுடைமை தனது உரிய அடிப்படையில், சமன்மை அடிப்படையில் தோன்றி விடுகிறது

அறிவியல் பொதுவுடைமைக் கொள்கை பொதுவுடைமை சமுதாய வளர்ச்சியின் இரு கட்டங்களை - சமன்மை அடுத்து பொதுவுடைமை என்பனவற்றை - வரையறுத்துக் கூறியது; இந்தக கட்டங்களின் தவிர்க்கொணாத தன்மையை நுகர்வறிவு மெய்பித்துள்ளது.

சமன்மையும் பொதுவுடைமையும் ஒரே அமைப்பின் இரு கட்டங்களாக இருப்பதால், இரண்டும் சில பொதுத் தன்மைகளைப் பெற்றுள்ளன. அவை: விளைவாக்க கருவிகளின் சமுதாய உடைமை; சுரண்டும் வகுப்புகளைப் போக்குதல் (எனவே அனைத்து வகையான வகுப்பு, வண்ண இன, தேசிய இன ஒடுக்குமுறையையும் போக்குதல்; ஏனெனில் சுரண்டும் வகுப்புகள் தான் ஏதாவதொரு வடிவில் ஒடுக்கு முறைக்குக் காரணமாகின்றன); ஆக்க வளர்ச்சியில் தோழமையான கூட்டுறவு, நட்பு முறையான எதிரிடை, ஒருவர்க்கொருவர் ஒத்துழைப்பு முதலிய உறவுகள் நிலவுதல்; ஆக்க வளர்ச்சியில் அனைத்து உழைக்கும் மக்களுக்கும் சரிசமமான அக்கறை; சமுதாயத்தின் அனைத்து உறுப்பினர்களின் என்றென்றும் வளர்ந்தோங்கும் பொருளியல், பண்பாட்டுத் தேவைகளை நிறைவு செய்வதற்காகவே பெருக்கத்தைப் பயன்படுத்துவது இந்த நிலைமை தொழில் நுட்ப முன்னேற்ற அடிப்படையில் படைப்பை பெருக்கச் செய்து வளர்ப்பதன் விளைவாய்

எய்தப்படுகின்றது; மக்கள் தமக்குத் தாமே புதிய சமூக உறவுகளை உணர்வு முறையில் வளர்த்துக் கொள்வது - இது சமுதாய வளர்ச்சியின் நியதி முறைமைகளை அவர்கள் கண்டுணர்வதிலிருந்து தோன்றுகிறது; பண்பாடு, மார்க்சிய - இலெனினிய கோட்பாட்டின் தலைமை - ஆகியவையாகும்.

தனக்கும் சமன்மைக்கும் பொதுவாகவுள்ள தன்மைகளைக் பொதுவுடைமை கணிசமான அளவுக்கு உருமாற்றுகிறது அறிவியல், தொழில் நுட்ப முன்னேற்றம், என்றென்றும் வளர்ந்தோங்கும் உழைப்பின் விளைவாக்க ஆற்றல் ஆகியவற்றின் அடிப்படையில் பொதுவுடைமையின் கீழ் மிகுதியான பொருளியல்ச் செல்வ வளம் உருவாக்கப்படும். இதன் விளைவாக, சமுதாய உறவுகளை மேலும் பெருக்கச் செய்வதற்கான நிலைமைகள் வளர்ச்சி பெறும்.

பொதுவுடைமை விளைவாக்க கருவிகளின் உடைமையின் ஒரே வடிவத்தை, அதாவது அனைத்து மக்களுக்கும் உடைமையான ஒரே வடிவத்தைப் பெற்றிருக்கும் சமுதாயமாகும். இந்த வடிவம் உழவர்கள், கைவினைத் தொழிலாளர்கள் முதலிய பெரும் மக்கட் பகுதிகளைக் கொண்ட நாடுகளில் சமன்மையின் கீழ் நிலவிவரும் குழு அல்லது கூட்டுறவு உடைமையையும், போக்கி அதனிடத்தில் இடம் பெறுவதாகும்

சமன்மை ஒன்றுக் கொன்று மாறுபட்ட சமுதாய குழுக்களோ, வகுப்புகளோ இல்லாத சமுதாயமும் ஆகும்.

கூட்டுடைமை பொது உடைமையின் அடிப்படையில் நகர்ப் புறத்துக்கும் சிற்றூர்ப் புறத்துக்கும் இடையேயுள்ள முதல் வேற்றுமைகளைப் போக்கிவிடும் சமுதாயமாகும்; இதன் விளைவாக, அங்கு வேளாண்மை எந்திரத் தொழில் உழைப்பின் வடிவத்தைப் பெற்று விடும். இந் வரையில் சமுதாயத்தின் பண்பாட்டு வளர்ச்சியும் மிகுந்த தன்மை வாய்ந்ததாகும்

பொதுவுடைமை விளைவாக்கத்தை ஒழுங்கு படுத்தும் கட்டுப்படுத்தும் செயல்களாக உடலுழைப்பை

மாற்றி விடும் சமுதாயமாகும் அதில் தொழில் நுட்ப முன்னேற்றம், கல்வி பண்பாட்டு வளர்ச்சி ஆகியவற்றின் விளைவாக, உடல் உழைப்பிலும் மூளை உழைப்பிலும் ஈடு பட்டிருக்கும் மககளுக்கிடையேயுள்ள அடிப்படையான வேற்றுமைகள் மறைந்துவிடும்

பொதுவுடைமை சமுதாயத்தில் உழைப்பு ஒரு சுமையாக இருக்காது, மாறாக, அது மேன்மையான, உயிர்ப்பு மிக்க அவசியாக மாறி விடும்

பொதுவுடைமையில் ஆக்கப் பொருள் அங்காடிச் சரக்குகளாகவும் இருக்காது; எனவே வாணிப உறவுகளும் மறைந்து போய் விடும் ஒரு பொருள் எந்த அளவுககு மக்களின் தேவைகளைப் நிறைவு செய்கிறதோ அந்த அளவே அதன் மதிப்பை அளக்கும் ஒரே அளவுகோலாக விளங்கும் "அவர்தம் திறமைக்கேற்ற உழைப்பு, தேவைக் கேற்ற ஊதியம்" என்ற கோட்பாட்டைக் பொதுவுடைமை நிறைவேற்றும்

பொதுவுடைமை உரிமையும் சமன்மையும் நிலவும் சமுதாயமாகும், அதில் மாந்தன் முழுமையாகவும் இசைவாகவும் வளர்ச்சி பெறவும், தனது தொழிலைச் உரிமையாக மாற்றிக் கொள்ளவும், விளைவாக்கத்தில் ஈடுபடவும் இயலும்

பொதுவுடைமை உலகம் முழுவதிலும் வெற்றி பெறும் போது அரசு வாடி வதங்கி மறைந்து விடும்; அதனிடத்தில் மக்களது பொதுவுடைமை தன்னாட்சி ஏற்படும்; அதாவது "மக்களின் மீது அரசாட்சி" என்ற நிலையைப் "பொருள்களின் மீது அரசாட்சி" என்ற நிலை முற்றிலும் போக்கி விடும்,

பொதுவுடைமை உணர்வும் பொது மக்கள் அபிப்பிராயமுமே மக்களின் நடத்தையை முறைப்படுத்தும் அடிப்படை கூறுகளாகத் திகழும்

பொதுவுடைமையின் கீழ் மாந்தனது என்றும் வளர்ந்தோங்கும் தேவைகளைப் நிறைவு செய்வதே ஆக்கத்தின் நோக்கமாக இருக்கும் காரணத்தால், மேலும்

இந்தத் தேவைகள் நிறைவு செய்யப்படும்போது, இவை மேன்மேலும் பல தேவைகளைத் தோற்றுவிக்கும் என்ற காரணத்தால், பொதுவுடைமை விளைவாற்றலின் எல்லையற்ற வளர்ச்சிக்கும், பொதுவுடைமை சமுதாயம் முழுமையின் வளர்ச்சிக்கும் தேவையான நிலைமைகளை உருவாக்கும் மேலும், விளைவாக்கம் வளர வளர, உழைப்பின் ஆக்க ஆற்றல் பெருகப் பெருக, பொருளியல்ச் செல்வத்தை விளைவு செய்வதற்குத் தேவைப்படும் கால அளவும் 'குறையும்; அதன் மூலம் மனிதனின் அனைத்து படைப்பாற்றல்களும், உண்மையிலேயே உரிமை வளர்ச்சி பெறுவதற்கான நிலைமைகள் உண்டாகும் இதனால், பொதுவுடைமையின் கீழ் சமுதாயச் செல்வம் அதற்குத் தேவையான வேலை நேரத்தின் அளவைக் கொண்டு மதிப்பிடப் பெறமாட்டாது, மாறாக, ஓய்வுக் காலத்தின் நீளத்தைக் கொண்டு - தாமசு மூர் சிந்தித்ததுபோல், மனசு வளர்ச்சிக்கான நேரத்தைக் கொண்டு - மதிப்பிடப் பெறும்

பொதுவுடைமை மக்களுக்கான சமுதாயமாகும்; 'மேலோர்'களுக்கான சமுதாயமன்று,எல்லொருக்குமான சமுதாயமாகும் ஒவ்வொரு தனி ஆளின் உரிமை வளர்ச்சியும் அனைத்து மக்களின் வளர்ச்சிக்கான தேவைக் கூறாகும்

சுருங்கச் சொன்னால் பொதுவுடைமை வகுப்புகளற்ற சமுதாயமாக இருக்கும், அனைவருக்கும் மிகு வளம் வழங்கும் சமுதாயமாக, புதிய ஒழுக்க நெறியாலும் கூட்டுறவு நிலையாலும் ஆளப்படும் சமுதாயமாக, ஒவ்வொருவரின் எல்லையற்ற முன்முயற்சியை உறுதிப்படுத்தும் சமுதாயமாக இருக்கும்

இதுதான் பொதுவுடைமை பற்றிய பொதுவான ணையாகும்; இதற்கு மேலும் அதன் நுணுக்க விவரங்களை முன்கூட்டியே சொல்லப் புகுவது கற்பனை திரமாகவே முடியும்

## (நிகழ்காலம் பற்றி)
## பொதுவுடைமையும் வரலாறும்

ஒவ்வொரு அறிவியல் கொள்கையும் அத்தகைய கொள்கைக்குச் சமுதாயத்தில் நெருக்கடியான தேவை இருக்கும் காலத்திலேயே தோன்றுகிறது சமுதாயத்தினுள் நுழைகின்றது என்பதை வரலாறு மெய்பித்துள்ளது இதில் அறிவியல் பொதுவுடைமைக் கொள்கையும் விதி விலக்கில்லை அது தொழிலாளி இயக்கம் எழுப்பிய வினாகட்கு விடையாக உதித்தது

19ஆம் நூற்றாண்டில் முதலாளியம் மிகவும் வலிமை மிக்கதாகத்தான் இருந்து வந்தது அது தனது தொடக்க கால கட்டத்தை - மாந்தனை வியந்து போற்றும் உந்தாற்றலைக் கலைஞர்களுக்கும் பாவலர்களுக்கும் ஊட்டி, மாந்தனை ஏற்றிப் போற்றிப் பெருமைப் படுத்துமாறு அவர்களைத் துண்டிவிட்ட காலத்தை - வெகு காலத்துக்கு முன்பே கடந்துவிட்டது என்பது உண்மைதான் அதன் கோட்பாட்டுவாணர்கள் உரிமை, சமன்மை, உடன்பிறப்பாண்மை ஆகியவற்றை நேர்மையோடு விளக்கி வந்த காலத்திய முதலாளியமாக அது இருக்கவில்லை; அது முதிர முதிர, அதன் முன்னாள் கொள்கைளெல்லாம் கடந்த கால இருளில் மங்கி மறைந்து

போயின செல்வம் ஒன்று மட்டுமே போற்றுதலுக்கும் வணக்கத்துக்கும் உரியதாக இருந்தது

19ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில், தொழிலாளி வகுப்பு இயக்கம் தனது தன்னிச்சையான முதல் நடவடிக்கைகளை மேற்கொண்ட காலத்தில், முதலாளிய த்துக்கு முதன் முதலாக இடுக்கன் படலங்கள் சூழத் தொடங்கின இந்தப் படலங்கள் பலமுறை கறுத்துத் திரண்டு கணத்து வந்த போதிலும்கூட, முதலாளிகளும் அவர்களின் கோட்பாட்டாளர்களும் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டிய தேவை எதையும் காணவில்லை; அவர்களுக்கு எதிர்காலம் நம்பிக்கையூட்டுவதாகவே தோன்றியது

இதன் பின் 20ஆம் நூற்றாண்டு வந்தது அது பொருளியல் நெருக்கடிகளுக்கு முடிவு கட்டும் ஒரு புது ஊழியாக இருந்தது விளைவாக்கம் மேலோங்கி வளர்ந்தது; ஒவ்வொரு நாளும் புதிய புதிய தொழில் நுட்ப வெற்றிகள் தோன்றி வந்தன; வளர்ச்சி பெற்ற முதலாளிய நாடுகளின் வாழ்க்கைத் தரம் ஒப்பு நோக்கில் உயர்ந்த தரத்தை எய்தியது ஆனால் இவையனைத்தும் முதலாளி வகுப்பு விரும்பித் தவம் கிடந்த பாதுகாப்பைக் கொண்டு வரவில்லை

கூர்மையான வகுப்புப் போராட்டம், குடியேற்ற வல்லாட்சி முறையின் வீழ்ச்சி, தன்னிச்சையான அரசியல் பொருளியல் வளர்ச்சிக்காகப் பற்பல மக்களும் நடத்திய போராட்டம் - ஆகிய அம்சங்கள் அனைத்தும் தனிகொடுங்கோன்மையின் அடிப் படையையே தகர்த்துக் கொண்டிருக் கின்றன

தனிக் கொடுங்கோன்மையும் எதிர்த்துத் தாக்குகிறது குடியேற்றங்களும் அரைக் குடியேற்றங்களும் அரசியல் விடுதலைக்குச் செல்லும் வழியை அடைத்துத் தடுக்க அது

முழு மூச்சோடு போராடுகிறது மேலும் தேய விடுதலைப் புரட்சிப் பேரலைகளால் அது தூக்கி யெறியப்பட்டுத் தோல்வியுறும்போது, புதிய குடியேற்றத்தின் பல்வேறு வடிவங்களைக் கண்டறிந்து அவற்றின் மூலம் புதிதாகத் தோன்றிய அரசுகளில் தனது பொருளியல் வலிமையை நிலைப்படுத்திக் கொள்ள முனைகிறது தனிக் கொடுங்கோன்மையும் தொழிலாளி வகுப்பு இயக்கத்தைப் பிளவு படுத்தச் சூழ்ச்சி செய்கிறது, ஒரு "வலுவான இட"த்திலிருந்து கொண்டு, தனது ஆணையைக் கொண்டு செலுத்துவதற்காக, படைக் கூட்டுக்களை விரைவாக ஏற்படுத்துகிறது நேரடியான வலிந்து கவர்வதிலும் இறங்குகிறது

**கம்யூனிச வழியில்**

புதிய சமுதாயத்துக்குச் செல்லும் முதல் நடவடிக்கைகள் எளிதானவையாக இருக்கவில்லை வருங்காலத்துக்குச் செல்லும் வழியை வகுக்க நேர்ந்த நாடான உருசியா மிகமிகக் குறைந்த பொருளியல் ஆற்றல் வளத்தையே பெற்றிருந்தது மேலும், முதல் முதல் உலகப் போர், சோவியத்துக் குடியரசின் உள்நாட்டு எதிரிகளுக்கும் அயல்நாட்டு ஆக்கிரமிப்பாளர்களுக்கும் எதிராக நடத்திய உள்நாட்டுப் போர் ஆகியவை நடந்த ஆண்டுகள் அந் நாட்டைப் பொருளியல் வீழ்ச்சி நிலைக்கே கொண்டு சென்று விட்டன இரும்பை உருவாக்கும் தொழில் போன்ற சில தொழில்களை அந் நாடு 18ஆம் நூற்றாண்டின் நிலையிலிருந்தே புத்துயிர் வேண்டியிருந்தது மக்கட் தொகுதியிலும் பெரும் பாலோர் கல்வி அறிவற்றோராக அல்லது அரை குறைக் கல்வி பெற்றோராக இருந்தனர் எஞ்சியிருந்த முதலாளிகளும் அனைத்து சமுதாயப் புத்துயிர்களுக்கும் எதிராகப் போராடினர்

பகைமை பாராட்டும் முதலாளிய உலகின் முற்றுகைக்கு ஆளாகியிருந்த சோவியத்து உருசியா அயல்

நாட்டுப் பொருளியல் உதவியையும் எதிர்பார்க்க முடியவில்லை மேலும் அது வலிந்து கவர்தலுக்கு ஆளாகக் கூடிய அச்சுறுத்தலையும் நிலையாக எதிர்நோக்க நேர்ந்தது

இத்தகைய சூழ்நிலையில் அந்நாடு தனது பொருளியலுக்கும் மக்களின் நல்வாழ்வுக்கும் மாறாக, தனது மிகக் குறைவான போரை முன்னிட்டு பிற்காலச் செல்வ அடிப்படைகளில் ஓர் அளவான பகுதியைப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஒதுக்கும் நெருக்கடிக்கும் ஆளாயிற்று.

இறுதியாக, முற்றிலும் புதியதான ஒரு சமுதாயத்தைக் கட்டியமைப்பதில் அதற்கு முன் பட்டறிவும் இருக்கவில்லை

எனினும் அதன்முன் உந்தாற்றல் ஊட்டும் ஒரு குறிக்கோள் இருந்தது; இந்தக் குறிக்கோளை எய்தும் வழியினைத் திறந்துவிடும் முறைகளைப் பற்றிய அறிவும் அதனிடம் இருந்தது; மேலும் இந்தக் குறிக்கோளை எட்டிப் பிடிப்பதற்கு அதனிடம் ஈடிணையற்ற ஆற்றலும் இருந்தது தன்னிடம் இல்லாதனவற்றை யெல்லாம் அந்த வழியில் செல்லும் போதே அது சம்பாதித்துக் கொண்டது; கற்றுத் தேற வேண்டியவற்றை யெல்லாம் வாழ்க்கையிலிருந்தே கற்றுக் கொண்டது.

முன்னாள் உருசிய பேரரசின் இடிபாடுகளின் மீது நவீன தொழில் நிலையங்களும் புதிய தொழில் நுட்பங்களும் உதித்தெழுந்தன.

வாழ்க்கை நிலையில் செங்குத்தான வளர்ச்சி ஏற்பட்டது; இன்று அதன் நிலை புரட்சிக்கு முந்திய காலத்தில் இருந்ததைக் காட்டிலும் ஆறுமடங்கு அதிகமாகும்.

சோவியத்து ஒன்றியம் தனது நாட்டில் நூற்றுக்கு நூறு கல்வியறிவு பெற்றவர்கள் உள்ளனர் எனப்

பெருமைப்பட்டுக் கொள்ள முடியும்; கல்வித் தரத்தில் அது அனைத்து முதலாளிய நாடுகளையும் விஞ்சி யுள்ளது.

சோவியத்து ஒன்றியத்திலுள்ள எண்ணற்ற மக்களும் தேசிய இனங்களும் தமது பொருளியல் அரசியல் பண்பாடு வளர்ச்சியில் மிகப் பெரும் முன்னேற்றத்தை எய்தியுள்ளனர். அவர்களெல்லாம் ஓர் உண்மையான உடன்பிறப்பாண்மை ஒன்றியமாக மாறியுள்ளனர்.

ஆயினும் இந்த வளர்ச்சிகள் அமைத்தின் முக்கிய விளைவு சமுதாய உறவுகளின் மாற்றம்தான்; சமன்மை அமைப்புத்தான். விளைவாக்க கருவிகளின் சமுதாய உடைமை எல்லா நகரங்களிலும் சிற்றூர்களிலும் நிலவியது; மாந்தனை மனிதன் சுரண்டும் சுரண்டல் முற்றிலும் ஒழித்துக் கட்டப்பட்டது; " அவரவர் திறமைக் கேற்ற உழைப்பு, அவரவர் உழைப்புக்கேற்ற ஊதியம்" என்ற கோட்பாடு உறுதியோடு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

இவையனைத்தும் உள்நாட்டுப் போரையடுத்த 10 - 15 ஆண்டுகளில் செயல் பெற்றன.

இவற்றை செயல்படுத்த மிகப் பெரும் ஈகங்களும் ஏராளமான தொல்லைகளும் ஏற்பட்டன என்பது உண்மை. எனினும் அரும் பெரும் பலன்களும் கிட்டின; புதிய வாழ்க்கை பிறந்தது; புதிய மக்கள் தோன்றினர்...

1941-ஆம் ஆண்டுத் தொடக்கத்திலேயே பொது வுடைமையைக் கட்டியமைப்பதற்கான திட்டத்தை உருவாக்க முனையும் நிலையில் சோவியத்து மக்கள் இருந்தனர். ஆனால் போர் மூண்டது. ஆதனால் சோவியத்து மக்கள் மிகவும் உடனடியான பணியை - கடுங்கோண்மை (பாசிஸ்டு) ஆக்கிரமிப்பை வலிந்துகவர்தலை முறியடிக்கும் பணியை - நிறைவேற்றி முடிக்க வேண்டியிருந்தது.

போரில் பெற்ற வெற்றியின் பயனாய் ஓர் உலக சோஷலிச அமைப்பு உருவாகியுள்ளது. பல மக்கள் மக்களாட்சி நாடுகள் சமுதாய உறவுகளில் தீவிரமான மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளன; சமன்மையைக் கட்டியமைப்பதைப் நிறைவு செய்து வருகின்றன. அவை நடந்து சென்ற பதை சோவியத்து மக்கள் மேற் கொண்ட பாதையின் எந்திரிகமான மறுபதிப்பு அன்று. புதிய சமுதாய்த்தின் பொதுவான முன்னேற்றத்தில், ஒவ்வொரு நாட்டு மக்களும் தனது வரலாறு, தேசியத் தன்மைகளையும் பிற தன்மைகளையும் தக்கபடி மதித்துணர்ந்து தத்தம் புதிய பாதையை வகுத்துச் செல்கின்றனர்; எனினும் இந்த வளர்ச்சியின் பொதுவான திசைவழியும் அதன் பொதுவான முறைகளும் அனைத்து சமன்மை நாடுகளுக்கும் இயல்பாகவே ஒரே சீராக உள்ளன. மேலும் சோவியத்து ஒன்றியப் பட்டறிவும் அவர்களுக்குப் பயன்பட்டது. சமன்மை நாடுகள் பெரும்பாலும் தமது முயற்சிகளை ஒன்றிணைக்கின்றன; புதிய சமுதாயத்தைக் கட்டுவதில் ஒன்றுக் கொன்று நட்புறவோடு உதவிக்கொள்கின்றன. அவற்றின் கூட்டு முயற்சிகளின் பயன்களே அவற்றின் சிறப்பை எடுத்துக் கூறும்.

தமது பொருளியலை வெகு விரைவில் வளர்த்துக் கொண்டு விட்ட சமன்மை நாடுகள் , இன்று உலகின் மொத்தத் தொழில் துறை ஆக்க அளவில் ஏறத்தாழ ஐந்தில் மூன்று பங்கை நிறைவு செய்கின்றன. இந் நாடுகளில் பலவும் கடந்த காலத்தில் தொழில் வளர்ச்சி மிகுந்த முதலாளித்துவ நாடுகளைக் காட்டிலும் மிக்வும் பின் தங்கிக் கிடந்தன.

சமன்மை பொதுவுடைமை சமுதாயத்தின் முழுமையான சித்திரத்தைத் தந்துவிட முடியாது. ஏனெனில் பொதுவுடைமை சமுதாயம் ஈடிணையில்லாத

உயர்ந்த வளர்ச்சி நிலையைத் தனது பண்பாகப் பெற்றதாகும். அது பலவகைகளில் சமன்மையைக் காட்டிலும் தனிச் சிறப்புகள் மிக்க சமுதாயமாகும்; உரிய காலத்தில் அவை உண்மையில் மிகப்பெரும் சிறப்புக்களாகவும் திகழும்.

பொதுவுடைமை அமைப்பு ஒரு மும்முனைப் சிக்கலுக்கான தீர்வைத் திட்டமிடுகின்றது. அவையாவன; பொதுவுடைமையின் பொருளாயத, தொழில் நுட்ப அடிப்புடையை உருவாக்குதல்; பொதுவுடைமை சமுதாய உறவுகளை உருவாக்குதல்; புதிய மாந்த அறிவு பெறச் செய்தல் ஆகியனவையாம். இவையனைத்தும் ஒரே காலத்தில் தீர்க்கப்படவேண்டும். சான்றாக, பொதுவுடைமையின் பொருளியல், தொழில் நுட்ப அடிப்படையின் தன்மை மிகப்பெரும் பொருளியல் செல்வத்தை அடையும் முடிக்கத்தக்கது மட்டுமல்லாமல் வேலை நேரத்தைக் குறைப்பதையும் தீர்மானிக்கின்றது. இது மக்களின் முழுமுதல் வளர்ச்சிக் கான முதற்பெறும் முன்தேவையாகும். ஏனெனில் வேலைக்குப் பின்னர் ஒருவருக்குக் கிட்டும் அமையத் தோடு இது நெருங்கிப் பிணைக்கப்பட்டதாகும். எனவே பொதுவுடைமையின் விளைவாக்க ஆற்றல்கள் வெறுமனே ஓர் உயர் நிலையை எட்டிப்பிடித்து வளர்ந்துள்ள பொதுவுடைமையின் விளைவாக்க ஆற்றல்கள் அல்ல; அவற்றின் புதிய குணத் தன்மைகள் உழைப்பின் ஆக்க ஆற்றலின் மிகப்பெரிய பேரெழுச்சியை உறுதி செய்ய வேண்டும்; அத்துடன் முதன்முதலில் அனைத்து சுமையான, திறமைக் குறைவான உடலுழைப்பையும் முற்றிலும் போக்குவது, வேளாண்மை உழைப்புக்கும் எந்திரத் தொழில் உழைப்புக்கும் இடையேயுள்ள இடைவெளியைக் கூடிய குறைந்த அளவுக்குக் குறுகச் செய்வது ஆகியவற்றோடு, தனது தன்மையிலும் ஒரு அளவான மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும்.

மற்றொரு பக்கத்தில், பொதுவுடைமையின் பொருளியல், தொழில் நுட்ப அடிப்படையானது உழைப்பாளியின் தொழில் முறைப் பின்னணி, பண்பாட்டுப் பின்னணி ஆகிய இரண்டையும் பொறுத்தவரை அவரிடமிருந்து ஒப்புயர்வற்ற உயர்தரமான புதிய பண்புகளையும் கோருகின்றது.

சோவியத்து பொதுவுடைமைக் கட்சியின் 23-வது பேராயத்தால் ஏற்கப்பெற்ற 1966-70 ஆண்டுக் காலத்தில் சோவியத்து ஒன்றியத்தின் பொருளியல் வளர்ச்சிக்கான ஐந்தாண்டுத் திட்டத்தின் தாக்கீதுகள் நகர்ப்புறத்துக்கும் சிற்றூர் புறத்துக்கும் இடையேயுள்ள வேறுபாட்டைக் களையும் நோக்கத்தோடு பற் பல நடவடிக்கைகளைத் திட்டமிட்டுள்ளது; அதாவது வேளாண்த்துறையில் விரைவான தொழில் நுட்ப முன்னேற்றத்தை எய்துவது; சிற்றூர்புற மக்களின் கலாசாரத் தரத்தை உயர்த்துவது; சிற்றூர் புற மக்களுக்கும் நகரப்புற மக்களுக்கும் இடையே வாழ்க்கைத் நிலைகளில் நிலவும் இடைவெளியைக் குறைப்பது முதலியனவாம். மக்களின் பொதுக் கல்வி நிலையும் தொழில் நுட்பக் கல்வித் தரமும் கணிசமான அளவுக்கு உயர்த்தப்படும்; உடலுழைப்புக்கும் மூளை உழைப்புக்கும் இடையேயுள்ள சிறப்பான வேறுபாடுகள் போக்கப்படும். தலைமையாக, இளம் மக்களுக்குப் பொது உயர் நிலைக் கல்வி புகுத்தப்படும்; மேற் கல்வி அல்லது தனித் தேர்ச்சி உயர் நிலைக் கல்வி பெற்ற மக்களின் தொகை முந்திய ஐந்தாண்டுக் காலத்தோடு ஒப்பிடும்போது, 65 விழுக்காடு அதிகரிக்கப்படும். புத்தகங்கள், தாளிக்கைகள், ஏடுகள் ஆகியவற்றின் வெளியீடுகளும் புதிய நாடக அரங்குகள்.,மன்றங்கள், திரைப்பட அரங்குகள் ஆகியவற்றின் நிர்மாணம் முதலியனவும் கணிசமான அளவிக்கு விஸ்தரிக்கப்படும். நகர்ப்புற, கிராமப்புற மக்களின் கலாசாரத் தரங்களில் நிலவும் இடை வெளியைப் போக்குவதில், தொலைக்

காட்சி புணி நிலைகளில் ஏற்படும் பெருக்கமும் ஒரு முதன்மை பாங்கினை வகிக்கும். எனினும் பொதுவுடைமையின் பொருளியல், தொழில் முனைப் சிக்கலின் அடிப்படையாகவும் விளங்குகின்றது.

விளைவாக்கத்தில் அறிவியல் கண்டுபிடிப்புகளைப் பரவலாகப் பயன்படுத்துவது, மேலும் மின் மயமாக்குவது, அனைத்தையும் எல்லாவற்றையும் எந்திரமய மாக்குவது, வேதியல் தொழில்நுட்பலியலை மேன் மேலும் அதிகமாகப் பயன்படுத்துவது, விரிவான முறையில் தானியங்கி கருவிகளை பெருக்கச் செய்வது, தொழில்நுட்ப அழகியலையும் படைப்பாக்க அழகியலையும் உயர்த்துவது - ஆகிய இவை அனைத்தும் ஆக்க அளவைப் பெரிதும் அதிகரிக்கும்; ஆக்கத்தின் குணத்திலும் ஓரளவு மாறுதல்களைத் தோற்றுவிக்கும். உழைப்பின் உற்பத்தியாற்றல் வளர்ச்சி வேலை நேரத்தைக் குறைக்கும்; ஒவ்வொரு மனிதரின் எல்லாவற்றின், இசைவான வளர்ச்சிக்குரிய கருவி நிலைமைகளை உருவாக்கும்; அவரவர் தேவைக்கேற்ப வினியோகம் என்பதைச் செயற்படுத்தும் நாளைச் சமீபித்து வரச் செய்யும்.

**மான்செசுட்டர் என்று எழுத்துக் கூட்டி**
**லிவர்பூல் என்று ஒலிக்கும் அழகு.**

கடந்த பத்தாண்டுகளில் முதலாளிய கோட்பாட்டில் ஒரு நிலைமாற்ற மாறுதல் ஏற்பட்டுள்ளது. வரலாற்று வளர்ச்சியைப் பொறுத்தவரை அதன் முக்காலச் கோட்பாடுவாணர்கள் கூறிவந்த பற்பல கருத்துக்களை அது உதறித் தள்ளிவிட்டது.

18-ஆம் நூற்றாண்டில் ஒரு சமுதாய அமைப்பை நீக்கிவிட்டு மற்றொரு சமுதாய அமைப்பு இடம் பெறுவதை, அதாவது நிலக் கிழார் அமைப்பைப் போக்கி

விட்டு முதலாளியம் இடம் பெறுவதைக் குறிக்கும் சமுதாய முன்னேற்றக் கருத்தை தர்காட்டும் கொன்டார்செட்டும் புகுத்தினர். எனினும் 19-ஆம் நூற்றாண்டிலேயே, முதலாளியக் கோட்பாடுவாணர்கள் முன்னேற்றத்தைத் தனியார்-உடைமை உறவுகளின் முழுமையாகக் கருதிவிட்டனர். 19-ஆம் நூற்றாண்டின் முற்பாதியில், "முன்னேற்றம் என்பது ஒழுங்கின் வளர்ச்சி" என்று அகசுடி காம்ட்டி அறிவித்தார். இங்கு "ஒழுங்கு" என்பது விளைவாக்க கருவிகளின் தனியார் உடைமை யையும் அதன் ஏனைய எல்லா உள்ளார்ந்த தன்மைகளையுமே குறித்து நின்றது.

இப்போதோ, இந்த இருபதாம் நூற்றாண்டிலோ அவர்கள் "முன்னேற்றம்" என்ற சொல்லையே ஒரு மாயச் சொல் எனக் கூறுகின்றனர். (1963-ல் மெக்சிகோவில் நடந்த மெய்மைவாணர்களின் 13-வது பேராயத்தில் அமெரிக்கச் சமூக வியலாளர் சனீடெர் அளித்த அறிக்கையின் கூற்று இது). இந்தச் சொல்லுக்கு மாற்றாக "சமுதாய மாற்றங்கள்" எனக் கூற வேண்டுமெனச் சொல்கின்றனர். (அமெரிக்கச் சமூக வியலாளர் தபிள்யு. ஆக்பர்ன் கூற்று இது). இதேபோல் வளர்ச்சி பற்றிய கருத்தும் புறக்கணிக்கப் பட்டுள்ளது.

"சமுதாய மாற்றங்கள்" பற்றிய அவர்களது கருத்து ஆரவாரமாகக் கொட்டி முழக்கப் படுகின்றது. இதன் சித்தாந்தங்களைப் பரவலாகப் பரப்புரை செய்யப் பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. அச் கோட்பாடு கள் வருமாறு:

1. "மக்கள் முதலாளியம்". இதில் உழைக்கும் மக்களில் சில பகுதியினர் பல்வேறு குழுமங்களில் பங்குதாரர்கள் ஆகின்றனர்; அதன் மூலம் குழுமங்களின் ஆக்கத்தில் " பங்கு பெறுகின்றனர்." இதன் மூலம் தொழிலாளர் களுக்கும் கோடிக்குரியவரர்களுக்கும் இடையே வகுப்பு

வேற்றுமைகள் எதுவும் இருக்கவில்லை என்று "மக்கள் முதலாளிய" ஆதரவாளர்கள் கூறுகின்றனர். இரு சாராரும் ஆக்கத்தை பெறுவதால் இரு சாராரும் ஒரே காலத்தில் தொழில் நிலையத்தின் முதலளிகளாகவும் தொழிலாளிகளாகவும் உள்ளனர். பல இலக்கக் கணக்கான தொழிலாளர்களின் வருமானம் அவர்களுக்கு அரைவயிற்று உணவுக்குத்தான் காண்கின்ற அதே நேரத்தில், சில நூறு தனிஒரு முதலாளிகளும், கொள்ளையாகச் சம்பளம் வாங்கும் அவர்களின் அடிமைக் கூட்டங்களும் கோடானு கோடிக்கணக்கில் பணங்களைச் சுருட்டிக் கொள்கின்ற உண்மைநிலை புறக்கணிக்கப் படுகிறது. அவர்களோ, இது வெறுமனே அளவு ரீதியான வேற்றுமையே தவிர, அடிப்படையில் வேறுபட்ட பொருளில்லை எனக் கூறுகின்றனர்.

2. "அடுக்குகளாக்கல்" இந்தக் கோட்பாடு "மக்கள் முதலாளியம்" பற்றிய "ஆய்வுரை"யிலிருந்து தோன்றுகிறது, ஆக்கமும் கூலியும் பொதுவான ஒருமித்த வருமான மூலங்களாக மாறிவிட்டன என்று கூறப்படுகின்றது. இதன் விளைவாய், வகுப்புகளும் வகுப்புப் போராட்டமும் மறக்கப்பட்டுப் போயின என்றும், சமுதாய அமைப்பின் தன்மையைக் குறித்துச் சொனனால், வகுப்புகளுக்குப் மாறாக அவற்றின் இத்தைப் பெற்றுள்ள இந்தச் சமுதாய "அடுக்குகள்" ஒன்றும் முதன்மை வாய்ந்தவை அன்று என்றும் கூறப் படுகின்றது.

3. "முதலாளியத்தின் நாகரிகப் படுத்தும் தொண்டு." இந்தக் கோட்பாட்டின் கண்டுபிடிப் பாளர்கள் முதலாளியம் குடியேற்ற நாட்டு மக்களுக்கு நாகரிகம் எய்துவதற்கான வாய்ப்பினை வழங்கியுள்ளது என்றும், அதன்பின் அது அவர்களுக்குச் உரிமையும் வழங்கியது என்றும் கூறுகின்றனர்.

4. இந்தக் கோட்பாடு "சேம நல அரசு", சம வாய்ப்புகள் உள்ள சமுதாயம்" என்று என்னென்னவோ

தடபுடலான பல சொற்களைக் கொண்டுள்ளது. ஆனால் எல்லா விளக்கமும் ஒரே காரியத்துக்குத்தான் வளர்ச்சியானது "பகுத்தளிப்பதில் ஒரு புரட்சியை", அதாவது பயன்பாடும், சமுதாய வளம் ஆகியவற்றின் உயர் நிலையை நோக்கிச் செல்லும் நிலையான விரைவுபடுத்தப்பட்ட இயக்கத்தை உறுதிப் படுத்துகிறது என்று மெய்பிக்கவே பயன்படுகிறது. இக் "கொள்கை"யின் ஆதரவாளர்கள் பின்வருவன போன்ற சான்றுகளைக் கூற முனைகின்றனர்; பெருஞ்செல்வரான துப்போன்ட்டின் மனைவியும் தொழிலாளர்கள் - எடுத்துக்காட்டாக சிகாகோ நகரத்து புலால் கடைத் தொழிலாளர்கள் - அருந்துகின்ற அதேவகையான பாலையே அருந்துகிறார்; அந்தத் தொழிலாளர்கள் எவ்வளவு பாலைக் குடிக்க முடியுமோ, அந்த அளவுக்கு அதிகமாகவும் அவர் குடிப்பதில்லை; பெருஞ்செல்வரான இராக் பெல்லரும் கூட அவரது தொழில் நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்களைப் போலவே ஒரே வகையான கடற்கரை இருக்கையில் படுத்துத்தான் செங்கதிர் குளிப்பு செய்கிறார்; குடியரசுத் தலைவரும் எளிய அமெரிக்கனும் ஆலிவுட் புகழ் நடிகர்கள் நடிக்கும் ஒரே தொலைக் காட்சியைத்தான் கண்டு களிக்கின்றனர்... வையால்... வையால்...

இத்தகைய கோட்பாடுகளை விளக்குவதன் மூலம் முதலாளியச் கோட்பாட்டினர்கள் மிகவும் மிகுதியான அரசியல் முடிவுகளுக்கும் கொள்கை முடிவுகளுக்கும் வந்து விடுகின்றனர்: அதாவது மார்க்சிய பொருள் நிலையில் கூறப்படும் முதலாளியம் அமெரிக்க நாட்டில் இப்போது இருந்து வரவில்லை யென்றும் ஏனெனில் வெற்றி என்பது தனியார் உடைமை, முன் முயற்சி, எதிரிடை ஆகியவற்றின் விளைவாக ஏற்படுவதாகும் என்பதை எடுத்துக் காட்டும் ஓர் எடுத்துக் காட்டாகவே

அமெரிக்கா விளங்குகின்றது என்றும் முடிவு கட்டுகின்றனர்.

இவையனைத்தும் "முதலாளியத்தின் உரு மாற்றம்" பற்றிய சிற்றூர்த்தனமான புனைவுச் சித்திரமேயாகும். பொதுவுடைமைக் கருத்துகளையும் சரிகட்டி நிற்பதற்காகவே இதனைத் தோற்று வித்துள்ளனர்.

முதலாளியத்தின் இந்தக் "புனைவுச் சித்திர"த் தன்மையையும், "சமுதாய மாற்றங்"களின் போக்கு களையும் பற்றி ஏற்படக் கூடிய அனைத்து ஐயப்பாடுகளையும் அகற்றுவதற்காக, புதிய தனியரசாட்சி கோட்பாட்டு வாணர்கள் இன்னொரு கருத்தையும் - "தனிமய தொழில் மய சமுதாயம்" என்ற கருத்தையும் - தோற்றுவிக்கின்றனர். முதலாளியத்தின் கீழ் ஏற்படும் "சமுதாய மாற்றங்கள்" பற்றிய "தெள்ளத் தெளிவான" சித்திரங்களை வழங்குவதோடு, இந்தப் புதிய கருத்தைக் கொண்டு, பொதுவுடைமை மாந்த இயல்போடும் மானிட நலன்களோடும் மோதிக் கொண்டதால் அது தோல்வி கண்டு விட்டது என்றும், பொதுவுடைமை "சமுதாய மாற்றங்க"ளுக்கு உள்ளாகிக் கொண்டிருக்கிறது என்றும், அந்த மாற்றங்கள் அதனுள் தனியார் நலனையும் விளைவாக்க கருவிகளின் தனியார் உடைமையையும் "திரும்பவும கொண்டு வருகின்றன" என்றும், இதன் விளைவாக, (சாராம்சத்தில்) முதலாளித்துவத்தின் தன்மைக்ளையும் (சில குறிப்பிட்ட புறத் தன்மைகளில்) பொதுவுடைமைத் தன்மைகளையும் ஒரு சேரத் தன்னுட்கொண்ட ஒரு புதிய சமுதாயத்தின் தோற்றத்துக்கு இது வழி வகுக்கின்றது என்றும் மெய்பிக்கப் பார்க்கின்றனர்.

"முதலாளியமும் பொதுவுடைமையும் தாமாகவே ஒன்றிவிடுமா?" - இந்தக் வினாவையும் "ஒருமித்த தொழில்மய சமுதாயத்தின்" கோட்பாடு வாணர்கள்

கேட்டுக் கொள்கின்றனர். இறுதிக் கட்டத்தில் அவை சங்கமித்தே தீரும் என்பதே அவர்களது ஒரே பதில். கம்யூனிசம் கூறுகின்ற திட்டமிடுதல், நல்வாழ்வு ஆகியவை யெல்லாம் "மக்கள் முதலாளியத்தின் ஆரம்பக் கட்டத்துக்கு மாறிச் செல்லும் மாற்றத்தின் அடிப்படையில் நிறைவேற்றப்படும். மக்கள் முதலாளியமோ "பகிர்ந்தளிப்பில் புரட்சி"யை உண்டு பண்ணும்; இவ்வாறாக, அது "சம வாய்ப்புகள் கொண்ட சமுதாயமாக" மாறிவிடும் இதனால் "சமன்மையும் முதலாளியமும் ஒரே பொருளின் இரு வடிவங்களே"யாகும்.

மார்க்சியப் பகைவர்கள் அறிவியல் பொதுவுடைமையை அதனுள்ளிருந்து தகர்க்கவே எப்போதும் முனைகின்றனர். அதாவது மார்க்சின் கருத்துகளை இலெனினது நடவடிக்கைகளுக்கு எதிராகக் காட்டித் தகர்க்க முனைகின்றனர். மார்க்சின் "பொருளியல் ஆய்வுறுதி" 20ஆம் நூற்றாண்டு பட்டறிவால் மறுக்கப்பட்டதைக் கண்டறிந்த இலெனின் தன்னிச்சைத் தருக்கத்துக்குத் தாவி விட்டதாக அவர்கள் கூறுகின்றனர். ஆனால், உண்மை இதுதானா?

முதலாவதாக, "மார்க்சின் பொருளியல் ஆய்வுறுதி" மார்க்சியத்தை திறனாய்வு செய்தவர்களின் கண்டபிடிப்பேயாகும். சமுதாய வளர்ச்சி அதன் பொருளாதார, ஆக்க வளர்ச்சியால் உறுதி செய்யப் படுகின்றது. என்று மார்க்சு மெய்ப்பித்தார். ஆனால் இந்த வளர்ச்சி தானாகவே, தன்னிச்சையாகவே நிகழ்ந்து விடுவதில்லை. இதற்க மாறாக, பொருளாயம் முழுவதும், சமுதாயம் முழுவதும் எய்துகின்ற முன்னேற்றமானது மக்களின், தேயத்தின் வகுப்புகளின் செயல்பாட்டினால் ஏற்படும் விளைவாகும். இந்தச் செயற்பாடும் அந்த மக்களின் உணர்வு, அவர்களது மன உறுதி, சமுதாய

நடவடிக்கைகள் முதலிய கூறுகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டதாகும்.

இலெனினது "தன்னிச்சத்தருக்கமும்" இதே போன்ற இன்னொரு கண்டுபிடிப்புத்தான். வெகு மக்களின் ஆக்க மிக்க அரசியல் நடவடிக்கைகளைப், புரட்சிகரமான ஆக்க ஆற்றல்களை ஊக்குவிக்கக் கூடிய நிலைமைகளை எண்ணி ஆராய்வதில் இலெனின் பெருங்கருத்து செலுத்தினார். இது முற்றிலும் இயல்பானதே. ஏனெனில் தனியதிகார ஆட்சி ஊழி சமன்மைப் புரட்சி சிக்கலினை உண்மையில் முன்னுக்குக் கொண்டு வந்து விட்டது. இதனை தனியதிகார ஆட்சியின் பொருளியல் முறைகளைத் துருவி ஆராய்வதன் மூலம் இலெனின் நிரூபித்தும் காட்டினார். இந் நிலையில் மார்க்சுக்கு எதிராக இலெனினை நிறுத்திக் காட்டுவதற்கு ஆதாரங்கள் ஏது?

தனிவல்லாட்சிக் காலத்தின் வரலாற்றுப் பட்டறிவையும் சமன்மை அமைப்பையும் கருத்தில் கொண்டு, இலெனின் மார்க்சின் கருத்தூற்றை வளர்க்கத்தான் செய்தார்; அவர் மார்க்சியத்தைப் புதிய கருத்துகளால் செழுமையுறச் செய்தார்.

முதலாளியமும் பொதுவுடைமையும் தம்முள் ஒன்றுமிக்கின்ற திசை வழியில் என்றுமே வளர்ந்தது மில்லை; வளரப் போவதும் இல்லை. அவை என்றுமே தனித்த "ஒன்றிணைந்த தொழில் மய சமுதாயமாக" ஒன்றுமிக்கப் போவதில்லை.

முதலாளியக் கோட்பாட்டாளர்கள் இப்போது சோவியத்து ஒன்றியத்திலும் பிற சமன்மை நாடுகளிலும் நடை பெற்று வரும் பொருளியல்ச் சீர்திருத்தங்களை குறிப்பாகச் சுட்டிக் காட்டி, இந்தச் "சங்கம"த்தை மெய்பிக்க முனைகின்றனர். இந்தச் சீர்திருத்தங்கள் அங்காடி சரக்கு விளைவாக்க முறைகளை ஆக்கம், விலை கடன் முதலிய பொருளியல் உந்துகோள்களின்

பொருளியல் உறுதியோடு பயன்படுத்தும் அடிப்படையில் அமைந்தனவாகும். இத்தகைய பொருளியல் உந்து ஆற்றல்களிடம் செலுத்தப்படும் கவனத்தை, சமன்மை சமுதாயம் தனியார் உடைமை அடிப்படையில் அமைநத விளைவாக்கக் கோட்பாடுகளுக்குத் திசை திரும்புகின்றது என்று குற்றம் சாட்ட "ஒன்றான தொழில் மய சமுதாயத்தை"ப்பற்றிப் பேசும் கோட்பாட்டினர் பயன்படுத்துகின்றனர்.

எனினும் சோவியத்து ஒன்றியத்திலும் வேறுபல சமன்மை நாடுகளிலும் ஏற்பட்டுவரும் பொருளியல் மாற்றங்கள், பொதுவுடைமை அமைப்பின் பொருளியல் சிக்கல்களுக்கு தீர்வு காண்பதற்கான, பொதுவுடைமை அமைப்பு, அனைத்து மக்களின் தேவைகளையும் முழுமையாக நிறைவு செய்தல் ஆகிய நடுமையான குறிக்கோளை மிகத் விரைவாக எய்துவதற்கான மிகவும் ஒத்ததான நிலைமைகளை உருவாக்கும் கருவியே யன்றி வேறில்லை.

பொதுவுடைமை முழுமையாக வெற்றி பெறும்போதுதான் அங்காடிச் சரக்கு ஆக்கமும், சந்தைக்சரக்கு - பண உறவுகளும் போக்கப்படும். அவை சமன்மையின் கீழ் இன்னும் இருந்தே வருகின்றன. பயன்பாட்டுப் பண்டங்களை உழைப்புக்கேற்றபடி பகிர்ந்தளிப்பதன் மூலம் (சமன்மையின் கீழ் பண்டங்களின் பகிர்வு உழைப்பின் நிலைக்கும் அளவுக்கும் ஏற்பவே நடைபெறுகின்றது) குறிப்பிட்ட அளவு உழைப்பைத் தன்னுள் கொண்ட ஒரு விற்பனைப் பொருள் அதே அளவு உழைப்பைத் தன்னுட் கொண்ட மற்றொரு விற்பனைப் பொருளுக்குப் பரிமாற்றிக் கொள்ளப்படுகிறது.

சமன்மை சமுதாயத்தில் நிலவும் அங்காடிச் சரக்கு - பண உறவுகளின் தன்மை முதலாளியத்தின் கீழுள்ள இதே வகையான உறவுகளிலிருந்து அடிப்படையிலேயே

மாறுபடுகிறது. முதலாளியத்திலோ சமன்மை பகிர்வை உழைப்புக்கு ஏற்ப மட்டுமே வழங்குகின்றது. (முதலீடு செய்யப்பட்ட மூலமுதலுக்கு ஏற்ப ஊதியங்கள் பகிர்கிக்கப் படுவதில்லை; ஏனெனில் அதில் முதலாளிகளே இல்லை. சமன்மையின் ஊதியம் அனைத்தும் உழைக்கும் மக்களுக்கே செல்கிறது). இரண்டாவதாக, உரிய பயன்பாட்டுக்கான பொருள்கள் மட்டுமே பகிர்கிக்கப்படுகின்றன. இதனால் விளைவாக்கக் கருவிகளின் தனியார் உடைமையைப் புதுப்பிக்கும் அனைத்து வழிவகைகளும் தவிர்க்கப்படுகின்றன. மூன்றாவதாக, ஆக்கம், பகிர்வு ஆகிய இரண்டுமே தானாக நிகழ்ந்து விடுவதில்லை; அவை மக்கள் அனைவரின் நல்வாழ்வை நோக்கி முன்னேறும் குறிக்கோளைக் கொண்ட ஒரு திட்டமிட்ட பொருளியலின் விளைவாகவே நிகழ்கின்றன.

எனவே அங்காடிச் சரக்கு - பண உறவுகளை முதலாளியச் சுரண்டல் நலன்களுக்காகப் பயன்படுத்தும் சாத்தியப்பாட்டுக்கே சமன்மையின் கீழ் இட மில்லை. அவை மக்கள் அனைவரின் நல்வாழ்வையும் மேம்படுத்தப் பயன்படுகின்றன; அதன்மூலம் வெகு மக்களின் வளர்ந்தோங்கும் முன் முயற்சியையும் படைப்பாற்றல் நடவடிக்கையையும் ஊக்குவிக்கின்றன; உழைப்பின் விளைவாக்க ஆற்றலை உயர்த்துவதிலும், விளைவாகும் பொருளின் படிநிலை விருத்தி செய்வதிலும், தேயப் பொருளியலில் மிக விரைவான வளர்ச்சியை எய்துவதிலும் ஒவ்வொரு தொழிலாளியையும் தொழில் நிலையத்தையும் அக்கறை கொள்ளச் செய்கின்றன.

சோவியத் ஒன்றியத்திலும் வேறு சில சமன்மை நாடுகளிலும் செயலாக்கப்பட்டுவரும் பொருளியல் சீர்திருத்தங்கள் அவற்றின் பொருளியல் வளர்ச்சியில் ஒரு புதிய முதன்மை வாய்ந்த நடவடிக்கையாகும்.

முதலாளியத்தின் கீழ் ஏற்படும் "சமுதாய மாற்றங்களை"ப் பற்றி முதலாளியக் கொள்கைகள் தீட்டித் தந்துள்ள சித்திரம் முழுவதும் உண்மைக்குப் பெரிதும் புறம்பான வண்ணங்களாலேயே தீட்டப் பட்டுள்ளது.

பயனீட்டாளரின் நலன்களுக்கு முற்றிலும் பொருந்திய படைப்பு வளர்ச்சியில் அடிப்படையில், இக்கால முதலாளியம் ஒரு "சேமநல அரசா"க மாறியுள்ளது என்று இக்கால முதலாளியத்தின் ஆதரவாளர்கள் கூறுகின்றனர். மேலும் வளர்ச்சி பெற்ற முதலாளிய நாடுகளில் உழைக்கும் மக்களின் குறிப்பிட்ட பகுதியினரது வாழ்க்கை நிலை மிகவும் உயர்வாக இருக்கிறது என்பதும் அவர்களது முதன்மையான கருத்தோட்டமாகும்.

முதலாளிய சமுதாயத்தில் பல இலகக் கணக்கானவர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்துக்கும் வறுமைக்கும் ஆளாகி நிற்பதை அவாகள் பொருட்படுத் துவதில்லை; அங்கு வேலையில் இருப்பவர்களும் கூட வேலையில்லாத் திண்டாட்ட அச்சத்துக்கு ஆளாகி யுள்ளனர். 1965இல் அமெரிக்க தனி நிலை முதலாளிகள் 4,500 கோடி தாலர்களை நிகர ஆதாயமாகப் பெற்றுக் கொண்டனர்; இது இரண்டாம் உலகப் போர் ஆண்டுகளின்போது கிட்டிய ஆண்டுச் சராசரி ஆதாயத்தைக் காட்டிலும் நான்கு மடங்கு அதிக மாகும். இதே சமயத்தில் மொத்த மக்கள்தொகையில் 15 விழுக்காட்டுக்கு மேற்பட்ட, 3.2 கோடி அமெரிக்கர்கள் வறுமையில் வாடுகின்றனர். இதனை அமெரிக்க அரசாங்கமே ஒப்புக்கொண்டுள்ளது.

"பயனீட்டாளரின் நலன்களுக்கு முற்றிலும் பொருந்திய அந்த விளைவாக்கம் என்னவாயிற்று? பயனீட்டாளரைப் பற்றிய சிந்தனையெல்லாம் , அவர் வாங்கும் ஆற்றல் படைத்தவராக இருக்கின்ற

வரையில்தாதன். மற்றவற்றைப் பொறுத்தவரையிலோ, முதலாளிய வணிகர்களுக்கு மாந்தன் ஒரு பொருட்டே அன்று. நூறு அல்லது இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைப்போலவே இன்றும் பகிர்வு முதலீட்டின் அடிப்படையில்தான் இருக்கிறது; வருவாயே ஆக்கத்தின் ஒரே நோக்கமாக இருந்து வருகிறது.

முதலாளியத்தின் "நாகரிகப்படுத்தும் கடப்பாடு" பற்றி என்ன சொல்கிறீர்கள்! - என்று முதலாளிய ஒத்துழைப்பாளர்கள் கூக்குரலிடுகிறார்கள். முதலாளியம் பிற்பட்ட மக்களுக்கு நாகரிகத்தைக் கொண்டு வருகிறதாம்.

ஆனால் தனி வல்லாட்சி அளித்த "கொடை வளங்கள்" என்ன? இந்தக் "கடப்பாட்டின்" "பலன்கள்" யாவை? வறுமையும், கல்லாமையும், குடியேற்ற நாட்டு மக்களுக்குத் "நிலை கெட்டவர்கள்" என்று சூட்டிய பட்டமும்தான் கண்ட பயன். நியூ கினியா விலுள்ள பாப்புவன் மக்கள் இன்னும் கற்காலத்திலேயே வாழ்கின்றனர்; தாசுமேனியர்கள் அழிக்கப்பட்டு வருகின்றனர். வட அமெரிக்காவிலும் ஆத்திரேலியா விலும் மிஞ்சியுள்ள பழங்குடிகளுக்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப் படுகின்றன. ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்க தனி வல்லாட்சி கடுமையாகப் போராடுகிறது. மொசாம்பிக்கிலும் அங்கோலாவிலும் ஏனைய குடியேற்ற நாடுகளிலுமுள்ள 8 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் இன்னும் பேருக்குக்கூடச் உரிமையைப் பெற்றுவிடவில்லை. அரசியல் விடுதலை யைப் பெற்றுவிட்ட மக்களும் கூட (அவர்கள் பெற்ற இந்த வெற்றிகளே மிகவும் அரும் பாடுபட்டுப் பெற்றவைதான்!) முற்றிலும் நம்பற்கரிய பொருளியல் தொல்லைகளை எதிர்த்துப் போரிட்டுக் கொண்டிருக் கின்றனர், இதுதான் குடியேற்றவல்லாண்மையர் செய்த தொண்டு. ஆசிய

ஆப்பிரிக்க இலத்தீன் அமெரிக்க நாடுகளின் தேய வருமானமோ அமெரிக்கா, இங்கிலாந்து, மேற்கு செருமனி வேறு பிற தொழில் வளர்ச்சி மிக்க முதலாளிய நாடுகள் ஆகியவற்றின் வருமானத்தைக் காட்டிலும் நம்புதற்கரிய வகையில் மிகமிகக் குறைவாக உள்ளது. இந்த தனி வல்லாதிக்க நாடுகளோ, குடியேற்ற, அடிமை நாடு மக்களைக் கொள்ளையடித்துத்தான் தமது செல்வங்கள் பலவற்றையும் திரட்டிக் கொண்டுள்ளன.

"அடுக்குகளாக்கல்" என்னவாயிற்று? மக்களை அவரவர்தம் வருமானம், கல்வி, பிற தன்மைகள் முதலியவற்றுக் கேற்பப் பகுதி பகுதியாகப் பிரிக்கலாம் என்பது உண்மைதான். இந்த வேறுபாடுகள் அனைத்துக்கும் குறிப்பிட்ட பொருள் உண்டு. ஆனால் விளைவாக்கக் கருவிகளின் உடைமையோடுள்ள பல்வேறு உறவுகளாலும், உற்பத்தி வளர்ச்சிப் போக்கில் சமுதாய குழுக்களுக்குள்ள பல்வேறு பங்கினாலும் உறுதி செய்யப்படும் சமுதாயத்தின் வகுப்புப் பிரிவினையை அவை மாற்றிவிட முடியாது. இந்த கூறுகளை ஒருவர் எவ்வளவு இடர்ப்பட்டு புறக்கணிப்பு செய்துவிட முயன்றாலும், உண்மை நிலைமை அவற்றை முன்னணிக்குக் கொண்டுவரத் தான் செய்யும்: அந்த "இல்லாத"வர்க்கப் போராட்டம் நாள்தோறும் இருந்து கொண்டுதான் வருகிறது. ஆண்டு தோறும் வேலை நிறுத்தம் செய்பவர்களின் தொகை 5.5 முதல் 5.7 கோடிவரை இருந்து வருகிறது - இது சென்ற பத்தாண்டுகட்குமுன் இருந்ததைக் காட்டிலும் 100 விழுக்காடு அதிகமாகும்.

"மக்கள் முதலாளியவம்" என்னவாயிற்று? எடுத்த எடுப்பில் சொன்னால், பொருளியல் முறையாக வளர்ச்சிபெற்ற நாடுகளிலும் கூட, தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கையில் ஐந்து அல்லது ஆறு

விழுக்காட்டுக்கு மேற்படாத "மக்கள் முதலாளிகளே" உள்ளனர். ஆனால் சிறப்பான செய்தி இதுவன்று. உண்மையில் கவனத்துக்குரிய செய்தி வேறு. சான்றாக, திருவாளர் போர்டுக்கு அவரது சம்பளம் கொடுக்கப்படாது போனால், அவர் தமக்குக் கிடைக்கும் ஆதாயப் பங்குகளைக் கொண்டு வாழ்வதால், ஒன்றும் குறைந்துபோய்விடமாட்டார். ஆனால் இதே நிலைமை ஒரு தொழிலாளிக்கு ஏற்படுமானால், அவருக்குக் கிடைக்கக்கூடிய பங்குத் தொகை அவரது சாவுச் செலவுக்குக்கூடக் கட்டிவராது. இவைதாம் "சம வாய்ப்புகள்" ஆகும்!

ஒரு சொல் எவ்வாறு எழுத்துக் கூட்டிச் சொல்லப்படுகிறதோ, அவ்வாறே அது ஒலிக்கப் படாமல் போவது பல மொழிகளுக்குரிய தனித்தொரு தன்மையாகும். ஆங்கிலம் படிப்பவர்கள் இவ்வாறு அடிக்கடி வேடிக்கையாகச் சொல்வார்க்கள்: "நீங்கள் 'மான்செசுடர்' என்று எழுத்துக் கூட்டி, 'இலிவர்பூல்' என்று ஒலிக்க வேண்டும்."

இக்கால முதலாளிய சார்பாளர்கள் முதலாளியத்தையும் அதன் சமுதாய அமைப்பையும் பற்றிய கருத்தை, எழுத்துக் கூட்டுவதில் திருத்தங்கள் செய்வதன் மூலம் "மாற்று"த் தீர்மானித்தபோது அவர்கள் ஒன்றும் அதனை வேடிக்கையாகச் செய்யவில்லை. ஆனால் மக்கள் ஏமாந்துவிட மாட்டார்கள். "மக்கள் முதலாளியம்" என்றால் "வல்லாதிக்கம்" என்றும், "அடுக்குகளாக்கல்," என்றால் "வகுப்புப் போராட்டம்' என்றும், "சேமநல அரசு" என்றால் "வேலையில்லாத் திண்டாட்டம், பிரிவினை, வறுமை" என்றும்தான் பொருள் என்பதை அவர்கள் அறிந்து கொள்வர்.

இத்தகைய புதிய தலைப்புகளெல்லாம் முதலாளிய த்தின் பொருள்தன்மையையோ அதன் கொள்ளைக்

காரக் குணத்தையோ மாற்றிவிட முடியாது. தனிவல்லாதிக்கம் இருக்கின்ற வரையிலும் அதன் முறைகளும் தொடர்ந்து செயல்பட்டு வரத்தான் செய்யும்.

சமுதாய வளர்ச்சி ஒரு தாழ்ந்த கட்டத்திலிருந்து உயர்ந்த கட்டத்துக்கு, முதலாளியத்திலிருந்து பொதுவடைமைக்குச் செல்லும் இயல்பான தேவையை வரலாறு அழிக்கவும் இல்லை; அதனால் அழிக்கவும் முடியாது. மேலும் கடந்த பல ஆண்டுகள் தனிவல்லாதிக்கத்தின் உள்ளார்ந்த முரண்பாடுகளை அதிகரிக்கச் செய்துள்ளன; இந்த மாற்ற முடியாத நிகழ்ச்சிப் போக்கை விரைவுபடுத்தியுள்ளன. உண்மையான உரிமையையும், நட்பமைதியையும், சமுதாய சமத்துவத்தையும், வளமான வாழ்வையும் உறுதி செய்யும் ஒரு புதிய சமுதாயத்தை - பொதுவுடைமை சமுதாயத்தை - கட்டியமைப்பதற்காக துன்ப துயரம் மலிந்த வறுமைப் படுகுழியிலிருந்து மாந்தகுலம் கரையேறி வந்து கொண்டிருக்கின்றது.

**இன்றைய மேம்பாடு**

போர்ப் பிற்கால ஐம்பதாண்டுகள் 75 புதிய தனியாட்சி அரசுகளின் தோற்றத்தைக் கண்டுள்ளன. குடியேற்ற ஆட்சியிலிருந்து தம்மைத் தாமே விடுவித்துக் கொண்டுவரும் மக்கள் புதிய புதிய வெற்றிகளை ஈட்டி வருகின்றனர்.

விடுதலைவாழ்வு பெற்ற முதல் மாதங்களும் ஆண்டுகளும் செல்ல செல்ல, தனிவல்லாண்மை வாணர்கள் தமக்கு விட்டுச் சென்றுள்ள பொருளியல், பண்பாட்டு மரபு தமது தேயம் செம்மைபெற ஒரு தடையாக உள்ளது என்பது அந் நாடுகட்கு மேன்மேலும் தெளிவாகின்றது. பெற்ற விடுதலை வெறும் மாயைத் தோற்றம்போல் கரைந்து மறைந்து போகாது தடுக்கவும், குடியேற்றவல்லாண்மை புதியதொரு வடிவில் குடி

புகுந்துவிடக் கூடிய ஒவ்வொரு ஆகும் நிலையையும் தடுத்து நிறுத்தவும், அந் நாடுகள் அரசியல் உரிமைப் பொருளாதார உரிமையின் மூலம் வலிமைபெறச் செய்தாக வேண்டும்.

தமது தேயப் பொருளாயலைக் கட்டி யமைப்பதில், தாம் எந்தப் பாதையில் செல்வது, முதலாளியப் பாதையிலா அல்லது சமன்மைக்கு வழி வகுக்கும் முதலாளியமற்ற பாதையிலா என்ற சிக்கல் புதிதாக விடுதலையடைந்த மக்களின் முன் தவிர்க் கொணாத வண்ணம் எதிர்ப்படுகிறது. எனினும் சில மக்கள் மூன்றாவது பாதை ஒன்றும் இருப்பதாகவும், உரிமை, செல்வவளம், பண்பாட்டு வளர்ச்சி ஆகியவற்றுக்கு அதுவே வெகுவிரைவாகச் செல்லும் பாதை எனவும் நம்புகின்றனர். ஆனால் விரைவிலேயே அவர்கள் அதில் நம்பிக்கை இழந்து விடுகின்றனர். ஏனெனில் அதில் அவர்களுக்கு வழங்கப்பட்ட வாய்ப்புகளும் அந்தப் பாதையுமே போலியானவை.

வரலாற்றின் முறைகளை மீறுவதில் இதுவரை எவரும் வெற்றியடைந்ததில்லை. ஒவ்வொரு மக்களது வளர்ச்சியின் தனிப்பட்ட தன்மைகளை இங்குக் குறிக்க வில்லை - இந்த வளர்ச்சி அந்தந்த நாட்டின் பிரத்தியேகமான வரலாற்றுத் தன்மைகளையும் பிற தன்மைகளையும் பொறுத்ததாகும். செய்தி என்னவெனில், ஒவ்வொரு நாட்டு மக்களது வளர்ச்சியின் வேறுபட்ட போக்கானது உண்மையான வளர்ச்சி முறைகளை நடைமுறையில் கொண்டு வருவதில் ஒரு தனித் தன்மையான தேசிய வடிவமாக உள்ளது. வரலாற்றின் போக்கைப் பின் வாங்கச் செய்ய இயலாது. இறந்த காலம் என்றும் எதிர்காலம் ஆக முடியாது.

இது தொல்லுயிரியல் மூலம் தெரிய வந்துள்ளது; உலகில் ஒரு காலத்தில் தினோசார் என்ற மாபெரும்

விலங்குகள் வாழ்ந்து வந்தன; மாந்தனின் உயிரியல் படிமுறை வளர்ச்சிக் கட்டங்களில் இவையும் ஒன்றாக இருந்தன. ஆனால் அவை அழிந்து மறைந்து போயின; இனி எதுவும் அவற்றைத் திரும்பக் கொண்டு வர இயலாது.

எனவே மாந்த குலம் முன்னோக்கிச் செல்லும் கடமையை எதிர் நோக்கி நிற்கின்றது. மனித வரலாற்றின் தொல்லைப் பழங்காலத் தொடக்கத்தில் இருந்ததாகக் கூறப்பட்ட, மிகவும் பெருமை பாராட்டப் பெற்ற, அந்தப் "பொற்காலம்" ஒரு கட்டுக் கதையைத் தவிர வேறில்லை, அதனைக் கற்காலம் என்றுதான் சொல்ல வேண்டும்; அக் காலம் மனிதனுக்குப் போதுமான உணவைக் கூட வழங்க முடியவில்லை. அதன்பின் அடிமைக் காலம் இருந்தது; நிலக்கிழமை இருந்தது; அதன்பின் முதலாளியம் இருந்தது; இப்போதும் இருக்கின்றது; பொது வுடைமையும் இருக்கிறது; இருக்கவும் செய்யும்.

புதிதாக விடுதலை பெற்ற அரசுகள் முதலாளிய வளர்ச்சிப் பாதையை மேற்கொள்வதன் மூலம் என்ன எதிர்பார்க்க முடியும்? சிலருக்கே செல்வம்; வெகுமக்களுக்கோ ஈவிரக்கமற்ற சுரண்டல்; கொடிய வறுமை - அவ்வளவுதான். தேசிய முதலாளிகள் அயல்நாட்டு முதலாளிகளைக் காட்டிலும் எந்த வகையிலும் குறைவாக உழைக்கும் மக்களை ஒடுக்க வில்லை. தனது கொள்ளைக்கார நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, அந்த முதலாளி வகுப்பு, நாட்டுக்கிரண்டகம் புரியக்கூடத் துணிந்து விடுகின்றது. காங்கோவில் அண்மையில் நடந்த நிகழ்ச்சிகள் இதற்கு ஒரு தகுந்த எடுத்துக்காட்டாகும். மேலும் இதைப்போல் வேறுபல சான்றுகளும் கூறலாம்.

சமுதாய அடிமைத்தனத்தை உறுதிப்படுத்துவதன் மூலம், முதலாளிய வளர்ச்சிப் பாதை உண்மையில் குடியேற்ற வல்லாண்மையே புதிய பெயரில் திரும்பக் கொண்டு வருகின்றது.

18, 19ஆம் நூற்றாண்டுகளில் முதலாளியம் வளர்ச்சி பெற்று வந்தபோது நிலவிய நிலைமைகளிலிருந்து, அடிப்படையிலேயே வேறுபட்ட நிலைமைகளின் கீழ்தான் புதிதாக விடுதலை அடைந்த நாடுகள் வளர்ச்சி பெறுகின்றன. அவை முழு நிறை முதலாளிகளோடு எதிரிடை முடிவதல்லை அவை ஏனைய மக்களை அடிமை கொண்டும் முதலாளியத்தை வளர்த்துக் கொள்ள முடியாது, இறுதியில் "தேசிய முதலாளியவம்" தனியதிகாரத்தின் ஆதரவையே நாட நேர்ந்து விடும்.

முதலாளியமற்ற வளர்ச்சிப் பாதையை, சமன்மைப் பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ள மக்களுக்கு வருங்காலம் வழங்க இருப்பவை என்ன?

**சமுதாய உரிமை**
**பொருளியல் பெருவளர்ச்சி**
**தேசியச் செல்வ வளம்**

சமன்மை மாந்தனை மாந்தன் சுரண்டும் சுரண்டலுக்கு முற்றுப் புள்ளிவைப்பதன் மூலம், சுரண்டும் வகுப்புகள் என்றென்றும் கடைப் பிடித்து வந்த வண்ண இன அல்லது தேசிய ஒடுக்குமுறையின் அனைத்து வடிவங்களையும் ஒழித்துக் கட்டி விடுகிறது, அது மக்களுக்கு உண்மையான உரிமையை உறுதி செய்கிறது; மேலும் உறவுற்ற உரிமையும் சமன்மையும் உண்மையில் கண் கண்ட உரிமையாக மாறச் செய்கிறது. அது அவர்களின் அரசியல், பொருளியல், பண்பாட்டு வளர்ச்சியை உறுதி செய்கிறது பொருளியல் பண்பாட்டு வளர்ச்சியின் வளர்ந்தோங்கும் நிலையும், அரசை ஆட்சி செய்யக் கூடிய தேசிய வல்லுனர்களைப் பயிற்றுவிப்பதும், உண்மையான உரிமையையும் தன்னிச்சையையும் எய்துவதை எளிதாக்குகின்றன.

செழித்தோங்கும் பொருளியல், பண்பாடு ஆகியவற்றோடு, தேசிய மரபைப் பாதுகாக்கவும்,

மக்களுக்கு வளமான வாழ்வைக் கொண்டு வரவும், இணக்கமான ஒத்துழைப்பின் அடிப்படையில் தேயங் களுக்கிடையே நட்புறவான உறவுகளை உறுதிப் படுத்தவும் தேவையான நிலைமைகளும் உருவாக்கப் படுகின்றன.

இவையனைத்தும் ஏற்கெனவே சோவியத்து ஒன்றியத்தில் எய்தப் பெற்றுவிட்டன. இதனை அறிய, உருசிய மக்களின் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் போதும். புரட்சிக்கு முந்திய காலத்தில் நடு ஆசியா, தூர வடக்கு, சைபீரியா, தூரக் கிழக்கு முதலிய பகுதிகளில் வாழ்ந்த பல மக்களும் தொன்மையான வளர்ச்சிக் கட்டத்தில்தான் இருந்து வந்தனர்

நாம் நடு ஆசியாவிலுள்ள உசுபெக், கிர்கீசு, தாசிக், துருக்மென் ஆகிய மக்களை மட்டும் பார்ப்போம். அக்டோபர் புரட்சிக்கு முன்னர் அவர்கள் பெற்றிருந்தது என்ன? தொழில் வளர்ச்சி முற்றிலும் இல்லை; அதனால் தேசியத் தொழிலாளி வகுப்பும் இல்லை நிலக் கிழார் ஆட்சியும், முழுமையான கல்லாமையும் இருந்தன. பல மக்கள் தமது மொழியின் எழுத்து வடிவத்தைக் கூடப் பெற்றிருக்கவில்லை.

இன்றோ நடு ஆசியக் குடியரசுகள் தமது மிகு வளச்சி பெற்ற தொழில் துறைக்கும், அனைத்து மக்கள் கல்வியறிவுக்கும், பள்ளிப் பிள்ளைகள் மாணவர்கள் ஆகியோரின் பெருந்தொகைக்கும், தேசிய விஞ்ஞானப் பேரவைக்கும், செழித்தோங்கும் தேசியக் கலை இலக்கியத்துக்கம் பேர்பெற்றவையாக விளங்குகின்றன.

பிற்பட்ட மக்களால் தனித்து வாழவே முடியாது எனக் கூறும் தனிவல்லாதிக்க "ஆய்வுரை"யைத் பொதுவுடைமையைக் கட்டியமைக்கும் மக்களது வாழ்க்கை முழுமையாக அழித்தொழித்து விடுகிறது

ஏனைய தேயங்களின் மீது ஆதிக்கம் செலுத்தும் தலைவிதியை எந்தவொரு நாடும் வரலாற்று முறையில் பெற்றிருக்கவில்லை என்பதற்கோர் கண் கண்ட சான்றினை பொதுவுடைமை வழங்குகின்றது

ஆனால், முதலாளியக் கால கட்டத்தை இன்னும் கடக்காத நாட்டு மக்களுக்கு முதலாளியமற்ற வளர்ச்சிப் பாதை வழி திறந்திருக்கிறதா?

மங்கோலிய மக்கள் குடியரசின் பட்டறிவும் சோவியத்து நடு ஆசிய மக்களின் நுகர்வறிவும் அந்த வழி திறந்திருப்பது நடக்கக் கூடியதே என்பதைக் காட்கின்றன.

புதிய வளர்ச்சிப் பாதையை மேற்கொண்டுள்ள மக்களுக்கு உலக சமன்மை அமைப்பு கணிசமாக உதவி வருகிறது; அந்த மக்கள் தெள்ளத் தெளிவான குறிக்கோளைப் பெற்றிருந்தால், ஒரு சிறந்த எதிர் காலத்தை உருவாக்க முழுமூச்சோடு பாடுபட அணியமாக இருந்தால், அவர்கள் பொதுவுடைமையை நோக்கிச் செல்லும் தமது பாதையில் முதலாளியக் கால கட்டத்தை எய்தாமலே அதனைத் தாண்டி முன்னேறுவதற்கு உலக சமன்மை அமைப்பு அவர்களுக்கு உதவுகின்றது.

பெருவலிமை படைத்த சமன்மைக் கூட்டுக் குடும்பம் விடுதலைக்காகப் போராடும் அனைத்து மக்களின் நலன்களையும் பாதுகாத்து நிற்கிறது;அந்த குறிக்கோள் உறுதியாய் எய்தப்படும் என்பதற்கோர் உண்மையான நம்பிக்கையாகத் திகழ்கிறது.

# பொதுவுடைமையும் மக்களின் பூரிப்பும்

மாந்த மதிப்பார்ந்த மேன்மைக்கான முன் தேவை என்ன? மாந்தனுக்கு மகிழ்வின்பத்தைக் கொண்டு வருவது எது?

எந்த ஒருவரும் தனது படைப்பாற்றல் திறமைகளை பெருக்கம் செய்வதினின்றும் தடுக்கப் பட்டிருப் பாரேயாயின், அந்த ஆளால் பூரிப்பாக இருக்க முடியாது. ஒருவரது அகப்பண்பை பெருக்கம் செய்து கொள்வதற் கான வாய்ப்பு சமுதாய அமைப்பின் தன்மையையே சார்ந்திருக்கிறது. இந்த சிக்கல் சமுதாயத்தின் ஒவ்வோர் உறுப்பினரையும் பொறுத்த சிக்கலாயின், பின்னர் மாந்த வளர்ச்சி சிக்கலானது, மாந்தனின் மதிப்பாண்மையையும் மகிழ்ச்சியையும் பற்றிய சிக்கலானது, மாந்த அகப் பண்புக்கொரு முட்டுக்கட்டையாக இருக்கும் சமுதாயக் காரணங்களை ஒழித்துக் கட்டும் சிக்கலாகி விடுகிறது.

முதலாளிய வகுப்பு அனைவருக்கும் உரிமையும், சமன்மையும், மகிழ்ச்சியும் வழங்குவதாக முழக்கமிட்டுக் கொண்டுதான் அதிகாரத்துக்கு வந்து சேர்ந்தது. இந்த வாக்குறுதிகளால் பயன் பெற்றவர்களோ வெகு சிலர்தாம் இன்றோ அகப்பண்பை அழித்தொழிப்பதைப்பற்றி முதன் முதல் வாயைத் திறப்பவர்கள் முதலாளியக் கோட்பாட்டாளர்கள்தான்.

முதலாளியத்தின் வளர்ச்சிதான் அகப் பண்பை அடக்கி ஒடுக்கும் அதன் ஈவிரக்கமற்ற அடக்கு முறையைக் கொண்டு வந்த தெனினும், அவர்கள் இந்த நிகழ்ச்சிப் போக்கை முதலாளியத்தின் இயல்போடு பிணைப்ப தில்லை. மேற்கு செருமனி சமூகவியல் அறிஞரான பிரீட்மனின் கருத்துப்படி, மாந்தன் பால்லோவின் ஆய்வுகளில் இடம் பெற்ற நாய்க்கு இணையானவன் - அதாவது அந்த நாய் உமிழ் நீரை வெளிக் கொணரவும், உணர்ச்சி மிகுதி அல்லது அமைதி கொண்ட நிலையை எய்தவும் வேண்டுமெனில் அது ஓர் அழற்சிப் பொருளால் தூண்டிவிடப் பட்டது இத்தாலியத் தத்துவ வாளர் சக்கா முதலாளிய விடுதலைக்கும் பிராமித்தியூசைப் பிணைத்திருந்த விலங்குகளும் ஓர் ஒப்புவமை காண்கிறார்.

பொருள்கள் மாந்தனை வயப்படுத்தியுள்ளன ஒரு வண்டியோட்டி "திசை திருப்பும் சகடத்தின் செய"லாகவும் வான்கோழியைத் தின்னும் மாந்தன் "வான் கோழியின் செய"லாகவும் மாறி விடுவதாக மேற்கு செருமன் சமூகவியல் அறிஞர் பிரேயர் கூறுகிறார். உண்மையில் ஒளிவு மறைவற்ற வாய்மொழி, இது! இதனைச் சமுதாய வளர்ச்சிபற்றிய அறிவியல்க் கொள்கை வெகு காலத்துக்கு முன்பே நிறுவிக் காட்டி விட்டது என்பதுதான் இதிலுள்ள ஒரே செய்தி, அகப்பண்பை அடிமைப் படுத்தியதானது சமுதாய உறவுகளால் ஏற்பட்டதன்று, மாறாக முதலாளிய சமுதாய உறவுகளின் தவிர்க்கொணாத விளைவாகத்தான் நேர்ந்தது என்பதைப் பொருள் முதல் வாத வரலாற்று விளக்கம் விளக்கியுள்ளது என்பதுதான் இதில் உள்ள ஒரே வேறுபாடு.

ஆனால் முதலாளியத்தின் கீழ் "பொருள்கள் மனிதனை ஆள்கின்றன" என்ற உண்மை முதன்மையன்று. முதன்மையானது என்னவெனில் முதலாளியம் உழைப்பையும் திறமையையும் அழகையும் அங்காடிச்

சரக்காக மாற்றுகிறது, மனிதனையே மதிப்புள்ள அல்லது மதிப்பற்ற பொருளாகவும் மாற்றி விடுகிறது என்பதுதான்.

முதலாளிய சமுதாயம் கோடான கோடி மக்களின் அதாவது உலக மக்கள் தொகையிற் பெரும் பான்மையோரின் மகிழ்ச்சிக்கான நிலைமைகளை வழங்கவில்லை. எனவே தனி ஒருவர் பொதுவாகச் சமுதாயம் முழுவதற்கும் பகைவனானவன் என்று அடித்துக் கூறுவதைத் தவிர முதலாளிய கோட்பாட்டாளர்களுக்கு வேறு வழியில்லை. மாந்த மதிப்பாண்மையும் மகிழ்ச்சியும் மாந்தனின் சமுதாய நடவடிக்கைகளோடு . எந்தத் தொடர்பு அற்ற தன்மானத்தின் அடிப்படையில் அமைந்திருந்ததாகக் கூறப்பட்டது. எனவே மாந்தன் மகிழ்ச்சியாக இருக்கவேண்டுமெனில் அவன் சமுதாயத்தில் தான் ஓர் உறுப்பினன் என்பதை மறந்துவிட வேண்டும் என அவர்கள் கூறுகின்றனர். ஆனால் மாந்தன் தன்னைத் தானே சமுதாயத்திலிருந்து பிரித்துக் கொள்ள முடியாத காரணத்தால் அவனது மதிப்பாண்மை, உரிமை, மகிழ்ச்சி ஆகியவெல்லாம் வெறுங் கற்பனையைத் தவிர வேறாக இல்லை.

மாந்தன் மகிழ்ச்சியோடு இருக்க வேண்டு மெனில் அவன் தனது திறமைகளை பெருக்கம் செய்து கொள்ளும் உரிமையைப் பெற்றிருக்க வேண்டும் என்பது உண்மை. எனினும் நடைமுறை வாழ்வில் மாந்தனது திறமைகள் அவனது நடவடிக்கைகளின் வளர்ச்சிப் போக்கில் மட்டுமே பெருக்கமடைகின்றன; அந்த நட்வடிக்கைகளும் திட்டவட்டமான சமுதாய விளைவுகளைக் கொண்டவை யேயாகும். மாந்தனது அகப் பண்பின் வளமும் மகிழ்ச்சியும் அவனது சமுதாய நடவடிக்கையோடு நேரடியாகப் பிணைக்கப்பட்டுள்ளன. தனது நடவடிக்கைகள் மக்களுக்கு தேவையாக இருக்கும் பொழுதே, சமுதாயத்துக்குத் தேவைப்படும் பொழுதே, மாந்தன் மகிழ்ச்சி பெறுகிறான்.

முழுநிறை மகிழ்ச்சி என்பது குடும்பத்தையும் நல்ல வாழ்க்கை நிலைமைகளையும் பெற்று, நட்புறவில் மகிழ்ந்து வாழ்வதுதான் என்பது உறுதி. தனக்குரிய நல்வாழ்வைப் பற்றிய அக்கறை முற்றிலும் இயல்பானதே, அதனைப் புறக்கணித்து விடக்கூடாது என்று உரோமய்ன் ரோலந்த் கூறியுள்ளார். ஆனால் ஒருவர் இதில் மட்டுமே முழு மனத்தையும் செலுத்தி, சமுதாய நல்வாழ்வையும் மாந்த சமுதாயம் முழுவதையும் பாதுகாப்பதை புறக்கணிப்பாரானால் அவரது வாழ்க்கை மானக் கேடாகவும் வெறுமையாகவும் பயனற்றதாகவும் போய்விடுகிறது.

சமுதாயத்தின் ஒவ்வோர் உறுப்பினரின் படைப் பாற்றல்களின் வளர்ச்சியின்றேல், உயிர்மச் செல்வம், தூய நல்லொழுக்கம், முழுமையான உடல் நலம் ஆகியவற்றின் இசைவான வாழ்க்கையின்றேல், பொதுவுடைமையை எண்ணிப் பார்க்கக்கூட முடியாது. பொதுவுடைமை அவரவர் திறமைக்கேற்ப உழைக்க வேண்டும் எனக் கூறுகிறது. மறு புறத்தில் உழைக்கும் உரிமையை உறுதி செய்வது, வறுமையைப் பொக்குவது, போர்களுக்கு முற்றுப் புள்ளி வைப்பது, அனைத்து மக்களுக்கும் சமன்மையை, (சமமான சொத்துரிமைகளை அதனை அடுத்து ஒவ்வொருவர் தேவைகளையும் முழுமையாய் நிறைவு செய்வதற்கான சம வாய்ப்புகளை) உறுதி செய்வது ஆகியவற்றின் மூலம், மனிதனின் அகப்பண்பின் வளர்ச்சிக்கும் சகல மக்களின் முழுநிறைவான மகிழ்ச்சிக்கும் தேவையான அனைத்து நிலைமைகளையும் பொதுவுடைமை உருவாக்குகின்றது. (பல்வேறு மக்களிடம் பல்வேறு வகையாய்த் தென்படும்) ஒவ்வொரு மனிதரது திறமைகளை வளர்ப்பதும் பொதுவுடைமை க்குத் தேவைப்படுவதால் அது இந்தத் திறமைகள் அனைத்தின் அனைத்துநிலை வளர்ச்சிக்கான நிலைமைகளை உருவாக்குகின்ற காரணத்தால்,

பொதுவுடைமை அகப் பண்பை ஒரே மட்டமாக ஆக்குவதையும் விலக்கிவிடுகிறது. கம்யூனிசம் மனிதனை மாந்தப் பண்புறச் செய்கிறது.

இவை அனைத்தும் தாமாவே வந்துவிடாது என்பது உண்மை. ஆனால் பொதுவுடைமையின் தொடங்கக் கட்டத்திலும் கூட, சமன்மை ஊழியத்திலும் கூட, அதாவது உழைப்பனது உயிர் வாழ்க்கைக்கான கருவியாகவே இன்னும் இருந்து வருகின்ற பொழுதே, பயனீட்டுத் துறையில் இன்னும் சமத்துவத்தைப் முழு நிறைவாகக் கொண்டு வர இயலாதிருக்கும் பொழுதே, நகர்ப் புறத்துக்கம் சிற்றூர்ப் புறத்துக்கும் உள்ள முதன்மை வேற்றுமைகளும், உடல் உழைப்புக்கும் மூளை உழைப்புக்கும் உள்ள சிறப்பு வேற்றுமைகளும் இன்னும் இருந்து வரும் கால சுட்டத்திலேயே, பொதுவுடைமை களும் அனைத்து மக்களுக்கும் மகிழ்வின்ப வாழ்வுக்கான முதல் அடிப்படையை வழங்குகின்றது. ஆதாவது தமது உழைப்பும் வாழ்க்கையும் சமுதாயத்துக்குத் தேவைப்படுகின்றன என்பதை ஒருவர் உணர்ந்து மகிழும் பூரிப்பை வழங்குகின்றது. தாம் ஒரு தேவையான நபர் என்று ஒருவர் உணர்வதே அவருக்கு மிகப் பெரும் மகிழ்ச்சியையும் முழு நிறை பேரின்பத்தையும் அளிக்கிறது.

யார்? எவர்? என்றும் கையேடுகள் பல முதலாளிய நாடுகளில் புகழ்பெற்றவை. அவை தன்னல முதலாளிகள், பாங்கி டைரக்டர்கள், ராஜ தந்திரிகள், செல்வக் குடும்பத்தில் பிறந்த பெருமான்கள் ஆகியோருக்கு நல்ல விளம்பரமாகும்.

சமன்மை நாடுகளில் ஒருவரின் சமூக நிலைப்பாடு அவரது செல்வத்தையோ, மரபையோ, தொழிலையோ. கொண்டு தீர்மானிக்கப்படுவதில்லை. அவர் ஒரு தொழிலாளியாயினும், உழவராயினும், மருத்துவ ராயினும்,எழுத்தாளராயினும், விண்வெளி வீரராயினும்,

அறிவியலாளராயினும், வேளாண் அறிவியலாள ராயினும், கலைஞராயினும் அல்லது அரசியல் அறிஞராயினும் அவரது நடவடிக்கைகளின் சமுதாய விளைவுகளைக் கொண்டே அவர் மதிக்கப்படுகிறார்.

பொதுவுடைமை ஒவ்வொரு மாந்தனையும், மானிடன் என்ற சொல்லுக்கே முற்றிலும் தகுதியாக்குகின்றது.